கலைமகள்

மாதப் பத்திரிகை

பிரமாதி ஹு ~~புரட்டாசி~~ ஆவணி மீ

கூரு

*

முக்கிய விஷயங்கள்

வி. கிருஷ்ணசாமி ஐயர்
(டாக்டர் உ. வே. சாமிநாதையர்)

சங்ககாலத் தமிழர் வாழ்க்கை
(டி. ஏ. இராமலிங்க செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஸி.)

டான்லிக்
(ராவ்பகதூர் ஸி. எம். இராமசந்திரம் செட்டியார், பி.ஏ., பி.எல்.)

லீலா[illegible]தி
(எஸ். கே[illegible]ஸ்வாமி)

எப்பொழு[illegible] வருவான்?
(கு[illegible]ன்)

வருஷ சந்தா ரூ 4—0—0 * தனிப்பிரதி அணா ஆறு

1530
August-139
OFFICE OF THE REGISTRAR OF BOOKS 25 SEP 1939 MADRAS
93 Aug 39
1530 June 39
JL
அ21, N17KN.
N39.15.6.
213404

கலைமகள்

பழைய தொகுதிகள்

——)o(——

கலைமகள் தொகுதிகள் அறிவியற்களஞ்சியமாகத் திகழ்பவை. எல்லாப் புத்தகசாலைகளிலும் இருக்க வேண்டியவை. அழகான பைண்டு, கில்ட் எழுத்துக்களுடன் கூடியவை.

1-ம்	தொகுதி	712	பக்கங்கள்
2-ம்	தொகுதி	704	பக்கங்கள்
3-ம்	தொகுதி	664	பக்கங்கள்
4-ம்	தொகுதி	680	பக்கங்கள்
5-ம்	தொகுதி	690	பக்கங்கள்
6-ம்	தொகுதி	634	பக்கங்கள்
7-ம்	தொகுதி	668	பக்கங்கள்
8-ம்	தொகுதி	652	பக்கங்கள்

தனித்தனியே வாங்குபவர்களுக்கு ஒவ்வொன்றும்
விலை ரூ. 2—0—0

எட்டுத் தொகுதிகளும் ஒருங்கே வாங்குபவர்களுக்கு
விலை ரூ. 15—0—0
தபாற் கூலி வேறு

மேல், 11, 15-ஆம் தொகுதிகளே உள்ளன
விலை ரூ. [illegible]—12—0
தபாற் கூலி வேறு

மானேஜர், கலைமகள், மயிலாப்பூர்.

ரூ. 70 க்கு

புதிய

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

போர்டபின் கிராமபோன் மாடல் நெ. 94!

"HIS MASTER'S VOICE"

மாடல் நெ. 94.

பிரௌன் ரூ. 70;

பாலிஷ்ட் ரூ. 80.

முக்கிய அம்சங்கள்

- இரண்டு ரிகார்டுகளின் இரு பக்கங்களைப் பாடுவிக்கும் டபிள் ஸ்பிரிங் மோட்டார்.
- நெ. 21 ஸவுண்ட் பாக்ஸ்.
- சக்ஜமாதுர்யத்துடன் ரிகார்டு சங்கீதத்தைப் பிரதிபலித்துக் கேட்க வேண்டுமானல், "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" கிராமபோனிலேயே பாடுவித்துக் கேளுங்கள்.

"எச். எம். வி." வியாபாரியிடம் இதை இன்றே பார்த்து வாங்குங்கள்.

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

ஜுபிடர் ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

தலைமைக் காரியாலயம்: பம்பாய்

1919-ல் ஸ்தாபிக்கப்பட்டது

- 'ஜுபிடர் ஜெனரல்' நெருப்பு, கப்பல், மோட்டார், விபத்து, தொழிலாளர் காம்பென்ஸேஷன், ஆயுள் முதலான இன்ஷ்யூரன்ஸ் வியாபாரங்களை நடத்துகிறது.

- 'ஜுபிடர் ஜெனரல்' உலகமுழுவதும் கிளைக் காரியாலயங்களும் ஏஜென்ஸிகளும் ஸ்தாபித்து வாரிசுதார்களின் பிராதைக் கவனித்துத் தீர்த்துவைக்கும் ஏஜெண்டுகளை எங்கும் நியமித்திருக்கிறது.

- 'ஜுபிடர் ஜெனரல்' இந்தியாவிலுள்ள முக்கியமான எல்லாவிடங்களிலும் கிளைக்காரியாலயங்களை ஏற்படுத்தியிருக்கிறது. அதன் மதராஸ் கிளைக்காரியாலயம் 1939-ஆம் ஸு மே மீ 10-ஆம் தேதி திறக்கப்பட்டது.

- 'ஜுபிடர் ஜெனரல்' இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் தலைமை ஏஜெண்டுகளாகவும், ஆர்கனைஸர்களாகவும், ஆயுள் ஆர்கனைஸேஷன் இன்ஸ்பெக்டர்களாகவும் விரும்புவோர் கம்பெனியாருக்கு எழுதிக்கேட்கலாம். அவ்விதம் எழுதிக்கேட்போர் அனுபவஸ்தராகவும், பலவிடங்களிலும் பழக்கமுடையவராகவும் இருக்கவேண்டும்.

நிர்வகிக்கும் ஏஜெண்டுகள்:

மேஸ்ஸர்ஸ் லால்ஜி நாரண்ஜீ அண்டு கோ.

காரியதரிசி:	*கிளைக்காரியாலய மானேஜர்:*
கே. எஸ். ராமசந்திரையர்.	என். வேங்கடராமையர்.

காரியாலயம்:

நெ. 99, அரண்மனைக்காரத் தெரு, சென்னை.



சந்திரன்

(407-ஆம் பக்கம் பார்க்க)

டான்ஸிலிஸ்

Mr. ராம்ராய் சாஹிப், டிப்டிகலெக்டர், மீரட், ஐக்கிய மாகாணம், எழுதுகிறார் :—'தொண்டைச் சதை வளர்ச்சியால் மிகவும் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்த என் புத்திரன் உங்கள் "டான்ஸில்க்யூரை" இருமுறை உபயோகித்ததில் பூர்ண குணமடைந்தான் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.'

Kent Chemicals (Regd.)

117, Mowbray's Road, Royapettah, MADRAS.

OUR HALF-TONE
AND
LINE BLOCKS

Have Never failed to Give Entire Satisfaction. You Will Never Regret Placing Your Order With Us

Graphotone Co.,

2/14, Pitchu Pillai Street, Mylapore, MADRAS.

பாரத்வாஜி முகவைக் கண்ண முருகனார் இயற்றியவை

ஸ்ரீ ரமண சந்நிதி முறை

திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ரமணபகவான் விஷயமாக இயற்றப்பெற்றது. திருவாசகத்தைப்போன்ற அமைப்பையும் சுவைகளையும் உடையது. ஸ்ரீ மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர், ஸ்ரீ ராவ்ஸாஹேப் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள், ஸ்ரீ சோமசுந்தர பாரதியார், ஸ்ரீ ராவ்ஸாஹேப் மு. இராகவையங்கார் முதலிய பேரறிஞர்களாற் பலபடப் பாராட்டப்பெற்ற சிறந்த நூல்.

இரண்டாம் பதிப்பு

விலை ரூ. 2—8—0

பரமார்த்த தீபம் என்னும்

குருவாசகக் கோவை

விலை ரூ. 1.

ஸ்ரீ ரமண தேவ மாலை

விலை அணா 4.

தபாற் கூலி வேறு

:: மானேஜர், கலைமகள், மயிலாப்பூர், சென்னை ::

கலைமகள்

தொகுதி கசு] பிரமாதி ஹு [பகுதி கூஉ

ஆவணி மீ

ஆகஸ்டு, 1939

பொருளடக்கம்

1. வி. கிருஷ்ணசாமி ஐயர் — மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் ... 105
2. இலங்கை இந்தியா வரலாறுகள்—நா. நாராயணன், பி.ஏ., பி.எல்., எல்.டி. ... 113
3. மனத்தைப் பண்படுத்தல்—கே. சந்திரசேகர ஐயர், எம்.ஏ., பி.எல். ... 118
4. இரசாயனமும் சமூகவாழ்வும்—(படத்துடன்) கே. ஙீ. வீரராகவையர், எம்.ஏ., எல்.டி. ... 125
5. எங்கள் பாட்டி—'ஜோதி' ... 135
6. அடிவானத்துக்கு அப்பால்—கமலாகாந்த வர்மா ('கலைப்பித்தன்' மொழிபெயர்ப்பு) ... 137
7. 'காணமற் போன கூஜா'—'அநுஷம்' ... 151
8. பிரசாதம்—ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ. ... 156
9. ஜடை பில்லை—'ராகோ' ... 161
10. சங்கருக்கும் சந்து—வே. ரா. சுந்தரராமன், எம்.ஏ. 164
11. பைரவி (படத்துடன்)—சரத் சந்திர சட்டர்ஜி (த. நா. குமாரஸ்வாமி மொழிபெயர்ப்பு) ... 169
12. அவந்தி சுந்தரி—ஜி. ஹரிஹர சாஸ்திரி ... 193
13. மழை செய்யும் கேடுதி—கே. வரதாசாரி ... 196
14. சட்டையும் முட்டையும் (படங்களுடன்)—த. உலகநாதன் ... 200
15. புகையின் எடை என்ன? (படங்களுடன்)— 'முத்தண்ணு' ... 203
16. மதிப்புரை ... 207
17. (அநுபந்தம்) புகையிலை விடு தூது (முகவுரை)—மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் i—viii

முகப்புப் படம்

ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர், ஸி.ஐ.இ.

விஸ்வா & கோ

ஆர்டிஸ்ட்ஸ், பிளாக் அண்ட் ரப்பர் ஸ்டாம்பு மேக்கர்ஸ்.

50, வாலாஜா ரோட், மவுண்ட் ரோட், மதராஸ்.

கலைமகள் வெளியீடு — ௯.

உ

கணபதி துணை

திருமலையாண்டவர் குறவஞ்சி

(குறிப்புரையுடன்)

பதிப்பாசிரியர்:

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

சென்னை லா ஜர்னல் அச்சுக்கூடம், மயிலாப்பூர்

வெகுதான்ய ௵ புரட்டாசி ௴

1938

[*All Rights Reserved*]

கலைமகள்

தொகுதி கச] வெகுதான்ய ௵ [பகுதி அக

புரட்டாசி ௴

ஸெப்டம்பர், 1938

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 28 OCT 1938 MADRAS

பொருளடக்கம்

1. மணி ஐயர்—மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் .. 209
2. கம்பனும் காளிதாஸனும்—பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ., பி. எல். 214
3. வேதச் செய்யுள்—வித்வான் நா. கனகராஜையர் .. 216
4. கலைமகளுக்கு— ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் .. 220
5. வாழ்க்கையும் பிரகிருதிசாஸ்திரமும் (படத்துடன்)—எஸ். எஸ். ராமசாமி, பி. எஸ்ஸி., பி. எல். .. 221
6. பொருள் நிலைகள் (படத்துடன்)-ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் .. 228
7. தஞ்சை இராஜராஜேசுவரம் (படங்களுடன்)—ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி.ஏ., பி.எல். 234
8. மாயா விநோதினி—ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் (ஸ்ரீமதி தஞ்சம் மொழிபெயர்ப்பு) .. 245
9. மழை இருட்டு—ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ. .. 269
10. கிர்ரமவாசம்—'ஸ்ரீ' .. 274
11. "என்ன விநோதம்!"—'மாரார்' .. 278
12. கக்ஷி—'வனபுஷ்பம்' .. 286
13. என் குழந்தை—கே. வி. வீரராகவையர், எம். ஏ., எல். டி. ... 290
14. கரடியும் குயிலும் (படங்களுடன்)—ஏ. டி. கே.. 293
15. வான விளக்கு—பி. ஆர். சிதம்பரையர், பி. ஏ., எப். ஆர். ஏ. எஸ்.,—ஏ. இராமகிருஷ்ண பிள்ளை, பி.ஏ. .. 298
16. மதிப்புரை .. 302
17. குறிப்பும் திரட்டும் .. 304
18. (அநுபந்தம்) திருமலை யாண்டவர் குறவஞ்சி—மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் ... i—iv

முகப்புப் படம்

மணி ஐயரவர்கள்

ஏஜெண்டுகள் தேவை

மானேஜர், கலைமகள்—மயிலாப்பூர்

இந்தியாவினதையே ஆதரியுங்கள்

இண்டஸ்டிரியல் & புருடென்ஷியல்

அஷ்ஷியூரென்ஸ்

கம்பெனியை ஆதரியுங்கள்.

தலைமை ஆபீஸ் — பம்பாய்

முழுமையும் இந்திய மயம்

பொறுப்புத் தொகைகளைத் துரிதத்துடன் பட்டுவாடா செய்வதில் பெயர்பெற்றது.

திறமையான இந்தியர்கள் மானேஜ்மெண்டிற் குட்பட்டது.

நிரந்தர அசக்தம், விஸ்தரிக்கப்பட்ட இன்ஷ்யூரென்ஸ் முதலிய நவீன செளகர்யங்கள்.

லைப் இன்ஷ்யூரென்ஸ் முதல் ரூ. 5 லக்ஷம்.

சென்னை இராஜதானி லோகல் மானேஜர்கள்:

சதுர்புஜதாஸ் நாராயணதாஸ் கம்பெனி லிமிடெட்,

தபால் பெட்டி 73, மதராஸ்.

ஜுபிடர் ஜெனரல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி (லிமிடெட்)

யில் இன்ஷ்யூர் செய்துகொள்ளுங்கள்.

ஆயுள், மோட்டார், நெருப்பு, மோட்டார்-சைக்கிள், கப்பல், பஸ்ஸுகள், டாக்ஸிகள் இந்த இன்ஷ்யூரன்ஸ்களை நடத்துகிறது.

ஸமுத்திரம் ரயில்வே

டிரான்ஸிட் தபால் டிரான்ஸிட்

செலுத்தப்பட்ட மூலதனம்:

ஒன்றரைக் கோடி ரூபாய்

லோகல் மானேஜர்கள்:

நாராயண்தாஸ் கிர்தர்தாஸ், மதராஸ்.

எல்லா இடங்களிலும் ஏஜெண்டுகள் தேவை.

மணி ஐயரவர்கள்

213420.

உ

கணபதி துணை

முகவுரை

குறவஞ்சியென்பது பிற்காலத்தில் எழுந்த பிரபந்தவகைகளில் ஒன்று. இசை, நாடகமென்பவற்றின் தொடர்பும் இவ்வகைப் பிரபந்தங்களில் இருக்கும். 'குறவஞ்சி நாடகம்' என்றே இதைக் கூறுவதும் உண்டு. ஒரு குறத்தி குறிகூறுவதும் குறவனுடன் பேசி அளவளாவுவதுமாகிய செய்திகள் இதில் தலைமை பெறுதலின் 'குறவஞ்சி' என்னும் பெயர் உண்டாயிற்றென்று தோற்றுகிறது. குறவஞ்சி - குறமகள்.

இப்பொழுதுள்ள குறவஞ்சிகளில் மிகவும் சிறந்தது திருக்குற்றாலக்குறவஞ்சியாகும். அதனைப் பின்பற்றிப் பல குறவஞ்சிகள் தமிழில் இயற்றப்பட்டுள்ளன. ஸ்தலமூர்த்திகள் சம்பந்தமாகவும், அரசர்கள் சம்பந்தமாகவும், ஏனையோர் சம்பந்தமாகவும் குறவஞ்சிகள் இருக்கின்றன.*

திருமலையாண்டவர் குறவஞ்சியென்னும் இது, திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள பண்புளிப்பட்டணத்தில் திருமலையென்னும் குன்றில் எழுந்தருளியிருக்கும் முருகக்கடவுள் விஷயமாக இயற்றப்பெற்றது. இதனை இயற்றிய ஆசிரியர்பெயர் தெரியவில்லை. இதில் சிந்துகளும் விருத்தம் முதலிய செய்யுட்களும் அமைந்துள்ளன.

இதிலுள்ள பாட்டுக்களில் வழக்குச் சொற்கள் பல பயின்று வருதலைக் காணலாம். இவ்வாசிரியர் குற்றாலத்திற்குக் குறவஞ்சி இருப்பதை நினைந்து அதனைச் சார்ந்த திருமலைக்கும் குறவஞ்சி பாடினரென்று தோற்றுகின்றது. இது முருகக்கடவுள் பாலுள்ள பக்தியினால் உந்தப்பெற்றுச் செய்ததுபோலும்! இந்நூலிற் சில இடங்களில் சிலவகையான குறைகள் உள்ளன. குறவஞ்சியைப் போன்ற நூல்களில் சேரிவழக்கு அமைவது இயல்பு. அதனை இதில் மிகுதியாகக் காணலாம்.

---

* குறவஞ்சியைப்பற்றிய இலக்கணமும் பிறவும் என்னாற் பதிப்பிக்கப்பெற்ற 'ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள்' என்னும் புஸ்தகத்திலுள்ள 'சரபேந்திரபூபால குறவஞ்சி நாடகம்' என்பதன் நூன்முகத்தில் விரிவாகக் காணப்படும்.

இதன் எட்டுப் பிரதியொன்று பலவருடங்களுக்கு முன் மேலகரம் திரிகூடராசப்பக்கவிராயர் வீட்டிலிருந்து கிடைத்தது. அதில் நூல்முற்றும் இல்லை. வேறுபிரதி தேடியும் கிடைக்கவில்லை. சிங்கனும் சிங்கியும் உரையாடும் 90-ஆம் பாட்டின் முற்பகுதிவரையில் இந்நூற்பகுதிகள் உள்ளன. 90-ஆம் பாட்டின் இறுதிப்பகுதியும் அதற்குமேல் சிங்கனும் சிங்கியும் ஒருங்கே திருமலையாண்டவரை வாழ்த்துவதாக உள்ள பகுதியும் கிடைக்கவில்லை. அப்பகுதியில் ஒன்று அல்லது இரண்டு பாட்டுக்கள் இருக்கலாமென்று தோற்றுகின்றது.

இதனைத் தமது பத்திரிகையில் வெளியிடுவித்த "கலைமகள்" ஆசிரியர் ஸ்ரீமான் நாராயணசாமி ஐயரவர்களுக்கு நன்றி செலுத்துகின்றேன்.

"தியாகராஜ விலாஸம்"
திருவேட்டீசுவரன்பேட்டை,
15—9—'38.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்

23420
N38.14.3

மணி ஐயர்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

1

முதற் காட்சி

சென்ற ஈசுவர வருஷம் (1877) மதுரையில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரருக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தினர் ஐம்பது லக்ஷ ரூபாய்க்கு மேற் செலவிட்டுத் திருப்பணி செய்வித்தார்கள். கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மதுரைக்கு அக்காலத்தில் வந்த ஜனக்கூட்டம் கணக்கிலடங்காது. காசி முதல் கன்னியாகுமரி வரையிலுள்ள இடங்களிலிருந்து லக்ஷக்கணக்கான வர்கள் வந்திருந்தனர். திருவாவடுதுறை யாதீனத்தின் தலைவராக இருந்த மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் தன வைசியர்களுடைய அழைப்பிற்கு இணங்கித் தம்முடைய பரிவாரங்களுடன் வந்திருந்தனர். அவர்களோடு வந்தவர்கள் 500 பேர்களுக்கு மேல் இருக்கும். திருவாவடுதுறை யாதீனத்தில் அக்காலத்தில் சின்னப்பட்டத்திலிருந்த ஸ்ரீ நமச்சிவாய தேசிகரும் கல்லிடைக் குறிச்சியிலிருந்து வந்திருந்தார். அக்காலத்தில் நான் சுப்பிரமணிய தேசிகரிடம் பாடங் கேட்டுக்கொண்டும் திருவாவடுதுறை மடத்தில் உள்ளவர்களுக்குத் தமிழ்ப் பாடஞ் சொல்லிக் கொண்டும் இருந்தேன். ஆதலின் நானும் தேசிகருடன் மதுரை சென்றிருந்தேன்.

தேவஸ்தான ஸபையைச் சேர்ந்த ஸ்ரீமான் வேங்கடசாமி நாயுடென்பவர் வையையாற்றங்கரையிலுள்ள தம்முடைய பங்களாவில் தேசிகருக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் இடம் அமைத்

JC
N38.14.3

துக் கொடுத்திருந்தார். பங்களாவைச் சுற்றி நெடுந்தூரம் பந்தல் போட்டிருந்தார். பங்களாவின் மேல்மெத்தையிலும் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. ஒரு பெரிய சைவாதீனத்துத் தலைவரென்பதற்கு ஏற்றபடி சுப்பிரமணிய தேசிகருக்குச் சிறிதும் குறைவின்றி உபசாரங்கள் நடைபெற்றுவந்தன.

சைவ மடத்தின் தலைமைப் பதவியினால் இயல்பாகவே சுப்பிரமணிய தேசிகரிடம் யாவருக்கும் மதிப்பு இருந்தது; அதனோடு அவருடைய குணங்கள் அம்மதிப்பைப் பன்மடங்கு உயர்த்தி விட்டன. யாரிடமும் சுலபமாகப் பழகும் குணமும், அன்பும், தர்மசிந்தனையும், தமிழ் வடமொழி ஸங்கீத மென்பவற்றிலுள்ள பேரன்பும், பயிற்சியும், வித்துவான்களை ஆதரிக்கும் வண்மையும் ஆகிய இயல்புகள் அவரிடத்திற் குடிகொண்டிருந்தன. ஆதலின் தமிழ்நாட்டில் அவரிடத்திற் பலர் ஈடுபட்டனர். திருவாவடுதுறை வந்து அவரைப் பார்த்து இன்புற்றோர் பலர். பாராதவர்கள் பலர் அவரைப் பார்க்கவேண்டுமென்னும் ஆவல்மிகுதியினால் அதற்குரிய சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

தேசிகர் மதுரையில் தங்கிய காலத்தில் தேனை ஈ மொய்ப்பது போல் அவரைப் பலர் வந்து மொய்த்துக்கொண்டார்கள். சேற்றூர், சிவகிரி முதலிய இடங்களிலுள்ள ஜமீன்தார்களும், வேறு பல பிரபுக்களும், உத்தியோகஸ்தர்களும் வந்து வந்து பேசி மகிழ்ந்து சென்றார்கள். மகாவைத்தியநாதையர் முதலிய சங்கீத வித்துவான்களும் அப்பா தீக்ஷிதர் முதலிய வடமொழி வித்துவான்களும் தமிழ் வித்துவான்களும் எப்பொழுதும் உடனிருந்தே வந்தார்கள்.

நகரத்தில் எள் போட்டால் விழ இடமின்றி ஜனங்கள் நிறைந்திருந்தனர். அங்கங்கே சமாராதனைகளும், மகேசுவர பூஜைகளும் செவ்வையாக நடைபெற்றன. கும்பாபிஷேக சமயத்தில் கோயிலுக்குள்ளே செல்ல யாவருக்கும் இடம் கிடைப்பது அரிதாயிற்று. ஆதலின் தக்கவர்களுக்குமாத்திரம் சீட்டு அளித்து உள்ளே விட்டார்கள். சேலம் முதலிய இடங்களிலிருந்து வந்த மிட்டாதார்களும் வேறுபலரும் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடன் சொல்லித் தங்கள் தங்களுக்குரிய அனுமதிச் சீட்டுகளைப் பெற்றுக்கொண்டனர்.

கும்பாபிஷேகத்தன்று காலையில் சுப்பிரமணிய தேசிகர் பூஜையை முடித்துக்கொண்டு சின்னப் பண்டாரஸந்நிதியுடன் கோயிலுக்குச் சென்றார். முத்துவேலை செய்யப்பட்ட சிவிகையில் தேசிகர் சென்றார். அதனைத் தொடர்ந்து மற்றொரு சிவிகையில்

நமச்சிவாய தேசிகர் சென்றார். வழி முழுவதும் ஜனக்கூட்டம் கட்டுக்கு அடங்காமல் இருந்தது. போலீஸ்காரர்கள் அங்கங்கே நின்று ஜனங்களுக்கு அநுகூலம் செய்துகொண்டிருந்தார்கள்.

தெற்குக் கோபுரவாயில் வழியாகக் கோயிலுக்குள் செல்ல வேண்டியிருந்தது. சிவிகைகள் இரண்டும் அங்கே வந்து நின்றன. அங்கே ஜனங்கள் மிதமிஞ்சி உள்ளே நுழையாதவாறு போலீஸ் உத்தியோகஸ்தர்கள் காவல் புரிந்து வந்தனர். சுப்பிரமணிய தேசிகர் இறங்கி உள்ளே செல்ல இயலாதென்பதையறிந்து சிவிகையில் இருந்தபடியே அங்கே நின்றிருந்த மதுரைக் கலெக்டரைப் பார்த்துப் புன்னகை புரிந்தார். உடனே வெள்ளைக்கார உத்தியோகஸ்தர் ஒருவர் மிகவும் பாதுகாப்புடன் தேசிகரை உள்ளே அழைத்துச் சென்றார். அவர் உள்ளே சென்று ஓரிடத்தில் தங்கியிருந்தார். சின்னப் பண்டாரஸந்நிதி பின்னே தங்கிவிட்டார். அவரால் உள்ளே செல்ல முடியவில்லை. தம்பிரான்கள் சிலருடைய பேருதவியால் எப்படியோ நெட்டித்தள்ளிக்கொண்டு உள்ளேசென்றார். ஆயினும் அவர் தம் சிவிகையில் வைத்திருந்த தாழ்வடப் பெட்டி வெளியே தங்கிவிட்டது. அவருடைய ருத்திராட்சகண்டி, வைரமோதிரங்கள், காதிலிடும் ஆறுகட்டி முதலியவை அப்பெட்டியில் இருந்தன. அந்தப் பெட்டி ஓர் ஆள் தூக்குமளவு கனமுள்ளது.

நமச்சிவாய தேசிகர், சுப்பிரமணிய தேசிகர் தங்கியிருந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

சுப்பிரமணிய தேசிகர் தரிசனத்திற்கு உள்ளே செல்ல நினைத்தபோது சின்னப் பண்டார ஸந்நிதியினுடைய தாழ்வடப் பெட்டி வெளியிலே தங்கிவிட்டதை அறிந்தார். ருத்திராட்சகண்டி முதலியவற்றை அணிந்து கொள்ளாமல் நமச்சிவாய தேசிகரைத் தரிசனத்திற்கு அழைத்துச் செல்வதில் அவருக்குச் சம்மதம் இல்லை. அது சம்பிரதாயமுமன்று. ஆதலின் அப் பெட்டியை வருவிப்பதற்கு என்ன வழியென்று யோசிக்கலானார்.

அப்பொழுது தேவஸ்தானக் கமிட்டியைச் சேர்ந்த சிலர் சுப்பிரமணிய தேசிகரைத் தரிசனம் செய்வதற்கு அழைக்கவந்தார்கள். அவர்கள் அழைத்தபோது தேசிகர், "வெளியில் சின்னப் பண்டாரத்தினுடைய தாழ்வடப் பெட்டி தங்கிவிட்டது. அது வந்த பிறகுதான் தரிசனம் செய்யப் போகவேண்டும்" என்றார். நமச்சிவாய தேசிகரோ பெட்டியை விட்டுவந்ததற்காகத் தவித்துக்கொண்டிருந்தார். அந்தக் கூட்டத்தில் யார் போய் அதை எடுத்து வருவார்களென்று யாவரும் யோசித்துக்கொண்டிருந்தனர்.

அந்தச்சமயத்தில் ஒரு கனவான் வந்தார். "ஏன் புறப்படாமல் நின்றுகொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். அவர் வரும்போது யாவரும் அவரிடம் மரியாதை காட்டினார்கள். அவரிடம் சிலர் தாங்கள் தாமதப்படுத்துவதன் காரணத்தைச் சொன்னார்கள். அவர், "இதற்குத்தானா இவ்வளவு யோசனை? நான் போய்க் கேட்டால் கொடுக்கும்படி நம்பிக்கையான ஒருவரை என்னுடன் அனுப்புங்கள். முகூர்த்தம் நெருங்கிவிட்டது" என்று கம்பீரமாகக் கூறினார். அருகிலிருந்த யாவருடைய முகத்திலும் ஓர் ஆச்சரியக்குறிப்புத் தோற்றியது. அந்தக் கனவானுடைய தொனியில் உறுதியும் தைரியமும் ஒலித்தன.

உடனே அவர் தேசிகரால் அனுப்பப்பட்ட ஒருவருடன் கூட்டத்தினிடையே அம்புபோல் பாய்ந்தார். அவர் வருவதைக் கண்டவுடன் உத்தியோகஸ்தர்களும் மற்றவர்களும் விலகி வழிவிட்டார்கள். யாவரும் ஸ்தம்பித்து நின்றிருந்தார்கள். ஐந்தே நிமிஷத்தில் அவர் தாழ்வடப் பெட்டியைக் கொண்டுவந்து தேசிகர் முன்வைத்து, "நாழிகையாய்விட்டது. புறப்பட ஏற்பாடு செய்ய வேண்டும்" என்றார்.

அவருடைய முகத்தில் ஒரு பிரகாசம் இருந்தது. சுறுசுறுப் பென்பதற்கு ஒரு வடிவம் உண்டென்றால் அவரைத்தான் சொல்ல வேண்டும். பிறரைக் கவரும் முகப் பொலிவும், நீண்ட மூக்கும், கணீரென்ற பேச்சும், எந்த நற்காரியத்திலும் துணிவுகொள்ளும் இயல்பும் அவர்பால் விளங்கின. முப்பத்தைந்து பிராயந்தான் அவருக்கு இருக்கும். அவருடைய தோற்றத்திலும் செயலிலும் சுப்பிரமணிய தேசிகரும் பிறரும் மயங்கிவிட்டார்கள்.

பெட்டி வந்தபோது சின்னப் பண்டார ஸந்நிதிக்குப் பிராணனே வந்ததுபோல் இருந்தது.

"இவர்களைத் தெரிந்து கொள்ளவில்லையே!" என்றார் சுப்பிரமணிய தேசிகர். அவரே மணி ஐயரவர்கள் என்பதைத் தேசிகர் தெரிந்துகொண்டபோது அவருக்குப் பின்னும் வியப்பு அதிகமாயிற்று.

"தங்களைப்பற்றிப் பலமுறை கேட்டிருக்கிறோம். இந்தச் சமயத்தில் தாங்கள் உதவி செய்திராவிட்டால் எங்கள் விருப்பம் நிறைவேறியிராது. தங்களுக்கு இந்த வேலையைக் கொடுத்தது அபசாரமானாலும் இந்த வேளையில் இதைவிடப் பெரிய உபகாரம் வேறு இல்லை" என்று சுப்பிரமணிய தேசிகர் கூறினார்.

"நீங்கள் வேலை கொடுக்கவில்லையே. நான்தானே போய் எடுத்து வந்தேன்? சரி; புறப்படலாமே" என்றார்.

புகழ்ச்சியை அவர் விரும்பவில்லை. காரியங்கள் ஒழுங்காக உரிய காலத்தில் நடைபெற வேண்டுமென்பதிலேயே அவருடைய ஞாபகம் இருந்தது.

அவருடைய பேச்சும், நடையும், காரியங்களும் ஒரு சிங்கக் குட்டிக்குரியவை போல இருந்தன. மதுரை நகர முழுவதற்கும் அவர் ஒரு மணியாக விளங்கியதை அப்பொழுது நாங்கள் அறிந்தோம்.

சுப்பிரமணிய தேசிகரும் மற்றவர்களும் மகா கும்பாபிஷேக தரிசனம் செய்துகொண்டு மீண்டார்கள். தேசிகருக்கு மணி ஐயரவர்களைப் பார்த்துப் பேசி இன்புற வேண்டுமென்ற ஆவல் அதிகமாயிருந்தது. "தங்களைப் பார்க்கவேண்டுமென்ற விருப்பம் அதிகமாக இருக்கிறது. ஒரு ஸ்தானத்தில் இருப்பதால் நாமே நேரில் வர இயலவில்லை" என்று தேசிகர் சொல்லியனுப்பினர். கேட்ட மணி ஐயர், "நானே இரவில் வருகிறேன்" என்று விடையனுப்பினர். தேசிகர் அன்றிரவு அவரை அழைத்து வரும்படி தக்க மனிதர்களை விடுத்தனர். ஜன நெருக்கத்தால் வண்டிப் போக்குவரத்து நிறுத்தப்பட்டிருந்தது. ஆதலின் மணி ஐயர் தாமே நடந்து சுப்பிரமணிய தேசிகர் தங்கியிருந்த பங்களாவிற்கு வந்து சேர்ந்தார். அவரைத் தேசிகர் தக்க உபசாரங்களுடன் வரவேற்றார். மணி ஐயர் வரப்போகிறாரென்பதை அறிந்து பல பெரிய மனிதர்கள் அவரைப் பார்ப்பதற்கும் அவர் பேச்சைக் கேட்பதற்கும் வந்து காத்திருந்தார்கள். அதனால் அவருடைய புகழ் எவ்வாறு பரவியிருந்ததென்பதை ஒருவாறு அறிந்துகொண்டோம்.

சுப்பிரமணிய ஐயரும் சுப்பிரமணிய தேசிகரும் நெடுநேரம் அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தனர். அப்பொழுது சுப்பிரமணிய தேசிகர் விஷயமாக ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், வேதநாயகம் பிள்ளை முதலியவர்களாற் பாடப்பெற்ற கவிகளை நான் அங்குள்ள பெரியோர்களின் விருப்பப்படி சொல்லிக் காட்டினேன். மணி ஐயர் தமிழில் அன்புடையவரென்பது அப்பொழுது எனக்குத் தெரியவந்தது.

அந்த முதற் காட்சியிலே, ஸ்ரீ சுப்பிரமணிய ஐயரவர்களிடத்தில் என்மனம் ஈடுபட்டது. அவர் அக்காலத்தில் மதுரையில் மிக்க செல்வாக்குடைய வக்கீலாக விளங்கி வந்தார். அவருடைய பேச்சின் கம்பீரமும் மனிதர்களை வசியப்படுத்தும் முறைகளும் யாவராலும் போற்றிப் பாராட்டப் பெற்றன.



கம்பனும் காளிதாஸனும்

பே. நா. அப்புஸ்வாமி ஐயர், பி. ஏ., பி. எல்.

மானைத் துரத்திச் சென்ற துஷ்யந்தன் காட்டிலே சகுந்தலையைப் பார்க்கிறான். அவளுடைய அழகுவலையிலே அவனுடைய மனமானது அகப்பட்டுக்கொள்ளுகிறது. காதல் வெள்ளத்திலே தத்தளிக்கும்போது, அவனுக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் உண்டாகிறது. 'ஆகா! ரிஷியின் ஆசிரமத்திலே உள்ளவள் அல்லவா சகுந்தலை! க்ஷத்திரியனாகிய நான் அவள்மீது காதல் கொண்டது தகாத காரியமல்லவா?' என்று ஒரு க்ஷணம் நினைக்கிறான். மறுக்ஷணமே தெளிவு உண்டாகிவிடுகிறது. அந்த நிலையைக் காளிதாஸன் தன்னுடைய நாடகத்திலே துஷ்யந்தனுடைய வாக்கினாலே பின்வருமாறு சொல்லுகிறான்:

असंशयं क्षत्रपरिग्रहक्षमा
यदार्यमस्यामभिलाषि मे मनः ।
सतां हि सन्देहपदेषु वस्तुषु
प्रमाणमन्तःकरणप्रवृत्तयः ॥ (I. 19)

தன்னுடைய தூய மனமானது எப்பொழுது ஒரு காரியத்தை நினைத்ததோ அப்பொழுதே அந்தக் காரியம் தவறான காரியமாக இருக்கமுடியாது என்பதும், ஆதலால் அப்பெண் ஒரு க்ஷத்திரியனால் மணக்கத் தக்கவளாயிருக்கவேண்டும் என்பதும் துஷ்யந்தன் கொண்ட முடிவுகள்.

இதே விதமான நிலை ஒன்றைக் கம்பனும் சிருஷ்டித்திருக்கிறான். மிதிலையிலே நகர வீதியிலே விசுவாமித்திரனோடு கூடச் சென்ற இராமன் ஓர் உப்பரிகையிலே நின்ற சீதையைப் பார்க்கிறான். அவளுடைய மோகனமான அழகிலே ஈடுபடுகிறான். காதலானது கடலினும் பெரிதாகப் பொங்குகிறது. அந்த நிலையிலே இராமனுக்கும் ஒரு சந்தேகம் உண்டாகிறது. 'இந்தப் பெண் யார்? ஒருகால் இவள் பிறனுடைய மனைவியாயிருக்கலாமோ? இருந்தால் நான் அவள் மீது காதல்கொண்டது பிசகாகுமே' என்று ஒரு க்ஷணம் ஐயுறுகிறான். உடனேயே தெளிவடைகிறான். 'என்னுடைய மனமானது நல்லதல்லாத வழியிலே போகாது. ஆதலால் இப்பெண்ணானவள் கன்னியாகவே இருத்தல் வேண்டும்' என்று இராமன் முடிவு செய்துகொள்ளுகிறான். அந்த நிலையைக் கம்பன் தன்னுடைய காவியத்திலே இராமனுடைய வாக்கினாலே பின்வருமாறு சொல்லுகிறான்:

ஏகு நல்வழி யல்வழி யென்மனம்
ஆகு மோவதற் காகிய காரணம்
பாகு போன்மொழிப் பைந்தொடி கன்னியே
ஆகும் வேறிதற் கையுற வில்லையே. (மிதிலைக். 147.)



வேதச் செய்யுள்

வித்வான் நா. கனகராஜையர்

பூர்வார்ஜிதமாக நாம் பெற்றிருக்கும் செல்வங்கள் வேதங்கள் ஆகும். வேதவாக்கியங்கள் எக்காலத்தில் இயன்றன, யார் இயற்றினர் என்ற ஆராய்ச்சியெல்லாம் பெரியோர்க்குரிய பணியாம். வேதவாக்கியங்கள் மறைகள் என்று பல்லாயிர ஆண்டுகளாகக் காக்கப்பட்டு வருகின்றன. பொது மக்கள் பயின்று பயன் பெறத்தக்க பொருள்கள் பல வேதங்களில் இருப்பினும், குருபாரம்பரையின் அருள் பெற்று அறியவேண்டும் என்ற எண்ணம் நம் நாட்டில் வலிமை பெற்று உள்ளது.

வேதங்களில் உபநிடதம் என்ற பகுதி ஞானநெறியை விளக்குவதாகும். உபநிடதங்கள் நூற்றெட்டு என்று சொல்வதுண்டு. பத்து அல்லது பன்னிரண்டு உபநிடதங்களே குருபரம்பரையாய் விளக்கம் பெற்றவையாம். இந்த உபநிடதங்களைப் பாஷியங்களோடும் விரிவுரைகளோடும் ஸம்ஸ்கிருத வித்வான்களிற் சிலர் முறையே பயில்கிறார்கள். ஸம்ஸ்கிருத பாஷையில் தர்க்கம், வியாகரணம், அலங்காரம், மீமாம்ஸை, வேதாந்தம் என்ற ஒவ்வொரு சாஸ்திரமும் பெரிய சமுத்திரமாக இருந்திருப்பதால் ஒரு சாஸ்திரம் பயின்றவர் மற்றொன்றையும் பயின்றிருப்பார் என்ற நியதியில்லை. அபூர்வமாகச் சில பெரியோர்கள் இரண்டு மூன்று நான்கு சாஸ்திரங்களில் வல்லவர்களாயிருக்கிறார்கள். வேதாந்த சாஸ்திரத்திற் பூரண பாண்டித்தியம் பெற்றவர் மிகச் சிலரே.

இப்படிப் பல வருஷங்கள் உழைத்து அரிய பொருள்களை உணர்ந்திருக்கும் பெரியோர்களை அடுத்து வேதாந்த விஷயம் தெரிந்துகொள்ளவேண்டும் என்று ஸம்ஸ்கிருத பாஷையில் நல்ல பயிற்சியில்லாதவர்கள் முயல்வது அபூர்வமே. அப்படியே இவர்கள் போனாலும் அந்த வித்துவான்கள் எளிதிலே போதிப்பார்கள் என்று துணிந்து கூற இயலாது. இதனால் நம் முன்னோர் ஈட்டிவைத்த அருஞ்செல்வத்தின் பெருமையையும் அருமையையும் நாம் சிறிதேனும் அறியாமல் வாழ்ந்து மடிய நேரிடுகின்றது.

நாலாயிர திவ்வியப்பிரபந்தத்துக்கு விரிவான உரைகள் உண்டு. தேவாரத்துக்கு உரை விரிக்க யாரும் துணியவில்லை.

இந்த அருட்பாக்களிலே உபநிடதக்கருத்துக்கள் ஆங்காங்கு வந்து விளக்கம் பெறுகின்றன என்பதை நுண்ணுணர்வு உள்ள பெரியோர்கள் கூறக் கேட்கிறோம். பக்திப் பெருவெள்ளத்திலே திளைத்த மகான்கள் எடுத்தாளும் கருத்துக்களைப் பொதிந்து வைத்திருக்கும் உபநிடதங்களை அறிஞர் பலரும் பயின்று உய்த்துணர்தல், தமிழில் உள்ள பல அருள் நூல்களின் உண்மைப் பொருள் தெரிந்துகொள்ளச் சிறந்ததோர் வழியாகும்.

மனவாக்குக்களுக்கு எட்டாத பொருளைப் பலபடியாக விளக்கி ஒரு முகமாக உய்த்துணரவைக்கும் உபநிடதங்களில் பொதுமக்கள் அறிந்து இன்புறத்தக்க செய்யுட் சுவை பல பகுதிகளில் உண்டு. உவமை உருவகம் முதலிய அணிகள் காவியங்களில் அமைவது போலவே அழகாய்ப் பொருந்தியுள்ளன. இந்த அணிகள் அங்கே கருதிய பொருளை விளக்குவதற்கு உதவிகளாகவே அமைந்துள்ளன. இங்ஙனம் அமைந்த பகுதிகள் பின்னே சில எடுத்துக்காட்டப்படும்.

எல்லாரும் அறியத்தக்க பொதுவான பொருள்களே உபநிடத வாக்கியங்களில் உவமைகளாக வருகின்றன. தேர், தேர்ச்சக்கரம், சக்கரத்துள்ள ஆர்கள், குதிரை, தீப்பொறி முதலியவை அடிக்கடி வரும் உவமைகளாம். உடம்பினுள் ஆன்மா அமைந்த இயல்பை விளக்கவந்த இடத்தில் ஒரு மந்திரம்,

"ஊர்வோன் ஆன்மா ஊர்தி உடலே
அறிவுகோல் கொள்வோன் அவன்கைப் படூஉம்
கலனையே மனமெனக் கண்டுணர்ந் திடுதியே" (கடவல்லி)

என்று கூறுகிறது. இங்கு ஆன்மா=ஊர்வோன், உடல்=ஊர்தி, அறிவு=சாரதி, கலனை=மனம் என்ற உருவகம் அமைந்த அழகு சிந்திக்கத்தக்கது.

பிரமவஸ்துவின் தன்மையை விளக்கவரும் உவமைகள் பல உண்டு. இங்கு ஓர் உருவகம் காட்டப்படும்:

"உம்பரில் வேரும் இம்பரிற் கிளைகளும்
பாவிய பழமை யரச மரமிது." (கடவல்லி)

இதைக்காட்டிலும் தெளிவாகப் பிரமப்பொருளை விளக்கல் இயலுமோ? கடலிலே கலக்கும் ஆறுகள் தம் தனித்தன்மையை இழந்து கடலாகவே மாறும் நிலைமை சில இடங்களில் உவமையாக வருவது உண்டு. பிரசினோபநிடதத்தில் ஓர் உபதேசம் வரும். அதன்கண் அமைந்த உவமை, பொருளைத் தெளிவாக விளக்குகிறது. அது வருமாறு:—

"தேருருட் குடத்துச் சேரும் ஆரென
எவன்பாற் கலைகள் யாவும் இருக்குமோ
அறியத் தக்க அவனைப் புருடனை
அறிக மரணத் தவல முறாதே."

பிரமப்பொருளிலிருந்தே எல்லாம் தோன்றின என்ற உண்மையை விளக்கச் சில உவமைகள் வரும். அவையும் எளிதில் எவர்க்கும் பொருளை விளக்கும்.

"சிலம்பி தானே சிறுநூல் படைத்துத்
தனக்குளே யடக்குந் தன்மைபோல், நிலத்திற்
பூண்டுகள் தோன்றுவ போல், மனி தன்பால்
மயிர்கள் முளைத்து வளர்வுறும் செயல்போல்
அக்கரத் திருந்தே யகிலமும் தோன்றுமே." (முண்டகம்)

இங்கு மூன்று உவமைகள் ஒரு பொருளை விளக்கத் துணை நிற்கின்றன.

பிரமானுபவத்துக்கு உரிய நெறியை உபநிடத வாக்கியங்களைப்போல நன்றாய் உணர்த்துவன வேறு இல்லை. இந்த உயர்ந்த கருத்துக்கு உருவகமும் உவமையும் உதவியாய் நிற்கும் அழகைப் பலவிடங்களிற் பார்க்கலாம். பிரமம் இலக்கு ஆகும், அந்த இலக்கை எய்து பெறும் அம்பு சீவ ஆன்மாவாகும், பிரணவ மந்திரம் அதற்குரிய வில்லாகும் என்று ஒரு மந்திரம் கூறுகிறது. அது வருமாறு :—

"பிரணவம் வில்லாம் சரமே ஆன்மா
பிரமம் இலக்கெனப் பேசப் படுமே
குறியினோ டொன்றிய நெறியுறு மம்புபோல்
ஒருமை யுணர்வினஃ துணரத் தக்கதே." (முண்டகம்)

சீவான்மாவுக்கும் பரமான்மாவுக்கும் உள்ள பேதத்தை உலகத்தார் எத்தனையோ வகையாக வாதிடுகின்றனர். உபநிடத வாக்கியம் சில பகுதிகளில் ஒற்றுமை கூறும். சில பகுதிகளில் வேற்றுமை கூறும். வேற்றுமை கூறும் இம்மந்திரம் அறிஞர் நினைவுக்கு உரியதாம்.

"ஒன்றொடொன் றிணங்கி நன்றமை நட்புடன்
சிறகரால் அழகிய பறவைகள் இரண்டுதாம்
ஒருமர மதனிடை மருவிவாழ் கின்றன;
இனிமைசால் அம்மரக் கனியினை ஒன்று
தின்னும் மற்றது தின்னாது காணுமே." (முண்டகம்)

இங்கே சீவான்மாவும் பரமான்மாவும் இரண்டு பறவைகள் எனப்பெற்றன. ஸம்ஸாரம் என்ற மரத்தில் இரண்டும் சேர்ந்துள்ளன. அம்மரக்கனியைச் சீவான்மா அனுபவிக்கிறது, பரமான்மா சாக்ஷி

மாத்திரமாக விளங்குகிறது என்ற உண்மை நயமுற விளக்கப் பெற்றுள்ளது. ஜீவ பரமாத்ம ஐக்கியத்துக்கு விரோதமாக வாதிப்போர்க்கு இம்மந்திரம் ஓர் உதவியாகும்.

ஐக்கியத்தை விளக்கும் மந்திரங்கள் உபநிடதங்களில் மிகுதியாய் உண்டு. அவற்றுள் ஒன்று இங்கே தரப்படும்:

"கடலிடை யொழுகுறு நெடுநீ ராறுகள்
தம்முடை உருப்பெயர் தவிர்வன வாகி
அடங்குறும் அமைவுபோல், அறிவுடைப் பெரியோன்
பெயரும் உருவமும் பிரிவுறப் பெறுபு
திப்பிய மாகிய மெய்ப்பொருள் தன்னைப்
பெரிதினிற் பெரிய புருடனை எய்துமே."

(முண்டகம்)

இங்கும் அழகிய உவமை ஒன்று வந்துள்ளது.

பிரமவஸ்துவின் பெருமையை விளக்கும் வாக்கியம் பல உண்டு. அவை பயில்வார் அறிவின் நிலைக்கு ஏற்ப விளக்கம் தருபவையாகும். அவற்றுள் ஒன்று வருமாறு:

"எய்தப் பெறாதே யெங்கிருந் துளனொடு
மொழிமீண் டுறுமம் முறைபெறு பிரமத்
தானந்த உருவம் அறியப் பெறுவோன்
என்றும் அஞ்சுதல் இலனாம் எதற்குமே."

(தைத்திரீயம்)

இங்ஙனம் உயர்ந்த கருத்துக்களை எளிதில் விளக்கும் பல அழகுகள் பொருந்திய உபநிடதம் தமிழ்ப்புலவர் பலரும் பயிலத் தக்க பெருநூலாகும். வடமொழியென்று வெறுப்புத் தோன்றாமல் உள்ளம் உருகப் பயில்வார்களாயின் தமிழ்நூல்களின் அருங் கருத்துக்களை நன்கு உணர இப்பயிற்சியே துணையாக இருக்கும்.

கலைமகளுக்கு

ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

---

1. உதய சுந்தரி யொத்த முகமும்
உருகும் வெள்ளியை யொத்த வுடலும்
சுதந்தி ரச்சுடர் சொக்கு நகையும்
சோம சூரியர் காந்தும் விழியும்
புதிய தாமரைப் பாதமும் பூங்கை
பொங்கு மங்கல வீணையுங் கொண்டென்
இதயத் தாமரை வீற்றிருந் தாளாய்
இறைவி யேசர ணம்இசை வாணி!

2. வீடு தோறும் விளக்கொளி யாவாய்!
வீதி தோறு மறையொலி யாவாய்!
ஏடு தோறும் பொருளெழுத் தாவாய்!
இதயந் தோறுஞ் சுவையென் றினிப்பாய்!
பாடு நாவினிற் பண்ணொலி யாவாய்!
பார்வைக் கெல்லாம் பரிதிநீ யாவாய்!
நாடு வாழ்ந்திட நல்லறி வீவாய்!
ஞான வாணி பராசக்தி தாயே!

3. போற்றி போற்றி பொலியறி வன்னை!
போற்றி வாணி புலவர்க் கரசி!
நாற்றி சையிலும் நாத வடிவாய்
நாவு தோறும் நடம்புரி சக்தி!
காற்று மீட்டுங் ககனமெல் லாமுன்
கனக யாழின் கவினிசை வெள்ளம்!
ஆற்றல் யாவிற்கும் ஆற்ற லளிக்கும்
அருங்க லைமக ளேயருட் செல்வீ!



வாழ்க்கையும் பிரகிருதிசாஸ்திரமும்

எஸ். எஸ். ராமசாமி, பி. எஸ்ஸி. பி. எல்.

[மேல்நாட்டிலேயுள்ள ஓர் ஆசிரியர் சில சிறந்த மேதாவிகளைத் தெரிந்தெடுத்து, அவர்களுள் ஒவ்வொருவரும் இவ்வுலகவாழ்வுபற்றிக் கொண்டுள்ள தீர்மானங்கள், கொள்கைகள், நம்பிக்கைகள், ஐயப்பாடுகள் முதலியவற்றைக் குறித்துத் தெளிவாகத் தமக்கு எழுதும்படி கேட்டுக்கொண்டார். இவ்வேண்டுகோளுக்கு விடையாக வந்தவற்றையெல்லாந் தொகுத்து ஒருபுத்தகமாக வெளியிட்டனர். விடையெழுதியவர்களுள் ஐன்ஸ்டைன் கூறியவற்றைச் சுருக்கி 'என் நம்பிக்கை' என்ற தலைப்போடு ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் கலைமகளில் (VIII, 444) முன்பு எழுதியுள்ளார்கள். இப்பொழுது, ஹேச். ஜி. வேல்ஸ் என்பவர் எழுதியது மொழிபெயர்த்து வெளியிடப்படுகிறது.]



வாழ்க்கையைப்பற்றி நான் கொண்டுள்ள உறுதிப்பாடான அபிப்பிராயங்களை சில வார்த்தைகளில் சொல்வது சுலபமான காரியமல்ல வென்று எனக்குப் படுகிறது. நான் யார், நான் எதற்காக இருக்கிறேன், நான் இருப்பதன் நோக்கத்தைப்பற்றி என் அபிப்பிராயம் என்ன, வாழ்க்கையைப்பற்றி என் அபிப்பிராயம் யாது, உலகத்தைப்பற்றி நான் என்ன எண்ணுகிறேன் என்பவை போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்வது கடினமான காரியம். இந்தக் கேள்விகளுக்கு விடை யளிப்பதற்காக, எனது காலத்தில் ஒரு பெரும்பகுதியைச் சம்பாஷிப்பதிலும், வாசிப்பதிலும், எழுதுவதிலும், தனிமையான இடங்களில் சிந்திப்பதிலும் செலவழித்திருக்கிறேன். அந்தகாரமே குடிகொண்ட நடுநிசியிலும்

இதே கருத்துடன் இருந்துவந்திருக்கிறேன். விடையளிக்க ஒரு வாறு முயற்சிசெய்து பார்க்கிறேன்.

பிராவென்ஸைச் சார்ந்த கிரஸ்வி என்னும் இடத்தில் வாசனைத் திரவியங்கள் உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகள் இருக் கின்றன. யாரேனும் சென்றால், அங்கே தயாரித்த வாசனைத் திராவகப் புட்டிகளைக் காண்பிப்பார்கள். ஒரு சிறுபுட்டியில் சுமார் ஐந்துலக்ஷம் ரோஜாப்பூக்களினின்றும் வடித்தெடுத்த 'ஸெண்ட்' இருப்பதாகக் கூறுவார்கள். அதேமாதிரியாக, இந்தச் சுருக்கமான கட்டுரையில் பல ஆயிரக்கணக்கான நாட்களாக இரவுபகலாகச் சிந்தித்த என் எண்ணங்களை வெளியிடு கிறேன். என்னால் இயன்ற மட்டும், தெளிவாக எழுத முயன்றிருக் கிறேன். ஆனால் இடத்தை உத்தேசித்துச் சுருக்கமாக இருப்பின் மன்னிக்கவேண்டும்.

அமரத்துவத்தைப்பற்றி மிகவும் நன்றாக எழுதமுடியுமென்று நினைக்கிறேன். எனது உள்ளத்தில் பதிந்த ஆழ்ந்த கருத்துக்களை நான் எழுதிக்கொண்டிருக்கிறேன்; நீங்கள் வாசிக்கிறீர்கள். நமது அறிவால் ஒருவருடன் ஒருவர் உறவு கொள்கிறோம். இவ்வாறு ஏற்படும் உறவு என்றும் நீடித்திருக்கக் கூடியதா என்ற கேள்வி யைப் போடுகிறேன். இதற்குமேலாக, உங்களுடன் பேசிக்கொண் டும் நினைத்துக்கொண்டும் இருக்கும் ஹெச். ஜி. வெல்ஸ் என்பவன் யார்?

ஹெச். ஜி. வெல்ஸ் என்பவன் 1866-ஆம் வருஷத்தில் பிறந்து வளர்ந்தவன். பல இடங்களுக்கும் சென்று பல காரியங்களைச் செய்து முடித்திருக்கிறான். அவன் எழுதும் வார்த்தைகளும் அவன்கொண்ட கருத்துக்களில் சிலவும் நீங்கள் உணர்ந்து அனுப விக்கும்படியாய் இருக்கின்றன. ஆனால் வெல்ஸ் என்னும் வியக்தியில் பெரும் பகுதி உங்கள் முன்னிருப்பதாக உறுதிகூற முடியுமா? ஒரு பெரும்பகுதி மறைந்துவிட்டது, இறந்துவிட்டதென்றே சொல்ல வேண்டும்; காலவெள்ளத்தில் மூழ்கிவிட்டது என்ற உண்மையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விஷயத்தைப்பற்றி இன்னும் ஆராய்வோம். ஆசிரியனின் இளமைப் பருவத்தைக் கவனியுங்கள். அப்பொழுது நடந்த சம்பவமொன்றை இங்கு வெளியிடுகிறேன். 1867-ஆம் வருஷத் தில் அவன் மிகவும் தொந்தரவு கொடுத்துவந்த சிறு குழந்தை யாக இருந்தான். ஒருநாள் பயங்கர விபத்து ஒன்று ஏற்பட்டது. அவன் ஒரு சோபாவில் உருண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந் தான். திடீரென்று கீழே விழுந்து விட்டான். விழுந்தது ஒரு கண்ணாடி பாட்டிலின்மேல்! அது முகத்தில் கீறிவிட்டது. டாக்டர்

வந்து தையல்போட வேண்டியதாயிற்று. இப்பொழுதும் அதற்கு அறிகுறியாக எனது முகத்தில் ஒரு வடு காணப்படுகிறது.

எவ்வளவு பரபரப்பும் கூக்குரலும் ஏற்பட்டிருக்கும்! இப்பொழுது அதைப்பற்றி எனக்கு என்ன தெரியும்? என்னுடைய தாயார் சொல்லியதைத் தவிர எனக்கு ஒன்றுமே தெரியாது. அதைப்பற்றிய நினைவே முற்றிலும் அகன்றுவிட்டது. ஒரு வயதிலுள்ள ஹெச். ஜி. வெல்ஸ்தானு இப்பொழுது இருக்கிறவன்? நீங்கள் 'ஆம்' என்று பதிலளிப்பீர்கள்.

ஆனல் சிறிது யோசித்துப் பாருங்கள். இப்பொழுது எழுதிக் கொண்டிருக்கும் ஹெச். ஜி. வெல்ஸின் பெரும்பகுதியையும் நீங்கள் காணமுடியாது. இப்பொழுது, நான் ஒரு வயதிலிருந்த குழந்தையாகவுமில்லை. முகத்தைச் 'சிடுசிடு' வென்று வைத்துக் கொண்டிருந்த இருபது வயது இளைஞனுகவுமில்லை. அப்பொழுது எடுத்த புகைப்படமும் அப்பொழுது எழுதிய விஷயங்களும் என்னிடம் இருக்கின்றன. தற்சமயம், எவ்வளவோ மாறுதல்கள் காணப்படுகின்றன.

இனிமேல் அமரத்துவத்தைப்பற்றிக் கவனிப்போம். எகிப்து தேசத்தில் ஐயாயிரம் வருஷங்களுக்கு முன் வசித்தவர்கள் இந்த விஷயத்தைப் பற்றிப் பேசியிருக்கிருர்கள். பிளேட்டோ, புத்தர், ஸெயின்ட் பால் முதலியவர்களும் பல அரிய கருத்துக்களைத் தெளிவுபடுத்தியிருக்கிருர்கள். நாமும் இந்தக் கேள்விகளுக்குச் சில மாறுதல்கள் உண்டுபண்ணிப் பதிலளிக்கிறோம். இப்பொழுது உங்களுடன் பேசிக்கொண்டிருக்கும் ஹெச். ஜி. வெல்ஸ் 'சாவாவரம்' பெற்றவனல்ல. அந்த வியக்தியில் பெரும்பகுதி இறந்து ஒழிந்துவிட்டது. ஆனல் அவன் எண்ணங்களும், கருத்துக்களும் வளருந் தன்மையையுடையன. நாம் இறந்துபோகும் மனிதர்களே; ஆனல் நமது கருத்துக்கள் அழியா வரம் பெற்றவை. நாம் சரீரத்தைத் தாங்கும் பிராணிகள் மட்டும் அல்ல; மனித அனுபவமும், யோசிக்கக் கூடிய சக்தியும் வாய்ந்த ஆத்மாக்கள்.

என்னல் இயன்றமட்டும் என் அபிப்பிராயங்களைத் தெரிவித்துவிட்டேன். நான் கூறிய எல்லாவற்றையும் நீங்கள் ஆமோதிக்காமல் இருக்கலாம். ஆனல் நான் தெளிவுபடுத்த முயன்றவை உங்களுக்கு விளங்கியிருக்கலாம் என்ற துணிவுடன் அடுத்த கேள்வியைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்லுகிறேன்.

பலநூற்றுண்டுகளாக, "தனிப்பிராணி என்பது யாது?" என்ற கேள்வியைப்பற்றிப் பலரும் வாதித்து வந்திருக்கிருர்கள். நம்மில் பலரும் திகைத்துப் போயிருக்கிறோம். பெரும்பாலோருக்கு

இது போன்ற சம்வாதம் பிரயோஜனமற்ற, அர்த்தமற்ற செய்கையாகத் தோன்றும். இவ்விஷயங்களைச் சிந்தித்து மண்டையை உடைத்துக் கொள்ள அவர்களுக்கு இஷ்டம் இராது. என்றாலும் அநேகருக்கு இந்தக்கேள்வி மிகவும் முக்கியமானதாகத் தோன்றும். அக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களுள் நானும் ஒருவன்.

சாதாரணமாக எல்லோரும் தனித்த பிராணியென்றால் உலகத்திலுள்ள மற்ற வஸ்துக்களினின்றும் பிரிக்கப்பட்டு உயிர் வாழும் ஒரு பிராணி என்று எளிதில் சொல்லிவிடுவார்கள். ஊன்றிப் பார்த்தால், ஜீவசாஸ்திரம், மானஸசாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களைக் கற்றவர்களுக்குப் புதிய புதிய உண்மைகள் வெளியாகின்றன.

ஜீவசாஸ்திரம் வல்லோர்களிடம் கேட்டால் மனிதர்களும் பூனைகளும் நாய்களும் தனித்தனிப் பிராணிகளே என்று ஒப்புக்கொண்டுவிடுவார்கள். இந்தத் துணிபு உயிர்வாழும் பிராணிகள் யாவற்றிற்கும் பொருந்துமா என்று விசாரித்தால், ஒரேயடியாக "இல்லை" என்று சாதித்து விடுவார்கள். தாவர வர்க்கத்தில் அநேக தாவரங்கள் தனித்த பண்பை மிகுதியாகக் காட்டுவதாகக் கூறுவார்கள். ஒரு செடியை எடுத்துத் துண்டு துண்டாக முறித்தால், ஒவ்வொரு துண்டும் ஒவ்வொரு செடியாகுமா? அல்லது முறிபட்ட ஒரே செடியின் பாகங்கள்தாமா? ஒரே இனத்தைச் சேர்ந்த இரண்டு செடிகளை, உதாரணமாக ஒட்டுமாங்கன்றை எடுத்துக்கொள்ளுங்கள்: ஒட்டவைத்து வளர்த்தால் வளரும் செடி புதிதான ஒரு தனிச்செடியாகுமா? அல்லது ஒட்டவைக்கப்பட்ட இரண்டு செடிகளின் பண்பையும் கொண்டு விளங்குமா? தாவரங்கள் எல்லாம் தனிப் பண்பையுடையன என்று தோன்றுகிறது. நாம் ஜங்க்புரு, வெட்டர் ஹார்ன் என்றெல்லாம் மலையுச்சிகளுக்குப் பெயரிடுகிறோம்; உண்மையில் அவை ஒரே மலைத்தொடர்ச்சியில் காணப்படும் சிகரங்களே.

கீழ்த்தரத் தாவரவர்க்கங்களும் பிராணிகளும் தனிப்பண்பைக் காட்டுவதில் மிகவும் பிற்போக்கு அடைந்திருக்கின்றன. இத்தகைய கீழ்த்தரப் பிராணிகளில் சில ஒன்றோடொன்று சேர்ந்து, மறுபடியும் பிரியும்பொழுது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிராணிகளாகப் பிரிந்து செல்லுகின்றன. இத்தகைய மாறுதல்கள் உயர்தரப் பிராணிகளிடம் காண்பது அரிது. அவை தனித்தனிப் பண்பைத் தனித்தனி முறையில் எடுத்துக் காட்டுகின்றன.

மேற்கூறிய உயர்தரப் பிராணிகளிடமும் இத்தனித்த பண்பு முற்றிலும் அபிவிருத்தி யடைந்துவிட்டதாகச் சொல்லி விடமுடி

யாது. ஏனென்றால், சிற்சில சமயங்களில் நமக்கு ஆச்சர்யத்தைத் தரும்படி, இரண்டு தலைகளும் ஒரே உடலும்கொண்ட ஆடு, பூனை, குழந்தைகள் முதலியன பிறக்கக் காண்கிறோம். இரண்டு உடலுக்கு ஒரே தலையுள்ள பிராணிகளும் பிறக்கின்றன. இத்தகைய உயிர்ப் பிராணிகளிடம் தனித்த பண்பு என்பது யாது? ஜீவசாஸ்திரம் வல்லோர் பின்வரும் சமாதானத்தைக் கூறுகிறார்கள்.

நம்மால் நமது சரீரத்தினுள் இருக்கும் எல்லா வஸ்துக்களையும் அறிந்துகொள்ள முடியவில்லை. ஊன்றிக் கவனித்தால், தற்காலப் பிரகிருதி சாஸ்திரப்படி நமது சரீரத்தினுள் இரத்தக் குழாய்களில் லக்ஷக்கணக்கான ஜீவ அணுக்கள் இருக்கின்றனவென்று தெரியவரும். அப்பேர்ப்பட்ட ஜீவ அணுக்கள், ஒரு நகரத்திலுள்ள ஜனங்கள் அந்நகரத்தின் வீதிகளைச் சுற்றி வருவதுபோல், நமது சரீரத்தினுள் அலைகின்றன. ஒவ்வொன்றிற்கும் தனித்தனிப் பண்பு உண்டு. ஆகவே தனிப்பண்பை உடைய நமது சரீரத்தில் தனித்தனிப் பண்பையுடைய ஜீவ அணுக்கள் இயங்குகின்றன. இப்படிப் பலதாப் பட்ட, பலவகையான தனிப்பண்பையுடைய, பிராணிகள் இருப்பது நமக்குப் புலனாகின்றது. நம்மில் அநேகர் நினைக்கிறபடி மேற்கூறிய விஷயங்கள் அவ்வளவு லேசானவையல்ல.

இனிமேல், மானஸ சாஸ்திரம் படித்தவர்கள் என்ன சொல்லுகிறார்களென்று கவனிப்போம். நம்மிடம் காணப்படும் தனிப் பண்பைப்பற்றிப் பல அதிசய உண்மைகளை அறிகிறோம். சிலர் தாங்கள் இன்னாரென்பதையே மறந்து, தங்களை மற்றவர்களாகப் பாவிக்கிறார்கள். இந்நிலைமை மானஸ வசிய சாஸ்திரம் படித்தவர்களுக்கு எளிதில் விளங்கும்.

மேற்கூறிய சம்பவங்கள் ஏற்படாமலே மனத்தில் அதிசய மாறுதல் ஏற்பட்டுத் தனித்த பண்பு இடம்பெற ஏதுவாகலாம். ஆர். எல். ஸ்டீவென்ஸன் எழுதிய 'டாக்டர் ஜெக்கிலும், மிஸ்டர் ஹைடும்' என்ற கதையை வாசித்தவர்களுக்கு இந்தக் காட்சி புதுமையாகத் தோன்றாது. அந்தக் கதையில் இவ்வகை மாறுதல் ஒரு மருந்தினால் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. மருந்தே இல்லாதபடி மாறுதல் ஏற்படுவதைப் பல உதாரணங்களால் நான் தெரிந்துகொண்டிருக்கிறேன். நம்மில் யாருக்குத்தான் நல்ல புத்தியும், கெட்டபுத்தியும் சேர்ந்தில்லை?

நான் தனித்த பண்பையுடையவன். இதைத் தெளிவுபடுத்த அநேக ருஜுக்களைக் கொடுக்கமுடியும். இத் தனிப்பண்பு சிறிது சிறிதாக அபிவிருத்தி அடைந்திருக்கிறது. ஜூலியன் ஹக்ஸ்லி என்பவரின் உதவியாலும், என் குமாரன் ஜி. பி. வெல்ஸின் உதவி

யாலும் 'ஜீவசாஸ்திரம்' (The Science of Life) என்ற புஸ்தகத்தை எழுதியிருக்கிறேன். விவரங்களுக்கு அதைப் பார்க்கலாம்.

இந்த ஹெச். ஜி. வெல்ஸின் உடம்பு அழிந்துபோகக் கூடியது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் என்னோடு சேர்ந்து வளர்ந்து கொண்டேயிருக்கும் எண்ணங்களும், அறிவும், மனவுறுதியும் அழியா. மனிதர்கள் அழியக்கூடியவர்களே; ஆனால் மனிதனிடம் காணப்படும் மேற்கூறிய சக்தி அழியாது.

நாம் நமக்குக் கிடைத்திருக்கும் வரப்பிரசாதத்தைப் பயன் படுத்திக்கொள்ளவேண்டும். அப்படிச்செய்யாது வீணிலிருப்பது பாவமேயாகும்.

நம்மை மற்றவர்களுக்குமுன் தணித்துக்கொள்வது மற்றவர்களுடைய குறுகிய நோக்கத்திற்குக் கட்டுப்படுத்துவதேயாகும். நம்முடைய புத்திக்கூர்மையையும், திடமான மனவுறுதியையும் மற்றவர்களுடைய சந்தோஷத்திற்காக விட்டுக் கொடுப்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. நான் அப்பேர்ப்பட்ட ஜனநாயகக் கூட்டத்தைச் சேர்ந்தவனல்ல. பயங்கொள்ளிகளுக்கும் தன்னலத்தை நோக்கமாகக்கொண்ட கூட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இந்த உலகத்தில் இடமில்லை.

தற்காலப் பொருளாதார நிலையில் பிரயோஜனமில்லாதபடி செலவழிக்கிற பேர்வழிகள் ஏற்பட்டிருப்பதனால்தான், நான் வேறுபாடு வேண்டுமென்று கருதுகிறேன். தேசீயத்தையும் போர்செய்வதையும் நான் பலமாகக் கண்டிக்கிறேன். ஏனென்றால் அவை மூடத்தனமான கட்டுப்பாட்டையும், தேசீயக் கொடிவணக்கத்தையும், அணிவகுப்பையும் உண்டுபண்ணுகின்றன. அதன் ஆதரவில் மூளையில்லாத தடியர்களும் தண்டச் செலவு செய்பவர்களும் ஒதுங்குகிறார்கள். நமது உயிரும் ராணுவப்பயிற்சி செய்விக்கிற மூடர்கள் கையில்தான் இருக்கிறது. போர்வீரத்தையும், போர்புரிதலையும் சிறு பிள்ளைத்தனத்தில் சேர்க்கவேண்டியதுதான். அவை இறந்து ஒழியவேண்டும். ஒரு ராஜ்யத்தை மற்றொரு ராஜ்யம் கவிழ்க்கக் கையாளும் தீமை பயக்கக்கூடிய போரை ஒழித்துவிட்டு, மனித சாம்ராஜ்யத்தை நிலைநாட்டுவதே எனது அரசியல் கொள்கையாகும்.

பிரகிருதி சாஸ்திரத்தைப் புகழ்வது எனது இயற்கை. இந்தச் சாஸ்திரவுணர்ச்சியினால்தான், மனிதர்கள் வேலைசெய்யும் எல்லாத் துறைகளிலும் பிரதிப் பிரயோஜனத்தை எதிர்பாராத உழைப்பு ஏற்பட ஏதுவாகும். மனிதனுடைய அறிவைப் பெருக்கப் பல்வேறு நிறத்தினரும் ஜாதியினரும் ஒத்துழைப்பதை நான் பார்க்கிறேன்.

சாஸ்திரவுலகில் நாம் எல்லோரும் பிரஜைகளாக இருக்கமுடியும். நமது அரசியல்வாதக்கொள்கைகளும், பொருளாதார நிலையும், சமூகவாழ்க்கையும் பிரகிருதி சாஸ்திர உணர்ச்சியினுல்தான் தெளிவையும் நேர்பாதையில் செல்லுந் தன்மையையும் அடைய வேண்டும்.

என்னைக் கேட்டுக்கொண்டபடி எனது நம்பிக்கையைச் சுருக்கமாகத் தெரிவித்து விட்டேன். நீங்கள் யாவரும் விரும்பத்தக்கபடி உங்களைப் புண்படுத்தாது எழுதிவிட்டேனென்றே நம்புகிறேன். எனது நம்பிக்கையினுல் வாழ்க்கையை நடத்துகிறேன். சிறுவயதில் தொந்தரவு உண்டுபண்ணிய பேராசை, பயம், வீண் ஆடம்பரம் முதலியவற்றையெல்லாம் விட்டு விட்டேன். சாவின் பயமும் என்னை விட்டு அகன்றுவிட்டது.

உயிரோடிருப்பதை நாம் அறிகிறோம். பல அனுபவங்களைத் தெரிந்துகொள்ளுகிறோம். ஆனல் இறந்தபின் நாம் இறந்து விட்டோமென்று தெரிந்து கொள்ளப் போவதில்லை. அதுவும் நல்லதுதான். நீங்கள் அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?



பொருள் நிலைகள்

(*States of matter*)

ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

கண்ணன்: அண்ணு, நான் பார்த்த பொருள்கள் நேற்றுச் சொன்ன மூன்று வகையாகவே உள்ளன. மண், கல், அரிசி, பருப்பு, பாத்திரம், எல்லாம் **கட்டிப்பொருள்கள்**. நீர், மோர், தேன், குழம்பு, ரஸம், உருக்கிய நெய், எண்ணெய் எல்லாம் நீர்ப்பாங்கான **பொருள்கள்**. உள்ளேபோகும் மூச்சு, வெளியே வரும் மூச்சு, ஆகாசத்திலே இருக்கும் காற்று, உலையிலே தண்ணீர் கொதிக்கும் போது கண்ணுக்குத்தெரியாமல் கிளம்பும் ஆவி இவையெல்லாம் **காற்றுப்பொருள்கள்**. சரிதானு அண்ணு?

அண்ணு: சபாஷ்! நீ கெட்டிக்காரன். கட்டிப்பொருள் (*Solid*) திட்பமானது; அதைத் திடபதார்த்தம் என்பர். நீர்ப் பொருளை நீராளம் (*liquid*) அல்லது திரவபதார்த்தம் என்பர். காற்றுப்பொருளை வாயுபதார்த்தம் அல்லது வளி (*gas*) என்பர். கட்டிப்பொருளை ஆராய்வோம்: பார், இந்த மேஜை மேல் பல வகைக் கட்டிப்பொருள்கள் உள்ளன; அவற்றிடையே பல வேறு பாடுகள் இருக்கின்றன. அவற்றின் குணங்களை நான் சொல்லும் போதே சரிதானு என்று பார், கண்ணு! (1) கட்டிப்பொருளுக்கு நிலைத்த உருவம் உண்டு. அவ்வுருவை எளிதில் மாற்ற முடியாது. அதற்குப் பருமன், நிறை, திட்பம் இவை உண்டு. எல்லாப் பொருள்களும் அணுத்திரள்களால் (*molecules*) ஆனவை என்றே னல்லவா? அணுத்திரள்கள் ஒன்றுக்கொன்று பற்றுதலுற்று (*Affinity*) நெருங்கிப் பொருள்வடிவாகின்றன. வைரத்தில் இவ்வணுநெருக்கம் மிகவும் அதிகம். வைரத்தை வைரந்தான் அறுக்கும். மரத்தில் அணுநெருக்கம் குறைவு. அதனல் அதை நாம் எளிதாக அறுத்து நமக்குவேண்டிய மரச்சாமான்கள் செய்து கொள்ளுகிறோம். கண்ணுடியின் அணுச்சேர்க்கை நுறுங்கக் கூடியது. கம்பியிலுள்ள அணுநெருக்கம் வளையக்கூடியது. தங்கம், வெள்ளி, தாமிரம்போன்ற உலோகங்களின் அணுத்திரள்கள்

கம்பியாக நீட்டத்தக்கன; தகடாக அடிக்கத்தக்கன. ரப்பரில் இருக்கும் அணுத்திரள்கள் நீண்டு சுருங்குகின்றன. மண்ணில் இருப்பன எளிதிற் பிசைந்து பல வடிவுகள் அமைக்கத்தக்கன.

கண்ணன்: ஆம், ஒவ்வொரு கட்டிப்பொருளும் ஒவ்வொரு வகையாக இருக்கிறது. ஆனால் நீர்ப்பொருள் எளிதாக உருமாறுகிறது. நாம் எந்தப் பாத்திரத்தில் வைத்தாலும் அந்த வடிவாக நிறைகிறது நீர்ப்பொருள். அதிலும் பலவகைகள் இருக்கின்றனவல்லவா?

அண்ணா: ஆம், ஒரு சோதனை பார்: இந்தத் தூரிகையால் (தூரிகை=*Brush*) இந்தக் கிண்ணத்தில் உள்ள நீரையெடுத்து எடுத்து இந்தத் தகட்டின்மேல் உதறு. நீர்த்துளிகள் ஒன்று சேர்ந்து ஓடத்தொடங்குகின்றன பார்.

கண்ணன்: ஆம் அண்ணா, நீரை எளிதில் இப்படித் துளித் துளியாகப் பிரித்துவிடலாம். பிறகு ஒன்று சேர்ந்து ஓடும்படி செய்யலாம்; அல்லது ஒரு பாத்திரத்தில் ஊற்றிவைக்கலாம். இப்படித்தானே மழையும் துளித்துளியாக மண்ணில் விழுந்து வாய்க்காலாகவும், ஆறாகவும் ஓடிக் கடலில் விழுகிறது? கடல்நீர் கண்ணுக்குத்தெரியாமல் ஆவியாகி, மேகமாகி மறுபடியும் மழையாகப் பொழிகிறது. நீருக்கு இப்படி அணுநெருக்கமில்லாது ஓடும் சக்தியிருப்பதனால்தானே நமக்கு மழைபெய்கிறது?

அண்ணா: ஆம், கண்ணா, நீரணுத்திரள்களுக்கு அதிகப் பற்றில்லை. ஒரு மூட்டையில் பஞ்சைத் திணிப்பதுபோலே ஒரு பாத்திரத்தில் தண்ணீரைத் திணிக்கமுடியாது. "நாழி முகவாது நானாழி." நீரணுத்திரள்களை நெருக்க (*Compress*) முடியாது. இந்தக் குவளை நிறையத் தண்ணீர் இருக்கிறது. இத்தண்ணீரைப் பஞ்சடைப்பதுபோல் உள்ளே அழுத்தி, இதில் இன்னும் கொஞ்சம் தண்ணீர் சேர்க்க முடியுமா?

கண்ணன்: நாம் அமிழ்த்தினால், 'டர்' என்று தண்ணீர் வெளியே ஓடிப்போகிறதே. தண்ணீர் நெருக்க முடியாதது. ஆனால் நீர்ப்பொருள்களுக்கும் வெவ்வேறு குணங்கள் இருக்கின்றனவே. நீருக்கொரு தன்மை; நெய்க்கொரு தன்மை.

அண்ணா: ஆம், மேஜைமேல் சிலவகை எண்ணெய்கள் உள்ளன. இது தார். இது வார்னிஷ். தாரினாலே கதவுகளில் எண் போடுகிறார்கள். அதைச் சுவருக்கும் பூசுகிறார்கள். தார் உறைந்து உலர்ந்து போகிறதல்லவா? ஒரு கதவுக்கு வார்னிஷ் பூசினால் அதுவும் காற்றுப்பட்டதும் கட்டியாக உறைந்து போகிறது. இப்படிப்பட்டது, உறையும் நீர்ப்பொருள் (*Viscous*

liquid) என்னலாம். மண்ணெண்ணெய், பெட்ரோல் இரண்டும் விட்டால் துவண்டு ஓடுகின்றன. இவற்றிற்குத் **துவளும் திரவம்** (*Mobile liquids*) என்னலாம். விளக்கெண்ணெயில் ஒரு சொட்டு இந்த இலையில் விடுகிறேன். ஓடுகிறதா?

கண்ணன்: இல்லை. விட்ட இடத்திலேயே இருக்கிறது. இதுமாதிரித்தானே தேனும்?

அண்ணா: ஆம்; விளக்கெண்ணெய் **நிலைக்கும் எண்ணெய்** (*Fixed oil*). தேன் நிலைக்கும் திரவம். ஒரு வேடிக்கை பார். இந்தக் காகிதத்தில் இந்த மர எண்ணெயில் (*Turpentine*) இரண்டு சொட்டு விடுகிறேன். கொஞ்சநேரம் கழித்துப் பார்ப்போம்!

கண்ணன்: ஆ! மர எண்ணெய் மறைந்துபோய்விட்டதே! அது எங்கேயண்ணா ஒளிந்துகொண்டிருக்கிறது?

அண்ணா: மர எண்ணெய் ஆவியாகிக் காற்றிற் கலந்து போயிற்று. இதுமாதிரியேதான் இங்கே விளக்கெரிக்கும் சாராயமும் மறைந்துபோகும். இவற்றிற்கு **ஆவியெண்ணெய்கள்** (*Volatiles*) எனப் பெயர்.

கண்ணன்: உலையிலே கொதிக்கும் நீரும் இப்படித்தானே ஆவியாகிக் காற்றிற் கலக்கிறது? காற்று, கடலைக்கூடச் சாப்பிட்டு விடும்போல் இருக்கிறதே.

அண்ணா: காற்றானது பெருகும், சுருங்கும், பரவும்; எதில் அடைத்தோமோ அந்த உருவாகும். நீருக்கும் காற்றிற்கும் நிலைத்த உருவில்லை. இரண்டும் **நெகிழ்வனவே** (*Fluids*). ஒரு சிறிதளவுக் காற்றை ஓர் அறைமுழுதும் பரவச் செய்யலாம். இங்கே ஊதுவத்தி கொளுத்திவைத்தால் அதன் வாசனை அறை முழுதும் பரவி வெளியேயும் அடிக்கிறது. எதனால்?

கண்ணன்: காற்று அப்படி ஊதுவத்திப் புகையைப் பரப்புகிறது. கண்ணிலே காணாமல் காற்று என்ன வேலை செய்கிறது!

அண்ணா: காற்றைக் கண்ணாலேதான் காண முடியாது. அதற்குப் பருமன், நிறை எல்லாம் உண்டு.

கண்ணன்: காற்று லேசாகத்தானே இருக்கிறது; அதன் நிறையை எப்படியண்ணா அறிவது?

அண்ணா: நீ பள்ளிக்கூடம் விட்டதும் பந்தாடுகிறாயோ இல்லையோ?

கண்ணன்: ஆம்; ஆறும் என் காற்பந்து விளையாடுகிறேன். அதற்கு நானேதான் காற்றடைக்கிறேன்.

அண்ணா: நல்லது; இதோ அதே பந்து இருக்கிறது. அதில் உள்ள ரப்பர்ப்பை (*Bladder*)யை இத்தராசில் நிறுக்கிறேன். இனி ரப்பர்ப் பையில் காற்றடித்துக் கட்டித் தராசில் வை. பார், கனத்தை.

கண்ணன்: ஆம் அண்ணா; வெறும் பையைவிடக் காற்று நிரம்பிய பை அதிகக் கனம் உடையதாயிருக்கிறது. காற்றிற்குக் கனம் உண்டு.

அண்ணா: பையைத் திற. காற்று 'விஃப்' என்று வேகமாக மேல் நோக்கி அழுத்துகிறது. காற்றிற்கு (அழுத்தம்=*Pressure*) உண்டு. இப்போது கட்டிப்பொருள், நீர்ப்பொருள், காற்றுப் பொருள் இம்மூன்றின் லக்ஷணங்களையும் பற்றித் தெரிந்துகொண்டோம். சில பொருள்கள் நிலைமாறும்.

கண்ணன்: நிலை மாறுவதென்றால்?

அண்ணா: இந்தப் பசுவெண்ணெய் கட்டிப்பொருள் அல்லவா? இதை உருக்கினால்?

கண்ணன்: நெய்யாகிறது. ஆம்; கட்டிப்பொருள் திரவமாகிறது. அதுபோலவேதான் மெழுகுதிரி எரியும்போதும் கட்டிப்பொருளான மெழுகு உருகி வழிகிறது. மீண்டும் கட்டியாகிறது.

அண்ணா: ஆம்; தங்கம், வெள்ளி, இரும்பு, செம்பு ஆகிய உலோகங்களெல்லாம் இவ்வாறே தகுந்த சூட்டேற்றினால் உருகித் திரவமாகிவிடும். இப்படிப்பட்ட பொருள்களுக்கு உருகுவன (*melting substances*) என்று பெயர். மற்றொரு விதமான கட்டிப் பொருளைப் பார். இது சூடன். இதைக் கொளுத்து; 'குப்' பென்று பற்றியெரிகிறது. எரிந்தபிறகு மிச்சம் ஏதாயினும் இருக்கிறதா, பார்.

கண்ணன்: எல்லாம் எரிந்து புகையாகப் போய்விட்டது. மிச்சம் ஒன்றும் இல்லை. சூடன் உருகியோடாமல் ஆவியாய்ப் போய்விட்டது. இதற்கு என்ன பெயர் தரலாம் அண்ணா?

அண்ணா: கட்டித்தன்மையிலிருந்து, திரவமாகாமல் காற்றுத் தன்மையை அடைந்துவிட்டதால் இதற்கு **நேராக ஆவியாதல்** (*Sublimation*) என்னலாம். இன்னும் ஒரு சாமானைப் பார்? அதென்ன?

கண்ணன்: ஆ, பனிக்கட்டி. கையாலே தொட்டால் 'ஜிலுஜிலு' என்கிறது. நாக்கிலே பட்டால் என்ன விறுவிறுப்பு! பல்லுக் கிட்டிப்போகிறது! இது கட்டிப்பொருள்தானே அண்ணா?

அண்ணா: ஆம். பனிக்கட்டி மிகவும் கட்டி. சம்மட்டியால் உடைத்தால்தான் இது உடையும். இதை இந்தப் பீங்கான் கிண்ணத்தில் போட்டுச் சாராய விளக்கில் காய்ச்சுவோம்.

கண்ணன்: சாராயவிளக்கு எதற்கு அண்ணா? பாட்டி, நெய்யும் மிளகும் விளக்கெண்ணெய் விளக்கில் காய்ச்சுவது போலே, நாம் செய்யக்கூடாதா? சாராயம் நாற்றமடிக்கிறதே?

அண்ணா: சாராய விளக்கில் சீக்கிரம் காய்ச்சலாம். புகை பிடிக்காது. இந்த ஆராய்ச்சிக்கூடத்தில் விளக்கெண்ணெய்ப் புகையும் மண்ணெண்ணெய்ப் புகையும் போட்டுக்கொண்டிருந்தால் புகை பிடிக்கும் அல்லவா? சரி, பார்; பனிக்கட்டி என்னவானது?



கண்ணன்: தண்ணீராய்விட்டது.

அண்ணா: இன்னும் காய்ச்சுகிறேன். தண்ணீர் கொதிக்கிறது. மேலே என்ன கிளம்புகிறது, பார்.

கண்ணன்: பனிக்கட்டி நீராகி, நீர் வெந்நீராகி, வெந்நீர் ஆவியாகிக் காற்றில் மறைந்து போகிறதே.

அண்ணா: பார்த்தாயா? இவ்வாறு மூன்று நிலைகள் மாறும் பொருளும் உண்டு. கெட்டியான பனிக்கட்டி நீராகி, நீர் ஆவியாயிற்று. ஒரு கன அடி ஜலம் 1720 கன அடி ஆவியாகும். இந்த ஆவியில் ஒரு காகிதத்தைக் காட்டு. என்ன காண்கிறாய் காகிதத்தில்?

கண்ணன்: காகிதம் நனைந்து போயிற்று. நீர்த்துளிகள் விழுகின்றன. ஆவி நீர்த்துளிகளாய்விட்டது.

அண்ணா: இந்த ஆவி முழுவதையும் நீராக்கி விடலாம். நீரை மீண்டும் குளிர வைத்துப் பனிக்கட்டியாக்கிவிடலாம். இந்தமாதிரியேதான் மலைப்பனியானது வெயிலால் நீராகி, ஆறாகி, ஆறு கடலில் விழுந்து மறுபடியும் கதிர்வெப்பத்தால் ஆவியாகி, ஆவி மழையாகி மழை மண்ணில் பயிர்களை வளர்த்து, ஆறாக ஓடி மீண்டும் கடலில் சேர்ந்து ஆவியாகிறது. அதனால், ஒன்று மற்றொன்றாக மாறுகிறதே யொழிய அழிவதில்லை.

கண்ணன்: ஆனால் பொருளுக்கு அழிவில்லையா? நீர் ஆவியானால் அதைக் குளிர வைத்து நீராக்கிவிடலாம். நஷ்டமில்லை. சூடன் எரிந்து நேராக ஆவியாகிறதே. ஒரு மெழுகுதிரி எரிந்து போய்விடுகிறதே; அழிந்துபோய்விடுகிறதே?

அண்ணா: இதை நாம் ரசாயனம் கற்கும்போது அறியலாம். பூ கனியாகிக் கனி விதையாகி விதை செடியாகி செடி மரமாகி மரம் மண்ணாகி மண் உரமாகி மீண்டும் செடிகளை வளர்க்கிறதல்லவா? இயற்கையில் எல்லாம் மாறும்; ஆனால் அழியாது. கண்ணா, இன்று கட்டிப் பொருள், திரவப்பொருள், காற்றுப் பொருள் இவற்றின் நிலைமையை அறிந்தோம். நம்மைச்சுற்றியுள்ள இப்பொருள்களின் தன்மைகளை நீ இன்று பரிசோதித்து அறிந்ததை நாளை என்னிடம் வந்து சொல்லவேண்டும். உதாரணமாகக் கல் உடைகிறது, கண்ணாடி நொறுங்குகிறது, சுண்ணாம்புக் கட்டி பொடியாகிறது, அரிசி மாவாகிறது. இந்த மாதிரி.



தஞ்சை இராஜராஜேசுவரம்

ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்.
(தஞ்சை அரசர் திருக்கோயில் கண்காணிப்பாளர்)

2

இராசராசன் இப்பெரிய கோயிலுக்கென்று ஏற்படுத்திய நிபந்தங்கள் மிகப் பலவாம். கோயிலுக்கு வேண்டிய அமைப்புக்களில் ஒன்றனையும் குறைவுபடாது செய்வதையே அவ்வரசன் தன் வாழ்வின் பயனாகக் கொண்டான். தான் புரிந்த போர்களில் வென்ற சொத்துக்கள் யாவற்றையும் அக்கோயிலுக்கே அளித்தனன். நானாவித ஆபரணங்களும், பாத்திரங்களும், நெல் விளையும் கிராமங்கள் பலவும், தினவிதிகளுக்கும் விழாக்களுக்கும் வேண்டிய அளவு பொன்னும் பொருளும், கடவுட்குச் சூட்ட நறுமலரும் நாடோறும் பெறத் தந்து வந்ததோடு தீபங்களுக்கு நாடோறும் விளக்கு ஒன்றினுக்கு உழக்கு விழுக்காடு, நெய் அளப்பதற்கு ஆடு, பசு, எருமை என்ற மூவினமும் இடையர்கள் பெறத்தந்து, என்றைக்கும் யாவும் மிகவும் தாராளமாகத் தருமாறு வரும்படியமைத்துத் திருப்பணியை நிலைபெறச் செய்தான்.

இக்கோயிலில் சிறுகாலை, உச்சம் போது, இராவை என்ற மூன்று காலத்தும் பூசை நடைபெற்றது.

"ஸ்ரீராஜ ராஜீச்வரமுடையார் ஆடியருளும் திருமஞ்சன நீரிலும், தண்ணீர் மீதிலுமிடப் பெருஞ்சண்பக மொட்டுக்கும், ஏல வரிசிக்கும், இலாமச்சத்திற்கும்"

என்னும் சாஸனப் பகுதியால், பெருஞ் சண்பகமொட்டு, ஏலவரிசி இலாமச்சம் ஆகிய இவைகளை ஊறவைத்த நீரால் திருமஞ்சனம் ஆட்டினமை அறியலாம். பழவரிசியாற் சமைத்த போனகம், நெய்யமுது, தயிரமுது, நாடோறும் திருவமுது, அடைக்காயமுது, கறியமுது, பருப்பமுது, வெள்ளிலை யமுது என்பவற்றுடன், திருவிழாக்காலங்களில் பருப்பு, பழவரிசி, மிளகு, சீரகம், சர்க்

கனை, கடுகு, நெய் என்ற இவற்றோடு செய்த அப்பக்காய்க் கறியமுதும், பொறிக்கறியமுதும், மிளகு, சீரகம், சர்க்கரை, கொள்ளு, வாழைப்பழம், புளி, தயிர், நெய், கடுகு இவைகொண்ட புளிங்கறியமுதும், புளியிட்டடுங் கறியமுதும் நிவேதிக்கப்பட்டன. அச்சமயத்தில் நாற்பத்தெண்மர் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய, ஆரியமும் தமிழும் பாடுபவர் பாட, கனபாடிகள் சாமகானம் செய்திட, மத்தளம், பக்கவாத்தியம், வீணைகளுடன் காந்தர்விகள் இன்னிசைபாடி நடனம் செய்தனர். மொரலியம், வங்கியம், பாடவியம், உடுக்கை, முத்திரைச் சங்கம் முதலிய இசைக்கருவிகள் முழங்கின. நெய்கொண்டு திருவிளக்குகள் எண்ணிறந்தன எரிந்தன.

இராஜராஜேசுவரமுடையாருக்கு இராசராசசோழ தேவரால் வைரம், வைடூரியம், கோமேதகம், முத்து முதலிய நவரத்தினங்களாலாகிய ஆபரணங்கள், பொன் வெள்ளியாலாகிய பாண்டங்கள் பல, பொன்னாற்செய்து சிவபாதசேகரன் என்றும் ராஜராஜன் என்றும் செதுக்கிய காளங்கள், திருப்பள்ளித் தொங்கல் மகுடம், தவளச்சத்திர மகுடம், வண்ணிகைத் திருக்கொற்றக் குடைமகுடம், ஈச்சோப்பிகை, வெண்சாமரக்கை, காளாஞ்சி முதலிய திருச்சின்னங்களும், ஸ்ரீமுடி, வீரபட்டம், திரு உதரபந்தனம், திருவடிக் காறை, திருப்பட்டிகை, சப்தசரி, பஞ்சசரி, திருக்குதம்பை, தோடு, ராஜாவர்த்தம், திரள் மணிவடம், தாலி மணிவடம், ஸ்ரீ சந்தம் முதலிய பொன்னாபரணங்களும், வடுகவாளி, முத்துமாத்திரை, பஞ்சசரி, ஏகாவல்லி, முத்தின் சூடகம், திருக்கால் வடம் முதலிய முத்தாபரணங்களும், கண்டநாண், புல்லிகைக்கண்ட நாண், பாசமாலை, மாணிக்கத்தின் தாலி, ஸ்ரீ வாகுவலயம், பதக்கம், ரத்னவளையல், ரத்னகடகம், ரத்னமோதிரம் நவரத்னமோதிரம், பிருஷ்டகண்டிகை முதலிய ரத்னாபரணங்களும் பொன்னாலும் வெள்ளியாலும் செய்த ஒட்டுவட்டில், கலசம், குடம், தட்டம், குறுமடல், கிடாரம் முதலிய பரிகலங்களும் வழங்கப்பெற்றன.*

---

* S. I. I. Vol. II. ii Pp. 203—217 also Ins. 69 of 1888. சோழர் காலத்து அணிகலன்களின் அட்டவணை என விரிவாகக் காணலாம். ஆபரணங்களைக் கூறுமிடத்து அரக்கு, செப்பாணி, சரடுகளை நீக்கிப் பொன்னை நிறையெடுத்து, அவற்றில் நவமணிகள் பதிப்பிக்கப் பெற்றிருப்பின் அவை இத்துணை, இவ்வளவு நிறையுடையன, இன்ன இன்ன தன்மையுடையன என்றுரைத்து, விலை இத்தனை காசு என்றும் கண்டிருப்பது வியக்கத் தக்கது. இரத்தினங்களைக் குறிக்குமிடத்து, பொறிவு, முறிவு, காகபிந்து, ரத்தபிந்து என்ற இவ்விதங்களிலெல்லாம் அவை குறைவுபட்டன என்றும் காணக்கிடக்கின்றது. ஒருவித ஆபரணத்திற்குச் 'சோனகச்

கோயில் காரியம் பார்ப்பவரை ஸ்ரீ காரியம் பார்ப்பவர் எனவும், அவரைக் கண்காணிப்பவரை ஸ்ரீகாரியக் கண்காணி நாயகம் எனவும் அக்காலத்தில் அழைத்தனர். திருச்சந்நிதியில் தேவாரத் திருமுறைகளை விண்ணப்பஞ் செய்வதற்காக இசைத்தமிழில் வல்லார் நாற்பத்தெண்மர், உடுக்கைவாசிப்பான் ஒருவன், கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவனுடன் ஐம்பதின்மர் இருந்தனர். இவர்களையன்றிக் கனபாடி, ஆரியம் பாடுவார், தமிழிசை பாடுவாராகியவர்களும் இருந்தனர். இராசராசன் பாடலிலும், ஆடலிலும் மிக்க ஆர்வமுடையவன். இராச வித்யாதரன் என்ற பெயரும் அவனுக்குண்டு. இவ்வாலயத்துக்குரிய பணிகளைக் குறைவின்றிச் செய்யவும், நடனம் புரியவும், சோழநாட்டுப் பிற கோயில்களினின்றும் பதியிலார் நானூறு பேர்களைக் கொணர்ந்து இராஜராஜேசுவரத்தை அடுத்து வடபுறத்திலும் தென்புறத்திலும் தனித்தனி மனைகள் கட்டிக்கொடுத்தும், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலி நிலமும் தந்து அவர்களைக் கோயிற்பணியிற் புகுத்தி யாதரித்தான். அவர்களுள் ஆடல் பாடல்களில் தேர்ச்சியுள்ளார் பலர் இருந்தனர். அவர்களுள் பாடுவோர் காந்தர்விகள் எனவும், அவர்களுக்குப் பாடங் கற்பித்தவர் காந்தர்வர் எனவும் அழைக்கப் பட்டனர். பின்னவர் எழுபத்தைவராவர். மற்றும் கொட்டி மத்தளக்காரர், பக்கவாத்தியக்காரர், வீணைவாசிப்பவர், மொரலியம், வங்கியம், பாடவியம், உடுக்கை, முத்திரைச் சங்கு முதலிய இசைக்கருவி முழக்குவோர் என்னும் வகையினர் பலர் இருந்தனர். உவச்சுப்பறை, சகடை, கரடிகை என்னும் பறை விசேடங்களும் இருந்தன. மற்றும் இக்கோயிலில் பண்டாரிகள் (பொக்கிஷதார்), கணக்கர், மெய்காப்பார், பரிசாரகம் செய்பவர், திருவிளக்கிடுவார், திருப்பள்ளித் தொங்கல் பிடிப்பவர் (மாலை கட்டுவோர்), வண்ணமிடுவார் (கோலமிடுவோர்), சோதிடர், தச்சர், தட்டார், கன்னர், குயவர், தையார் (தையற்காரர்), நாவிதர், வண்ணார் முதலியோர்களும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவர்களுக்குப் பரம்பரையாக வேலை கொடுக்கப்பட்டு வந்தது. இவர்கள் யாவரும் சம்பளமாகப் பெற்றது நெல்லாகும்.

சோழர் முன்னோனாகிய முசுகுந்த சக்கரவர்த்தி பிரதிட்டை செய்த, 'ஆரூர்த்தியாகேசர் பதம் பணிந்து செங்கோலோச்சி யலகில் புகழ் பெறு ராசராசமன்னன்' தஞ்சையில் கோயில் அமைப்பதற்கு முன்னர்த் திருவாரூர்த்தியாகேசரை நாடோறும்

சிடுக்கின்கூடு' என்றிருத்தலும், சோனகன் என்ற பதம் அக்காலத்தில் கிரேக்கர்களையும் அரபியர்களையுமே குறித்ததும் கவனிக்கத்தக்கன.

சென்று வழிபட்டுவந்தான்; அதனல் தஞ்சைக் கோயிலை அமைத்த பொழுது திருவாரூர்க் கோயிலிலுள்ள ஏற்பாடுகளையே பிறகு பின்பற்றியதாகத் தெரிகிறது.[1]

இத்தலத்திற்குரிய ஆகமம், மகுடாகமம்.[2] தீர்த்தம் சிவ கங்கை. அப்பர் சுவாமிகள் தேவாரத்தில் கூறியுள்ள தஞ்சை தளிக்குளம் இதுவே என்பர். இதன் நடுவே சிவலிங்கத்திருவுருவம் உண்டு. தேரைத் (மண்டூக) தீர்த்தம் எனப்பட்ட குளமொன்று இப்பொழுது உள்ள நடராசர் திருமண்டபத்தையடுத்து இருந்தது எனவும், அது இப்போது மூடப்பெற்று ஒரு கிணறளவே அவ்விடத்தில் இருப்பதாகவும் சரபோஜி மன்னர் கல்வெட்டு[3] ஒன்று குறிக்கின்றது.

இவ்வாலயத்துள்ள பெரியநந்தி ஒரே கல்லில் செதுக்கப் பெற்று இறைவன் சந்நிதிக்கு எதிரே உயர்ந்ததோர்மேடைமண்டபத்தில் உள்ளது. இந்தியாவில் உள்ள பெரிய நந்திகளுள் இஃது இரண்டாவதாகும்.[4] பன்னிரண்டடி உயரமும் பத்தொன்

---

1. இதன் உண்மை இப்போது காணப்படுவனவற்றுள், "திருவாரூர்க் கோயிலில் தியாகேசர் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது போலத் தஞ்சைப்பெருவுடையார் கோயிலிலும் தியாகேசர் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறார். திருவாரூர்த் தியாகராஜாவுக்கு விடங்கர் என்று பெயர் இருப்பதுபோலத் தஞ்சையிலும் விடங்கரென்றே பெயர். திருவாரூரில் தியாகராஜாவுக்குரியது அஜபாநடனம். தஞ்சையிலுமஃதே. திருவாரூர்க் கோயிலில் நடைபெறுவது போலத் தஞ்சையிலும் வஸந்தோத்ஸவம் 18 நாள் நடைபெறுகின்றது. திருவாரூரில் தியாகராஜாவுக்குரிய சுத்த மத்தளம், எக்காளம் தஞ்சையிலும் உள. திருவாரூரில் தியாகராஜா எந்தெந்தத் தினங்களில் எவ்வாறு புறப்படுகின்றாரோ அவவிதமே தஞ்சையிலும். திருவாரூரில் தியாகராஜாவுக்குப் பூஜை நடந்தபின் மூலலிங்கத்துக்குப் பூஜை தஞ்சையிலும் அவ்விதம். திருவாரூரில் உற்சவத்தில் குறவஞ்சி நாடகம் நடைபெறும்; தஞ்சையிலும் குறவஞ்சி நாடகம் உற்சவ காலத்தில் நடைபெற்றுவருகிறது. திருவாரூரில் சிலகாலமாய்க் குறவஞ்சி நடைபெறுவது நழுவியிருப்பதாகத் தெரிகிறது. திருவாரூரில் சுவாமி புறப்படும்போது சுந்தரமூர்த்திகள் விக்கிரகம் முன்கொண்டு போவது வழக்கம். ஆனல் ராஜேந்திரன் காலத்தில் அந்த ஸ்தானத்தில் தன் பிதாவாகிய ராஜராஜனது விக்கிரகத்தைக் கொண்டு போகும்படி ஏற்பாடு செய்தான். அஃது இன்னும் நடைபெறுகிறது." —K. S. ஸ்ரீனிவாசபிள்ளையவர்கள், தமிழ் வரலாறு, ii. 162.

2. Grantha Ms. No. 1526 of Tanjore Palace Saraswathi Mahal Library; Burnell's list No. 11428.

3. Ann. Rep., 1924; Ins. No. 419.

4. முதலாவது அனந்தபூர் ஜில்லா லேபாக்ஷியிலுள்ளதாகும்.

பதரை அடி நீளமும் எட்டேகால்அடி அகலமும் உடையது. இது கால அளவில் வளர்ந்து வந்ததாகவும், அதனைத் தடைப்படுத்த முதுகின் பின்புறத்தில் ஓர் ஆணி அறைந்ததாக ஒரு கதையும், அதன் வளர்ச்சிக்குக் காரணமாக அதனின் உள்ளிருந்த தேரை ஒன்றை எடுப்பித்துத் தேரையைத் தீர்த்தத்தில் சேர்ப்பித்தாரென ஒருகதையும், இவற்றைப்போல மற்றும் பலகதைகளும் உண்டு. இந்நந்தியானது திருச்சிராப்பள்ளி ஜில்லா பெரம்பலூருக்கு அணித்தான பச்சை மலையினின்றும் கொணரப்பட்டதென்பர். இந் நந்திமண்டபத் தூண்களில் தஞ்சை நாயக்க அரசர்களின் பிரதிமைகள் காணப்படுவதால், இம்மண்டபம் அவர்களால் கட்டப்பட்டதாகுமென்று தெரியவருகிறது.

ஆலயத்திலுள்ள சிவசொத்துக்களைக் கண்காணிக்கும் முக்கிய அதிகாரி சண்டேசுவரர். அவர் பெயராலேயே கோயில்களின் வரவு செலவுக் கணக்குகள் எழுதுவதும், விலைகொள்வதும், விற்பதும் வழக்கமாக நடைபெற்று வந்தது. ஆதலால் முதல் பிராகாரத்தில் அவருக்கு மாத்திரமே இறைவன் சந்நிதியை அடுத்துக் கோயில் கட்டுவது முற்கால வழக்கம். அதற்கிணங்க இராசராசனும் பிராகாரத்தில் சண்டேசுவரருக்கு ஆலயம் கட்டுவித்து இக்கோயிலைச் சார்ந்தவை யாவும் அவர்பெயரால் நடைபெற ஏற்பாடுசெய்தான். இச்சந்நிதியையும், கோயிலின் கீழ்ப்பக்கமுள்ள இராசராசன் திருவாயில் கோபுரத்தையும் இராசராசன் தனது இருபதாம் ஆட்சி யாண்டில் முந்நீர்ப்பழந் தீவுபன்னிராயிரத்தையும் வென்றதற்கு முன்பே கட்டியிருக்கிருக்க வேண்டும். இராஜராஜேசுவரர் கோயிலையடுத்து சண்டேசுவரர் கோயில்மட்டுமே முதற் பிராகாரத்தில் அந்த நாளில் கட்டப் பெற்றது.

மற்றச் சந்நிதிகள் அதற்கு அடுத்த பிராகாரங்களில் இருந்திருத்தல் கூடும். பிற்காலத்தில் அவை யாவும் முதற்பிராகாரத்துள் கொணர்ந்து கட்டப்பட்டிருத்தல்வேண்டும். உமாபரமேசுவரியின் கோயில் இவ்வாலயத்திற்கு வடபுறத்தில் உள்ள சிவகங்கைத் தோட்டத்தில் முன்னம் இருந்தது. பின்பு ஒரு நாயக்க மன்னர் காலத்தில் இப்போதிருக்கும் இடத்தில் அமைக்கப் பெற்றது. அக்காலத்தில் அம்பிகையின் திருநாமம் **உலகமுழுதுடையாள்** என்று வழங்கிவந்தது.

கோயிலின் வடமேற்குப் பிராகாரத்தில் உள்ள ஆறுமுகப் பெருமானின் கோயில் தென்னிந்தியச் சிற்பவேலைகளுள் சிறந்த தொன்றும். இதன் சிற்ப நுட்பங்களைக் கவனிக்குமிடத்து இது கட்டப்பெற்ற காலம் 12-ஆவது நூற்றாண்டாகக் கூறலாம். இக்

கோயில்களிலுள்ள கல்வெட்டுகளில் ஒன்றுமே இதனைப் பற்றிக் கூறவில்லை.[1] இக்கோயில் தஞ்சையில் ஆட்சிபுரிந்த நாயக்கர் காலத்ததென்றும், அக்காலத்தில் இக்கோயிலில் பலவகைச் சிற்பங்களை அமைத்த சிற்பி ஒருவன் ஆழ்ந்த கவனத்தோடு வேலை செய்துகொண்டிருக்குமளவில் அதனைக் காணவந்த அரசனது கையால் கொடுக்கப்பட்ட அடைக்காயை உண்டு உண்மைதெரிந்து தனது அறியாமைக்குப் பரிகாரமாகத் தன் திறமையெல்லாம் விளங்க இக்கோயிலை நிருபணஞ் செய்தான் என்ற ஒரு கதையும் உண்டு.[2]

ஆறுமுகப்பெருமானின் திவ்யசொரூபம் மிக்க வனப்புடையது. அவரைப்பற்றி அருணகிரியார் திருப்புகழில் மூன்று பாக்களும் பாடியுள்ளார்.. இக்கோயிலின் துவாரபாலகர் உருவங்கள் மாசற்ற கருங்கல்லால் அழகுற அமைக்கப்பெற்றுள்ளன. (படம் பார்க்க).

பரிவார ஆலயத்துப் பிள்ளையாராகிய சுற்றுக்கோயிற் பிள்ளையார் மேலைச் சுற்றாலயத்து வீற்றிருப்பதால் இற்றை நாளில் காணப்படும் கணபதி கோயிலை, தஞ்சை மகாராஷ்டிர மன்னராகிய இரண்டாம் சரபோஜி கி.பி. 1802-3ல் எடுத்தனரென்பர். கோயில் தென்னண்டைச் சுற்றாலயத்தில் செதுக்கியுள்ள கல்வெட்டு ஒன்றால் கணபதி கோயிலை எடுப்பித்தும் பழைய கணபதி விக்கிரகத்தை எடுத்துப் புதியதொன்றைப் பிரதிட்டித்தும் தக்ஷிணாமூர்த்தி சந்நிதிக்குப் படிகள் எடுப்பித்தும், பெருவுடையாருக்கு வெள்ளியால் ரிஷபமுதலிய வாகனங்களும், பல ஆபரணங்களும் கொடுத்தும், கோவிலுக்குத் தளவரிசை போட்டும் பல திருப்பணிகள் செய்தனரென்று தெரிகிறது.[3]

கோயிலின் உட்பிராகார வடகிழக்கில் காணப்படும் நடராசப் பெருமானின் சந்நிதியும் பிற்காலத்ததே. நாற்புறமும் திருமதில்களுக்கடுத்த திருச்சுற்று மாளிகைகள் இராசராசன் ஆணையின் மேல் கட்டப்பெற்றன. அவ்வரசர்பிரான் தன் சேனாதிபதியும், மந்திரவோலை நாயகமுமான கிருஷ்ணன் ராமனான மும்மடிச் சோழ பிரம மாராயனைக்கொண்டு மேற்புறத்தையும் தெற்கில் உள்ள பிரா

1. இக்கோயில் கி. பி. 1600-ஆம் ஆண்டுக்கு முன் கட்டப்பட்டிருக்க முடியாது என்று புதுச்சேரி டாக்டர் டுவே. துப்பராய் என்னும் பிரெஞ்சு அறிஞர் சிற்ப முறையில் ஆராய்ந்து கூறுகிறார். Archaeologie Sud de l' Inde Tome, I, Architecture.

2. இத்தகைய வரலாறு மதுரை நாயக்கர் வமிசத்துத் திருப்பணிகளைப் பற்றியும் வேறு சில கோயில்களைப்பற்றியும்கூட வழங்கும்.

3. An. Rep. 1925; Ins. No. 423.

காரத்தையும் கட்டினனென்றும், மற்ற இருபுறங்களிலுமுள்ள பிராகாரங்களை அவனே முற்றுவித்தானென்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன. மேற்கு, வடக்கு, திருச்சுற்றுலைகளிலுள்ள லிங்கங்கள் மகாராஷ்டிர மன்னர் காலத்துப் பிரதிட்டை செய்யப்பெற்றன வென்பர். அதனிடையே திக்குப்பாலகர் எண்மருக்கும் அவரவர்க்குரிய திசைகளில் சிறிய ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன. இக்காலத்தில் அவற்றின் மீது கற்கலசங்களே காணப்படுகின்றன. ஆனல் பொற்றகடு சுருக்கின செப்புக்குடங்கள் இராசராசனுடைய குருக்கள் ஈசான சிவபண்டிதரால் கொடுக்கப்பட்டன என்னும் செய்தி ஒரு சாஸனத்தால் விளங்குகின்றது.

இக்கோயில் மேலைப்பிராகாரத்தில் வேம்பும் மந்தாரையும் நிற்கின்ற கிழக்கு நோக்கிய கருவூரார் மேடை ஒன்று இருந்து வந்தது. சற்றேறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகட்கு முன்னர், கருவூரார் கோயிலென அவ்விடத்தில் ஒரு சிறு கோயில் அமைக்கப்பெற்றது; அங்கே யோகியார் உருவச்சிலையமைத்து நாடோறும் பூசையும் வியாழன்தோறும் சிறப்புறு பூசனைகளும் புரிந்து வழிபட்டு வருவதை யாவரும் காணலாம். இவரே இராசராசன் காலத்து இங்கே வந்துதவிய சித்தர் பெருமானுதல் வேண்டும். இவரைப்பற்றிச் சித்தர் நூல்களில் விரிவாகக் காணலாம். கருவூர்ப் புராணத்தில் கூறப்பெற்றவர் திருவிசைப்பாப் பதிகங்களின் ஆசிரியரான கருவூர்த் தேவரெனவும், அவர் "இராசராசேச்சரம்," 'கங்கைகொண்ட சோழபுரம்' ஆகிய இவ்விரு பெரிய கோயில்களின் மீதும் பாடல்கள் இயற்றினமையின் இராசராசனுக்கு உடன் இருந்தவராகவோ பிற்பட்டவராகவோ இருத்தல் வேண்டுமெனவும் சிலர் கூறுவர். இவற்றின் உண்மை ஆராயற்பாலது.

அக்காலத்துத் திருவிசைப்பா ஆசிரியர் இறைவன் கோயிலை,

"இஞ்சிசூழ் தஞ்சை யிராசரா சேச்சரத் திவர்க்கே"

எனக் குறித்திருப்பதால் இக்கோயில் நகரின் மத்தியில் அமைந்திருத்தல் வேண்டுமென்றும் தோற்றுகிறது. கால இயல்பாலும், அரசியற் குழப்பத்தாலும், பிற்காலத்தில் நகரம் குன்றி இருகூறுக்கப்பட்ட தென்பது புலப்படும். இக்காலந் தொட்டே கோயிற் சிறப்புக்களில், மற்ற நகர வழக்கத்திற்கு மாறுக இறைவன் கோயிலைச் சுற்றிவாராமல் நகரை வலம்வரும் ஏற்பாடு உண்டான தென்பதை அறியலாம்.

இத்தலத்திற்குப் பிருகதீசுவர மாகாத்மியம், சமீவனக்ஷேத்திர மாகாத்மியம் என இரண்டு வடமொழிப் புராணங்களும் மேற்கூறிய திருவிசைப்பாத் திருப்பதிகமும், திருப்புகழில் மூன்று பாக்களும்,



ஆறுமுகப் பெருமானின் சந்நிதியிலுள்ள
துவாரபாலகர் உருவங்களில் ஒன்று

(Copy right: Archaeological Survey of India.



சரபோஜியும் அவருடைய குமாரர் சிவாஜியும்
(ஓர் ஓவியத்திலிருந்து)

கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய 'தஞ்சைப் பெருவுடையாருலா' என்ற பிரபந்தமும் உள்ளன.

இராசராசன் இப்பெரிய கோயிலை எடுப்பித்ததன் பயனைக் குடிகள் அரசன்பால் மிக்க அன்புபாராட்டி அச்சோழன் காலத்தில் வைகாசிப் பெரிய விழாவில் 'இராஜராஜேசுவர நாடகம்' என்னும் ஒரு நாடகத்தை இக்கோயிலில் நடத்தி வந்தனர். இவன் மகன் இராஜேந்திரன் அரசாட்சியின் நான்காம் ஆண்டில் இந் நாடகம் ஆடுவோனுக்கு ஆண்டாண்டுதோறும் நூற்றிருபது கல நெல் ஏற்பாடு செய்யப்பட்டதென ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது. அக்காலத்தில் நடனங்களும், நாடகங்களும் அநேகமாய் ஆலயங்களிலுள்ள அரங்கமண்டபங்களிலேயே நடைபெற்றன. திருவிசைப்பா ஆசிரியர்,

" மின்னெடும் புருவத் திளமயி லனையார் விலங்கல்செய் நாடக சாலை
யின்னடம் பயிலு மிஞ்சிசூழ் தஞ்சை"

எனக் கூறுவதால் நகரில் பல ஆடரங்கும் நாடக சாலையும் இருந்தன எனலாம். மற்றும் இசை நாடகங்களில் வல்ல நாடகமய்யன், சாக்கை, கானபாடி, காமரப்பேரரையன், வாத்திய மாராயன் முதலியோரும் இருந்தனரெனத் தெரிகிறது.

இராஜராஜேசுவர நாடகம் வெகுகாலமாக வழக்கில் இல்லை. தஞ்சையில் பிற்காலத்து அரசாண்ட சரபோஜி II மன்னர் கால முதல் அம்மன்னர் மீது கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய 'சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்'* என்ற நூலை ஆதாரமாகக் கொண்டு இக்கோயில் சைத்ர ஆண்டு விழாவில் அஷ்டக்கொடி விழா வன்று இக்குறவஞ்சி நாடகம் நடைபெற்று வருகிறது.

---

* இந்நூல் ஸ்ரீ மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களால் குறிப்புரையுடன் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இக்குறவஞ்சி, நாடகவகையுள் சேர்ந்தது. இஃது அஷ்டக்கொடிக் குறவஞ்சி என்றும், குறவஞ்சி நாட்டியம் என்றும் வழங்கும். குறத்தியின் இயல்பு, அவள் குறி கூறுதல், அவளைக் குறவன் தேடி வந்து காணுதல், முதலிய செய்திகள் இதன்பால் அமைந்திருத்தலின் குறவஞ்சி எனப் பெயர் பெற்றதுபோலும். இக்கூத்து எவ்விதம் நடத்தப்படுகின்றதென்பது இங்கே கூறற்பாலது. குறவஞ்சிக் கூத்தில் வாயால் பாடுகிறவர்களும், கருவியில் வாசிக்கிறவர்களும் கலந்து கொள்ளுகிறார்கள். நடனமாதர்கள் குறைந்தது நால்வர் குறவஞ்சிப் பாட்டுக்களைத் தக்க இராகங்களில் பாடி ஆடுகிறவர்களது திறமைக்குத் தக்கபடி நடித்து மகிழ்விக்கின்றனர்.

காப்பும் மங்களமும் கூறியபின் கட்டியக்காரன் தோன்றிச் சரபோஜி மன்னரின் வீரப்பிரதாபங்களைப் பற்றி உரத்த குரலில் சொல்லி

சோழர் காலத்தில் மாதந்தோறும் திங்கள் விழாவென இராசராசன் பிறந்தநாளாகிய சதயநாள் விழாப்பன்னிரண்டும் கார்த்திகைத் திங்கள் கார்த்திகைநாள் ஒன்றும் ஆகப் பதின்மூன்று நடைபெறும். இம்மாத விழாக்களன்றி ஆண்டுவிழாவாக வைகாசிப் பெரிய விழாவும் நடைபெற்றது. பெரிய திருவிழாவுக்குக் கொடியேற்று நாளையும், ஆடவல்லான் எழுந்தருளும் நாளையும் பறையறைந்து தெரிவிப்பர். அஃது ஒன்பதுநாள் நடைபெற்றது. பின்பு திருவாரூர்க் கோயிலில் நடைபெறுவதுபோல இவ்வாட்டைவிழா பதினெட்டு நாளாகச் சித்திரையில் நடைபெற்று வருகிறது. மற்றும் வசந்தவிழா, திருவாதிரை, முதலிய பல விழாக்களும் நடைபெற்றுவந்தன. 1934-ஆம் ஆண்டுமுதல் இராசராச சோழனின் ஜன்மதினமான சதய விழாவும் தொடங்கப்பெற்று ஐப்பசிதோறும் நடந்துவருகிறது.

இராஜராஜேசுவரத்திலுள்ள கல்வெட்டுகள் பலவாகும். இராசராசன் காலத்தவை,

"நாம் குடுத்தனவும், அக்கன் குடுத்தனவும், நம் பெண்டுகள் குடுத்தனவும் மற்றும் குடுத்தார் குடுத்தனவும் வெட்டுக"

என அவன் மொழிந்த முறைப்படி வெட்டப்பட்டுள்ளன. அவைகளுள் இராசராசனும், அவன் தமக்கை குந்தவையாரும் கொடுத்தனமட்டும் நடு விமானத்திலும், பெண்டிரும் பிறரும் தந்தவையாவும் மற்றவிடத்திலும் காணப்படுகின்றன.

அரசன் பவனி வருதலைக் கூறி, பின் நடைபெறவிருக்கிற கூத்து யாதொரு விக்கினமுமின்றி முடிவுறுமாறு கடவுளைப் பிரார்த்திக்கும்படி அவன் சபையோர்களைக் கேட்டுக் கொள்ளுகிறான். பின்னர், தெருக்கூத்தில் நடைபெறுவதுபோல், ஒரு பெண் விநாயகர் வேடம் தரித்துக் கொண்டு சபைக்கு வந்து முன்னும் பின்னுமாக அசைந்து ஒரு சாதாரண நர்த்தனம் புரிவாள். அப்போது கட்டியக்காரன் அந்தப் பிள்ளையாரை நோக்கி இக்கூத்து யாதோர் இடையூறுமின்றி நடைபெறும்படி கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்திப்பான். அதன்பிறகு இருவரும் மறைந்து விடுவார்கள்.

பின்பு தலைவன் பவனிவருகையும் தலைவியொருத்தி (மோஹினி) அவனைக்கண்டு காமுறுதலும் நிகழும். மோஹினியின் தோழிகள் திடீரெனச் சபைக்கெதிரில் தோன்றி நுட்பமும், திறமையும், அழகும், இனிமையும் பொருந்திய நடனம் புரிவார்கள். அவற்றின்பின் மோஹினியும் சபைமுன் தோன்றி சரபோஜிமன்னர்மீது கொண்டுள்ள விரக வேதனையால், மன்மதனையும், சந்திரன், தென்றல், குயில் முதலியவற்றையும் நிந்தித்துப் புலம்பித் தன் காதலைத் தன் தோழியருக்கு உணர்த்துவாள். தங்கள் தலைவி விரகதாபத்தால் படும்பாட்டைத் தோழி

விமானத்தின் வடபுறத்தில், திருமஞ்சன நீர் வந்து விழும் இடத்திற்கு அருகில் "ஏதத் விச்வச்ரேணி மௌலி" எனத் தொடங்கும் கல்வெட்டே முதன்முதலில் வெட்டியதாகும். இவைகளையும் பிற்போந்தார் காலத்து வெட்டிய கல்வெட்டுகளையும் அரசாங்கக் கல்வெட்டு ஆராய்ச்சி இலாகாவினர் அரிய குறிப்புக்களுடன் வெளியிட்டிருக்கின்றனர். இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் இராசராசன் காலத்தவை 64. இராஜேந்திரன்காலத்தவை 29. முதல் குலோத்துங்கனது 1. விக்கிரமசோழனது 1. கோனேரின்மை கொண்டான் காலத்தவை 3. மற்றும் நாயக்க அரசர்கள் சரபோஜி II முதலியவர்களுடைய கல்வெட்டுகள் பலவும் உண்டு. குறிப்பாக இராசராசன் கல்வெட்டுகளால் அக்காலத்தில் பலராலும் பிரதிட்டை செய்விக்கப்பட்டுள்ள திருமேனிகள், அவைகளுக்கு அவர்கள் கொடுத்த விளை நிலங்கள், திருப்பரிகலங்கள், திருச்சின்னங்கள், திருவாபரணங்கள் முதலியவற்றிற்கு விவரமும், எவரும் எவ்விதக் குறையும் கூறுவதற்கு இடமின்றி உப்புமுதல் கற்பூரம் வரைக்கும் வேண்டிய எல்லாப் பண்டங்கட்கும் செய்யப்பட்டுள்ள ஏற்பாடும் பிறவும் நன்கு உணரலாகும்.

பெருவுடையார் (பிருகதீசுவரர்) மூலத்தானத்து உள் சுற்று மாளிகையில் சுமார் 930 ஆண்டுகள் மறைபட்டிருந்த பொக்கிஷமாகிய அரிய ஓவியங்கள் 1931-ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துச் சரித்திர உதவியாசிரியர் ஸ்ரீமான் எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை, எம். ஏ., அவர்களால் கண்டு பிடிக்கப்

யர் பார்த்து, அவள் காதலனை அவளிடம் எவ்வாறு கொண்டு சேர்ப்பதென்று வகைதெரியாது திகைத்து நிற்பார்கள். அப்போது மோஹினி சோகமேலிட்டு மெய் சோர்ந்து கீழே விழப்போவாள். அத்தருணம் மலைகளில் சஞ்சாரம் செய்யும் குறத்தியின் கானத்தைக் கேட்டு உற்சாகங் கொள்ளுவாள். தலைவி அக்குறத்தியை அழைப்பிக்க, அவள்வந்து வாசல் வளம் கூறுவாள். அப்பால், தலைவி குறத்தியை யாரென வினவ, குறத்தி தன் தேசம், மலைவளம், சாதிவளம், நதிவளம், முதலியவற்றைக் கூறுவாள். பிறகு தலைவி, தன் கையைப் பார்த்துக் குறிசொல்லவேண்டுமென்று கேட்டதும், குறத்தி தெய்வங்களை வேண்டிப் பின்பு குறிசொல்லத் தொடங்கித் தலைவியின் உள்ளக்கருத்தை அறிந்து மோஹினியின் காதலைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் சொல்லி, 'தலைவன் உன்னை விரைவில் மணந்தருள்வான்' என்றும் கூறுவாள். இதனுடன் குறவஞ்சி நாடகம் முடிவுபெறும். இக்கோயிலில் நடிக்கப்படும் குறவஞ்சிக் கூத்தில் மோஹினியின் காதல் இவ்வாறு முடிவடைய, நாடகப் பகுதியில் குறத்தி, குறவன், அவன் கையாள் சிங்கன், இவர்களுடைய செய்கைகளும் காதல் நிகழ்ச்சிகளும் கூறப்படுகின்றன.

பட்டுள்ளன. அவை சோழர் காலத்தியவை என்றும், இந்திய ஓவியக் கலைஞானத்தில் மிக்க உயரியதோர் வரிசையில் வைத்தற்குரியவை என்றும் அறிஞர் எண்ணுகின்றனர். சிற்சில ஓவியங்களே இப்போது காணக்கிடக்கின்றன. மற்றவை நாயக்கர் காலத்தில் ஒரு மெல்லிய சுண்ணச் சாந்துப் பூச்சால் மறைபட்டிருக்கின்றன. கிடைத்தவை சைவ சமயகுரவராகிய சுந்தரமூர்த்தி நாயனுருடைய ஜீவிய சரித்திரம், திரிபுர ஸம்ஹாரம், வேறு புராண வரலாறு ஆகியவற்றின் தொடர்புடையவை; காண்போரைப் பரவசப் படுத்தக் கூடியவகையில் இவை தீட்டப்பெற்றுள்ளன. இவை அக்காலத்துக் கலைவளர்ச்சியையும், சிறந்த சைவ சமய உணர்ச்சியையும் புலப்படுத்தி விளங்குகின்றன.*

முற்காலத்தில் கலையிலும் கைத்தொழிலிலும் மேம்பட்டிருந்தாருடைய தொழில் நலத்தைப் பிற்காலத்திற்கு நினைப்பூட்டும் ஞாபகச் சின்னமாகவும், இராசராசன் தன் தலைநகரமாகிய தஞ்சையில் ஜயசீலனுக வீற்றிருந்ததற்கு அடையாளமாக எடுப்பித்த வெற்றி நிலயமாகவும், அவனுக்கு இறைவன்பாலுள்ள அளவில்லாத அன்பைக் காட்டுதற்குரிய ஆபரணமாகவும் இப்பெரிய கோயிலானது விளங்குகிறது. இதன் பரந்த இடமும், சிறந்த சிற்பங்களும், அணிவகுத்த சந்நிதிகளும், பார்ப்போர் மனத்தைப் பரவசப்படுத்தி நின்று நிலவுகின்றன.

---

*இவை, விரைவில் இந்திய அரசாங்கத்தாரால் பாதுகாக்கப்பட்டு அவைகளின் சொந்த வர்ணத்தில் நகல் எடுக்கப்பெறுமென்று தெரிகிறது.

மாயா விநோதினி

ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர்

[ஆசிரியர் அனுமதியுடன் ஸ்ரீமதி தஞ்சம் மொழிபெயர்த்தது.]

(சென்ற இதழ் 156-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருபத்தொன்பதாம் அத்தியாயம்

"சித்தி, எப்பொழுதாவது நீ சித்தப்பாவைப் பற்றி நினைப்பதுண்டா?" என்று ஆசா அன்னபூரணியைக் கேட்டாள்.

அன்ன: அம்மா, நான் பதினோராவது வயதிலேயே விதவையாகிவிட்டேன். என் புருஷரின் உருவச் சாயை கனவிலே கண்டதுபோல் ஞாபகத்திற்கு வருகிறது.

ஆசா: பின் நீ யாரைப்பற்றிய தியானத்தில் சதா ஆழ்ந்திருக்கிறாய்?

அன்ன: என் புருஷர் யாருடைய சரணாரவிந்தத்தை அடைந்தாரோ அப்பகவானைப் பற்றித்தான் சதா தியானிக்கிறேன்.

ஆசா: இதனால் உனக்கு என்ன சுகம் கிடைக்கிறது?

அன்னபூரணி, ஆசாவின் தோள்மேல் அன்புடன் கையை வைத்து, "குழந்தாய், எனது மனோநிலையை நீ எப்படி அறிவாய்? நான் எப்படிப் பகவானை அறிகிறேனோ அப்படியே அவரும் என்னை அறிகிறார்" என்றாள்.

'நானும் இரவு பகலாக என் புருஷரைப்பற்றிய நினைவாகவே இருக்கிறேன்; ஆனால் அவர் என் மனோநிலையை அறிவாரா? எனக்கு நன்றாகக் கடிதம் எழுதக்கூடத் தெரியவில்லை யென்று தான் பதில்கூட எழுதவில்லையோ?' என்று ஆசா சிந்திக்கலானாள்.

அவளுக்கு மஹேந்திரனிடமிருந்து கடிதமே வரவில்லை. 'ஆஹா, என் தோழி மாத்திரம் என் அருகில் இருந்தால் என் மனோநிலையை அறிந்து அப்படியே கடிதம் எழுதிவைத்திருப்பாளே' என்று ஆசா எண்ணி வருந்தினாள்.

மனத்தில் இருப்பதை அப்படியே எடுத்து விளக்கி நன்ருய்க் கடிதம் எழுதவேண்டுமென்று ஆசா எவ்வளவோ முயன்ருள். எழுத்து நன்ருயிருக்கவேண்டுமென்று எவ்வளவு பாடுபட்டும் அது சர்வகோணலாகவே வரும். தனது மனநிலையை விளக்கவோ அவளுக்கு வார்த்தைகளே அகப்படா. 'என் காதல்' என்று ஆரம்பித்து உடனே கீழே கையெழுத்தும் போட்டுத் தான் எழுதும் கடிதங்களிலிருந்து அவளது உள்ளத்தை அறியக்கூடிய சக்தி மஹேந்திரனுக்கு இருக்குமானல் அப்போது அவற்ருல் பயனுண்டு என்று ஆசா நினைத்தாள். இவ்வளவு அன்பையளித்த பகவான் அதைச் சொற்களால் விளக்க அவளுக்குப் பாஷா ஞானம் ஏன் அளிக்கவில்லையோ?

சாயங்கால ஜபம் முடிந்து அன்னபூரணி உட்கார்ந்திருந்தாள். அருகில் மெள்ள அவள் காலைப் பிடித்துக்கொண்டு ஆசாவும் உட்கார்ந்திருந்தாள். சிறிதுநேரம் பேசாதிருந்து பிறகு அவள், "சித்தி, புருஷனைத் தெய்வமென்று நினைத்து வழிபடவேண்டுமென்று நீ சொல்லுகிருயே. மனைவி அறிவற்றவளாயும் கணவனை வழிபடத் தெரியாத மூடமாயுமிருந்தால் என்ன செய்வது?" என்று கேட்டாள்.

அன்னபூரணி ஆசாவின் முகத்தைச் சற்று உற்றுநோக்கினள். பிறகு அன்பு ததும்ப, "குழந்தாய், நானும் அறிவிலிதான். ஆனலும் கடவுளைப் பூஜித்து வழிபட்டுத்தான் வருகிறேன்" என்ருள்.

ஆசா: கடவுள் உன் மனத்தை அறிவார்போல் இருக்கிறது. அதனல் உனது வழிபாட்டால் அவர் சந்தோஷம் அடையலாம். வேறு ஒரு முழுமூடத்தின் பக்தியால் அவர் சந்தோஷமடையாவிட்டாலோ?

அன்ன: எல்லாரையும் திருப்திப்படுத்துவதென்பது யாவராலும் முடியாது. பத்தினி தன் பதிக்குச் செய்யவேண்டிய கடமைகளை வழுவின்றிப் பக்தியுடன் செய்வாளானல் ஒருவேளை அக்கணவன் அவளது சேவையைத் திரஸ்கரித்தாலும், கடவுள் அச்சமயம் அதைத் தாமே ஏற்று அவ்வுத்தமியை ரட்சிப்பார்.

ஆசா பதில் பேசவில்லை. அன்னபூரணி சொல்வதன் அர்த்தமே அவளுக்கு விளங்கவில்லை. அதனல் அவள் மனத்திற்குச் சாந்தியோ சமாதானமோ ஏற்படவில்லை. கணவன் திரஸ்கரித்த சேவையைக் கடவுள் எப்படி ஏற்கக்கூடுமென்று திகைத்தாள்.

அன்னபூரணி அவளை அருகில் அணைத்து முத்தமிட்டு, "கண்ணே, கஷ்டத்தினல் ஏற்படும் அநுபவமும் நீதியும் பேசிக்

கேட்பதனுல் மட்டும் ஒருநாளும் ஏற்படா. உன்னைப்போன்ற வயதில் நானும் வாழ்வில் அநேக கஷ்டங்களை அனுபவித்தேன். எவ்வளவோ பாடுபட்டும் எனது சேவையால் யாரும் திருப்தியடைந்ததாக எனக்குத் தெரியவில்லை. நான் நன்மையையே செய்தாலும் அது அவர்களுக்குத் தீமையாகவே தோன்றும். எனது பிரயாசையெல்லாம் வீணென்று தோன்றவே வாழ்விலேயே வெறுப்பு உண்டாயிற்று. குடும்ப பந்தத்திலிருந்து விலகிக் காசிக்கு வந்துவிட்டேன். ஆனுல் இப்பொழுது என் எண்ணம் அப்படியில்லை. எனது மனச்சாட்சிக்கு விரோதமாக நான் எதுவும் செய்யவில்லை. நான் எனது கடமையைச் சரிவர நிறைவேற்றிவிட்டேன். இனிக் கடவுளின் ஆக்ஞைப்படி நடக்கட்டும். என்னையே நான் கடவுளுக்கு அர்ப்பணம் செய்துவிட்டேன். இனி எனக்குச் சுகதுக்கம் எல்லாம் ஒன்றுதான்'' என்ருள்.

அன்று இரவு முழுதும் ஆசாவுக்கு ஒரே குழப்பந்தான். அன்னபூரணி சொல்லியதில் அநேக விஷயம் அவள் புத்திக்கு எட்டவில்லை. ஆனுலும், மனித யத்தனத்தையும் மீறிய சக்தி ஒன்று இருப்பதையும் அதுதான் கடவுள் என்பதையும் அறிந்தாள். சர்வவல்லமையுள்ள அக்கடவுளைப் பன்முறையும் மனமார வணங்கினுள். களங்கமற்ற தன்மையுடன் அவள், "ஹே சர்வரக்ஷகா, எனக்கு உன்னை அறியும் சக்தி இல்லை. எனக்கு என் பதிதான் தெய்வம். நான் இப்படி நினைப்பது தவருனுல் க்ஷமிக்கவேண்டும். என் பணிவிடையை ஏற்குமாறு என் கணவருக்கு நீதான் புத்தி புகட்டவேண்டும். அவர் அதை ஏற்காவிடில் நான் மனமுடைந்து மரிக்கவேண்டியதுதான். என் சித்தியைப்போல் நான் புண்ணியாத்மா அல்ல. உன்னையே சரணமென்று நம்பி வாழ எனக்குத் தெரியாது. எனது மனேரதத்தை ஈடேற்றவேண்டும்'' என்று கடவுளைத் துதித்தாள்.

அவளுடைய பெரியப்பா கல்கத்தாவுக்குத் திரும்பி வரப் புறப்பட்டார். ஆசாவும் அவர்கூடப் புறப்படத் தயாரானுள். புறப்படுவதற்குமுன் அன்னபூரணி அவளைத் தழுவி முத்தமிட்டு, "ஆசா, உலகத்தின் கஷ்ட துக்கங்கள் உன்னை அணுகாமல் தடுக்க எனக்குச் சக்தியில்லை. ஒன்று மாத்திரம் மறக்காதே; என்ன கஷ்டம் வந்தபோதிலும் தைரியத்தைமட்டும் இழக்காமல் திடமாய் உனது கடமையைச் செய்து வா'' என்ருள்.

"உன் ஆசீர்வாதத்தால் அப்படியே நடப்பேன்'' என்று சொல்லி ஆசா அன்னபூரணியை நமஸ்கரித்துப் புறப்பட்டாள்.

முப்பதாம் அத்தியாயம்

ஆசா கல்கத்தா வந்து சேர்ந்தாள். "இத்தனை நாள் ஊருக்குப் போய் இருந்தாய்; ஒரு கடிதம் எழுதினால் என்ன?" என்றாள் விநோதினி.

ஆசா: நீ ஏன் எழுதவில்லை?

விநோ: நான் ஏன் எழுதுவேன்? நீ தானே முதலில் எழுதுவதாகச் சொன்னாய்?

ஆசா வெட்கித் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டாள். "சகோதரி, எனக்கு நன்றாய் எழுதத் தெரியாதென்று உனக்குத்தான் தெரியுமே. அதுவும் கல்வியில் தேர்ந்த உன்போன்றவளுக்கு எழுத எனக்கு வெட்கமாயிருக்கிறது" என்றாள்.

தோழிகள் இருவரும் சிரித்துப் பேசிக்கொண்டனர்.

விநோ: சதா கணவருடன் கூடவே யிருந்து நீ அவரை நன்றாகக் கெடுத்து வைத்திருக்கிறாயடி, அம்மா! அதனால்தான் அவர் யாராவது தம்மோடு இருந்துகொண்டே இருக்கவேண்டும் என்கிறார்.

ஆசா: நான் உன்னிடம் அவரை ஒப்பித்தது அதற்காகத்தான்; கூட இருந்து என்ன செய்யவேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்பதெல்லாம் உனக்குத் தெரியுமென்றுதான்.

விநோ: பகலில் என்னவோ காலேஜிற்குச் சென்று விடுவார். சாயங்காலம் வீட்டிற்குத் திரும்பிவிட்டால் பாடுதான். படிக்க வேண்டும், பேசவேண்டும், கூடவே யிருக்கவேண்டும்; சதா இது தான்!

ஆசா: நீ யாவரையும் வசீகரித்து விடுவாய். உன்னை விட்டுப் பிரிய யாருக்குத்தான் மனம் வரும்.

விநோ: பத்திரம்! உன் புருஷனின் நடத்தையைக் காணும் போது எனக்கும் ஒவ்வொரு சமயம் வசீகரணவித்தை நாம் கற்றிருக்கிறோமோவென்றுகூடச் சந்தேகமாய்த்தான் இருக்கிறது.

ஆசா உரக்கச் சிரித்து, "உனக்கு அந்த வித்தை தெரியாமல் வேறு யாருக்குத் தெரியும்? எனக்கு மாத்திரம் அது சிறிதாவது தெரிந்திருந்தால்—" என்றுசொல்லும்போது விநோதினி, "உனக்கு எதற்கு? யார் குடியைக் கெடுக்க? உனக்குக் கிடைத்தவரை நீ ஜாக்ரதையாகக் காப்பாற்றிக்கொள், போதும். பிறரை வசீகரித்து உனக்கு என்ன ஆகவேண்டும்? அதனால் துன்பந் தான்" என்றாள்.

ஆசா விநோதினியின் வாயைப் பொத்தி, "என்ன உளறுகிறாய்? போதும் வாயை மூடு!" என்றாள்.

காசியிலிருந்து திரும்பிய பிறகு ஆசா மஹேந்திரனைச் சந்தித்ததும் அவன், "சித்தியிடம் போயிருந்த சந்தோஷத்தில் ஒரு சுற்றுப் பருத்து வந்திருக்கிறாயே?" என்றான்.

நாணத்தினால் ஆசாவின் முகம் சிவந்தது. தான் பருத்ததும் ஒரு தவறு என அவளுக்குத் தோன்றியது. அவள் பட்ட மனக் கவலை அவளுக்குத் தெரியும். அப்படியிருந்தும் அம்மோசக்கார சரீரம் தன்னையும் ஏமாற்றிப் பருத்துவிட்டதாக அவள் நினைத்தாள். மனநிலையை வெளியிடச் சொற்சாதுரியந்தான் இல்லையென்றால் சரீரமுமா இப்படி ஏமாற்றவேண்டும் என்று வெட்கி வருந்தினாள். என்ன பேசுவதென்று அவளுக்குத் தெரியவில்லை. மெள்ள, "நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்?" என்றாள்.

முன்பு இப்படி அவள் கேட்டிருந்தால், "நீயின்றி உயிர் தரிக்கமுடியவில்லை. செத்தே போய்விட்டேன்" என்றெல்லாம் மஹேந்திரன் வேடிக்கையாகச் சொல்லியிருப்பான். ஆனால் இன்று அவனால் வேடிக்கையோ சிரிப்போ கொள்ள முடியவில்லை. "நன்றாய்த்தான் இருக்கிறேன்" என்று சொல்லி நிறுத்திக்கொண்டான்.

ஆசா தலை நிமிர்ந்து அவனை நோக்கினாள். முகம் வாடி இளைத்திருந்தான் அவன். சொல்ல முடியாத வேதனையால் வருந்துபவனைப் போல் காணப்பட்டான்.

ஆசாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'நான் ஏன் இவரை விட்டுக் காசிக்குச் சென்றேன். எனது பிரிவின் துக்கமன்றோ இவரை இந்த நிலைக்குக் கொண்டுவந்தது?' என்று தன்னையே நொந்து சபித்துக்கொண்டாள்.

மஹேந்திரனுக்கோ அவளுடன் என்ன பேசுவதென்று தோன்றவில்லை. கடைசியில், "சித்தி சௌக்கியமாயிருக்கிறாளா?" என்றான்.

அதற்குமேல் பேச அவனுக்கு வார்த்தைகளே அகப்படவில்லை. பக்கத்தில் கிடந்த ஒரு பழைய பத்திரிகையை எடுத்து வைத்துக்கொண்டு படிப்பதுபோல் பாவனை செய்தான். தலையைக் குனிந்தவண்ணம் ஆசா மனத்திற்குள்ளாகவே, 'இவ்வளவு நாட் கழித்துச் சந்தித்திருக்கிறோம். மனம் விட்டுப் பேசவுமில்லை. என் பக்கம் திரும்பிக்கூடச் சரியாய்ப் பார்க்கவுமில்லை. என்ன காரணம்? கடிதம் எழுதவில்லையென்று கோபமோ? அல்லது சித்தியிடம் வெகுநாள் தங்கி விட்டேனென்றோ?' என்று எண்ணிக் குற்றம் யாவும் தனதாகவே கருதி வருந்தினாள்.

மஹேந்திரன் காலேஜிற்குப் போய்த் திரும்பியும் வந்துவிட்டான். அன்று ராஜலக்ஷ்மியே அவனுக்குச் சிற்றுண்டி எடுத்து வந்தாள். அவன் வழக்கம்போல் அன்று உண்ணாததைக் கண்டு ராஜலக்ஷ்மி, "உடம்பு சரியில்லையா?" என்று கேட்டாள்.

மஹேந்திரன் அலக்ஷியமாய், "உடம்பு ஒன்றுமில்லை" என்றான்.

ராஜலக்ஷ்மி: ஒன்றுமே சாப்பிடவில்லையே; கொண்டு வந்தது அப்படியே இருக்கிறதே?

மஹேந்திரன் சற்றுக் கோபத்துடன், "சாப்பிட்டுக்கொண்டு தானே இருக்கிறேன்!" என்றான்.

சாயங்காலமாயிற்று. அவன் ஒவ்வொரு நிமிஷமும் விநோதினியின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். 'ஆனந்தமடம்' என்னும் புத்தகத்தில் இன்னும் இரண்டு மூன்று அத்தியாயங்களே பாக்கியிருந்தன. வழக்கம்போல் படித்துக் காட்டுவதற்கு விநோதினி வருவாளென்றே அவன் நம்பியிருந்தான். அந்திப்பொழுது கழிந்து இரவு வந்துவிட்டது. ஆயினும் விநோதினியைக் காணவில்லை. அவன் ஏமாற்றத்துடன் கட்டிலில் போய்ப் படுத்துக் கொண்டான்.

அன்றிரவு ஆசா மிகவும் வெட்கத்துடன் மெள்ள அறைக்குள் நுழைந்தாள். மஹேந்திரன் அதற்குள்ளாகவே படுத்துத் தூங்கிப் போய்விட்டதைக் கண்டாள். பிரிவிற்குப் பிறகு சயன அறைக்குள் இன்று பிரவேசிப்பது அவளுக்குக் கூச்சமும் நாணமுமாயிருந்தது. அழையாது எப்படிப் புருஷனருகில் போவது எனத் தயங்கினாள். வெகுநேரம் தூரவே நின்றிருந்தாள். மஹேந்திரன் எழுந்திருக்கும் வழியாயில்லை. மெள்ள ஒவ்வோர் அடியாக எடுத்துவைத்துக் கட்டிலின் அருகில் சென்றாள். எங்கே சப்தம் கேட்டு அவன் விழித்துக்கொள்கிறானோவென்று பயம். ஓடிப்போய் வேறு அறையில் படுத்துக்கொண்டால் என்னவென்று யோசித்தாள். அதற்கும் மனம் இடங்கொடுக்கவில்லை. கட்டிலில் ஏறிப் படுத்துக்கொண்டாள். என்னதான் நித்திரையில் இருந்தபோதிலும் ஆசா பக்கத்தில் படுத்ததை அறியாமல் எப்படி இருக்கமுடியும்? ஆனால் மஹேந்திரன் தூங்குவதாகப் பாசாங்கு செய்தானே தவிரத் தூங்கவில்லை. மறுபுறம் திரும்பிக் கண்களை இறுக மூடிக்கொண்டிருந்தான். பார்க்காவிடினும் ஆசா தன் பக்கத்தில் அழுதுகொண்டே படுத்திருப்பதை அவன் உணர்ந்தான். தனது இரக்கமற்ற தன்மை அவன் மனத்தையே பிளந்தது. ஆனாலும் அவளிடம் அன்பாய்ப் பேசுவது எப்படி என்று தவித்தான். தான் இழைக்கும் தவற்றை

உணர்ந்தும் அதிலிருந்து விடுபெற வகையறியாது உழன்முன். 'இப்பொழுதாவது தூங்குவதாகப் பாசாங்கு செய்துவிடலாம்; பொழுது விடிந்ததும் அவள் முகத்தில் விழிப்பதெப்படி? பேசுவதெப்படி?' என்று அஞ்சினன்.

அவனே இச்சங்கடத்திலிருந்து விடுவிக்க வேண்டியே போலும் ஆசா பொழுது விடிவதற்கு முன்னமேயே எழுந்து போய் விட்டாள்.

முப்பத்தோராம் அத்தியாயம்

'இப்படியிருக்க என்ன காரணம்? நான் என்ன குற்றம் செய்தேன்?' இவ்வாறு ஆசா எவ்வளவுதான் யோசித்தும் அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை; உண்மைக்காரணம் அவளுக்குப் புலப்படவில்லை. தன் புருஷன் விநோதினியை நேசிக்கிறானென்று அவள் கனவிலும் எண்ணவில்லை. அநுபவமற்ற பேதைச் சிறுமி; உலகமாயையை அறியாதவள்! தன்னை முழுமனத்துடன் காதலித்த கணவன் வேறொருத்தியைப்பற்றி நினைக்கக் கூடுமென்பதுகூட அவள் மனத்தில் எழவில்லை.

மஹேந்திரன் சற்று முன்னதாகவே அன்று காலேஜிற்குப் புறப்பட்டுவிட்டான். அவன் காலேஜ் போக வண்டியேறியதும் ஆசா ஓடிப்போய் ஜன்னலண்டை வந்து, வண்டி கண்ணுக்கு மறையும்வரை பார்த்துக்கொண்டு நிற்பது வழக்கம். இன்றும் அப்படியே போய் நின்றாள். மஹேந்திரன் அவளைப் பார்த்துப் புன்னகைசெய்வது வழக்கம். தற்செயலாய் அவன் அவளை இன்றும் பார்த்தான். அவளுடைய முகம் வாடிக் களையற்றுக் காணப்பட்டது. ஒரு வினாடிதான் அவளைப் பார்த்தான். உடனே தலையைக் குனிந்து கையிலிருந்த புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தான். அவன் முகத்தில் முன்பிருந்த அந்தப் புன்சிரிப்பு, அவ்வன்பு நிறைந்த பார்வை எல்லாம் எங்கோ மாயமாய்ப் போய்விட்டன!

வண்டிமறைந்தது. ஆசா மனம்முறிந்து அப்படியே உட்கார்ந்து விட்டாள். அச்சமயம் அவளுக்கு இவ்வுலகமே சாரமற்றதாகவும் சூன்யமாகவும் தோன்றியது. மணி பத்துக்குமேல் ஆயிற்று. கல்கத்தா நகரத் தெருக்களில் வண்டியும் டிராமும் ஜனங்கள் நிறைந்து போய்க்கொண்டிருந்தன. ஆனால் அச்சிறுமியின் மனோவேகம் அப்படியே தடைப்பட்டு நின்றுவிட்டது. மனங்கலங்கி வெகுநேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

திடீரென்று அவள் மனத்தில் ஓர் எண்ணம் உதயமாயிற்று. 'ஓஹோ தெரிந்தது! விஹாரி காசிக்கு வந்ததுதான் இதற்

JL
0134 20
N24,N17K

குக் காரணமா யிருக்கவேண்டும். ஏதோ முன் ஏற்பாட்டின்படி அவர் அங்கு வந்ததாக என் புருஷர் நினைத்திருக்கவேண்டும். அதற்காகத்தான் இவ்வளவு கோபம் போலும்! சிச்சி, இதென்ன சந்தேகம்? வெட்கக்கேடு!'—இதை நினைக்கும்போது ஆசாவின் தேகம் குன்றியது; மனம் பதறியது. 'அப்படியானல் அதை ஏன் வாய்விட்டுச் சொல்லவில்லை? என் முகத்தைக் காணவே கூசுவது போல் பதுங்கி ஓடுவானேன்? முகத்திலோ கோபக்குறியையும் காணோம். குற்றவாளியைப்போல் அவர் இருப்பதற்குக் காரண மென்ன? ஏதோ தவறுசெய்து அதை என்னெதிரில் ஒப்புக்கொள்ள வும் வெட்கப்படுவதுபோல் நடந்துகொள்வானேன்?' என்ற எண் ணங்கள் அலைபோல் மனத்தில் எழுந்து அவளை எரித்தன.

வண்டியிலிருந்து தான் கண்ட ஆசாவின் ஒளியிழந்த முகம் மஹேந்திரன் கண் முன்பாகவே நின்று உறுத்தியது. காலேஜில் அன்று முழுவதும் படிப்பில் அவன் மனம் செல்லவில்லை. காலேஜ் விட்டதும் 'பார்க்' பக்கமாய் உலாவப்போனான். அப்பொழுதும் ஆசாவிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்ற ஒரே யோசனை தான் அவனுக்கு. 'இப்பொழுதும் எனக்கு ஆசாவின்பால் அன்பில் லாது போகவில்லை. ஒரு புருஷன் தன் மனைவியிடம் காட்டும் அன்பைவிட அதிகமாகவே நான் ஆசாவிடம் அன்பு கொண்டிருக் கிறேன். இதைப்பெற்றே ஏன் அவள் சந்தோஷமாகவும் திருப்தி யாகவும் இருக்கக்கூடாது? என் மனத்தில் ஆசா, விநோதினி இரு வருக்கும் இடம் இருக்கிறது. விநோதினியை நேசிப்பதனால் எங்கள் தாம்பத்ய வாழ்விற்கு இடையூறு ஏன் ஏற்படவேண்டும்? எனது அன்பை இருவரும் பெறட்டும். நான் ஒருவரையும் புறக்கணிக்கப் போவதில்லை' என்று மனத்தைச் சமாதானப் படுத்திக் கொண் டான். அன்றிரவு அன்பாய்க் கொஞ்சி விளையாடி ஆசாவின் வியாகுலத்தை நீக்குவது எனத் தீர்மானித்து வீடு சென்றான்.

சாப்பிடும் சமயம் ஆசா அவன் எதிரிலேயே வரவில்லை. எப்படி யும் படுக்கையறையில் காணலாமென்று நம்பித் தான் போய்ப் படுத் துக்கொண்டான். ஆனால் அவன் உள்ளத்தில் ஆசாவிற்கு இட மேது? அதை வேறொருத்தி பூரணமாய் ஆட்கொண்டிருந்தாள். தான் விநோதினியுடன் நடத்திய செயல்கள் ஒவ்வொன்றாய் ஞாபகத் திற்கு வந்தன. அவள் கையிலிருந்து புத்தகத்தைப் பிடுங்கச் சண்டையிட்டது, அவள் தினமும் வந்து உட்கார்ந்து படித்தது, இரவில் எல்லோரும் தூங்கிய பிறகும்கூட அவள் உரத்துப்படிக்க அந்த மிருதுவான குரலோசையின்பத்தில் தான் மெய்ம்மறந்து படுத்துக் கேட்டுக்கொண்டிருந்தது, அவள் திடீரெனப் புத்தகத்தை மூடி வைத்துவிட்டுப் போக எழுந்ததும் படிவரை 'அவளைக்

கொண்டுவிடத் தானும் தினம் போய்வந்தது, இவையாவும் படத்தில் சித்திரித்தாற்போல் அவன் மனக்கண்முன் தோன்றின. அவன் மனத்தில் இன்ப உணர்ச்சி ஊடுருவியது; சரீரம் புளகித்தது. இப்படி வெகுநேரம் கழிந்தது. ஆனால் ஆசா வரக்காணவில்லை.

நடு நிசி. மணி ஒன்று அடித்தது. மனம் இருப்புக்கொள்ளவில்லை. அறையை விட்டு வெளியே வராந்தாவில் வந்து நின்றான் மஹேந்திரன். பால்போன்ற நிலவொளி. மனத்தைப் பரவசப் படுத்தும் மந்தமாருதம். மனத்தின்கண் குமுறிக்கொண்டிருந்த காமத்தீ இவ்வியற்கைக் காட்சியினால் தூண்டப்பட்டுச் சுடர்விட்டு எரிந்தது. ஆசா காசியிலிருந்து வந்ததுமுதல் விநோதினி மஹேந்திரன் கண்ணில் தென்படவேயில்லை. அவன் மனம் வெறி கொண்டதுபோன்று கட்டுக்கடங்காதுபோயிற்று. ஏதோ ஒரு சக்தி அவனை விநோதினியின் பால் இழுப்பதுபோன்று இருந்தது. கீழே இறங்கிச் சென்றான். நேரே விநோதினி படுத்துறங்கும் அறைக்குள் சென்று பார்க்க, அங்கு அவளைக் காணவில்லை. படுக்கைமாத்திரம் விரித்தபடி இருந்தது. உள்ளே காற்றே இல்லாமையால் அன்று ராஜலக்ஷ்மியும் விநோதினியும் திறந்த வெளிமுற்றத்தில் பாயை மாத்திரம் விரித்துப் படுத்திருந்தனர். காலடிச்சப்தம் கேட்டு விநோதினி, "யாரது?" என்று அங்கிருந்தவாறே கேட்டாள். "நான்தான், விநோதினி!" என்று கூறிக் கொண்டே மஹேந்திரன் அவளருகில் போய் நின்றான். பக்கத்தில் படுத்திருந்த ராஜலக்ஷ்மி திடுக்கிட்டு, "மஹேனா? இந்நேரத்தில் எழுந்து இங்கே எதற்காக வந்தாய்?" என்றாள்.

கண்களில் நெருப்புப் பொறி பறக்க விநோதினி அவனை விழித்துப்பார்த்தாள். பதில்பேசாமல் மஹேந்திரன் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

முப்பத்திரண்டாம் அத்தியாயம்

வானம் மேகங்களால் சூழப்பட்டுக் கறுத்திருந்தது. அன்றும் வெகு சீக்கிரமாகவே மஹேந்திரன் காலேஜிற்குச் சென்றுவிட்டான். வண்ணானுக்குப் போடுவதற்காக ஆசா துணிகளைப் பொறுக்கிப் போட்டுக்கொண்டிருந்தாள். மஹேந்திரனுக்கு மறதி அதிகம். சட்டைப்பைகளில் பணம் காசு வைத்து அப்படியே மறந்து விடுவதுண்டு. அதனால் வண்ணானுக்குத் துணி போடும் சமயம் கோட்டு, நிஜார் இவற்றின் ஜேபிகளை ஆராய்ந்து பார்த்து விட்டுப் போடுவது வழக்கம். அன்றும் ஆசா ஒவ்வொரு ஜேபியாய்ப் பார்த்துப் போட்டுக்கொண்டிருந்தாள். ஒரு ஜேபியி

லிருந்து திறந்த கடிதம் ஒன்று அகப்பட்டது. எழுத்து விநோதினியினுடையதாயிருந்தது. அதைக் கையிலெடுத்ததும் சர்ப்பம் தீண்டியதுபோல் ஆசாவின் முகம் கறுத்து உள்ளம் பதைத்தது. சர்ப்பமாயிருந்தாலும் விஷம் தீண்டி உயிரைக் கொள்ளைகொள்ளும். ஆனால் இதுவோ உள்ளத்தைச் சிதைத்துச் சித்திரவதை செய்வதுபோன்று இருந்தது. கடிதம் கீழ்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"நீ என்னையா விரும்புகிறாய்? அன்பாம்! இவ்வன்புப் பிச்சையிட உனக்கு என் தோன்றியதோ? பிறந்ததுமுதல் அன்புச் செல்வத்தைப் பூரணமாய் அடைந்து அநுபவிக்கும் உனக்கு இன்னும் என் இந்தப் பேராசை? உன் வேடிக்கை, களியாட்டம் இவற்றிற்கெல்லாம் நானும் போனாற் போகட்டுமென்று சற்று இடங்கொடுத்தால் இதற்கென்ன முடிவே கிடையாதா? இதோ வேறு ஒரு குரல் உன்னைக் கூவி அழைக்கிறது. இனி அன்பை அங்கே செலுத்து. என்னைத் தனியே விட்டு விடு.

"உன்னை நேசிக்க வேண்டுமென்று எழுதியிருக்கிறாய். வேடிக்கை விளையாட்டானால் ஏதோ போகட்டுமென்று இருக்கலாம். ஆனால் உண்மையில் எனக்கு உன்மீது நம்பிக்கையில்லை. ஆசா ஒருத்தியைத் தான் காதலித்து விரும்புவதாக நீ சொல்லிப் பெருமையடைந்தாய். அதுவும் பொய்! இப்பொழுது என்னை விரும்புவதாகச் சொல்லுகிறாய். இதுவும் பொய். உனக்குச் சுயநலந்தான் பெரிது.

"உண்மை அன்பைப் பெற என் உள்ளம் ஏங்கித் தவிக்கிறது. ஆனால் அவ்வேட்கையைத் தணிக்கும் வஸ்து உன்னிடம் இல்லை என்பதை நான் வெகுநாட்களுக்கு முன்பே கண்டுகொண்டேன். என்னை விட்டு விடு. இனி என் பின்னே வட்டமிடாதே. வீணாய் உனது மானத்தையும் துறந்து என் மானத்தையும் போக்கடிக்காதே! எனது கடைசிப் பதில் இதுதான். என்னைக் கல்நெஞ்சுடையவள் என்று எழுதுகிறாய். அது ஓரளவு உண்மையே. ஆனால் எனது உள்ளத்திலும் சற்றுத் தயை இருக்கிறது. அதனால்தான் உன்னை இதோடு இன்று விடுகிறேன். இக்கடிதத்திற்கு நீ பதிலெழுதினால் உன்னிடமிருந்து தப்ப இவ்வீட்டை விட்டு ஓடுவதைத்தவிர எனக்கு வேறு வழியில்லை.

"நேற்றிரவு நீ செய்த அக்கிரமமே போதாதா? வேலைக்காரி கையில் கடிதம் வேறு இன்று கொடுத்தனுப்ப உனக்கு வெட்கமில்லையா? அவள் என்ன நினைக்கமாட்டாள்? நான் யாருக்கும் முகத்தைக் காண்பிக்க யோக்கியதையற்றவள் ஆகவேண்டு மென்பது உனது விருப்பம் போலும்!"

கடிதத்தைப் படித்ததும் ஆசாவுக்குத் தலை கிர்ரென்று சுழன்றது; கண்கள் இருண்டன. மூச்சுப் படபடத்தது. உணர்வின்றி அப்படியே கீழே விழுந்தாள். மறுபடி உணர்வெய்த வெகுநேரமாயிற்று. கையிலிருந்த கடிதத்தை மறுமுறை படிக்க

முயன்றாள். ஆனால் ஒரே குழப்பம். ஒன்றும் தெளிவாய் விளங்க வில்லை. ஒவ்வோர் அக்ஷரமும் ஒரு கறுத்த பேய்போல் அவள் கண் முன் கூத்தாடியது. ஐயோ, இது என்ன! எப்படி விளைந்தது? இந்த ஸர்வநாசத்திற்குக் காரணமென்ன? என்ன செய்வது? யாரிடம் போய் முறையிடுவது? ஒன்றும் அவளுக்குப் புரியவில்லை. தண்ணீரிலிருந்து கரையில் எடுத்துப்போட்ட மச்சத்தைப் போல் துடித்தாள். நட்டாற்றில் முழுகுபவன் ஒரு சிறு துரும்பின் ஆதாரமாவது கிடைக்காதாவெனத் தேடுவதுபோல் இந்தச் சூன்யமய அந்தகாரத்திலிருந்து வெளியேற ஓர் ஆதாரம் அகப்படாதாவெனத் தவித்தாள். கடைசியில் அவளையும் அறியாது வாயிலிருந்து 'சித்தி' என்ற சப்தம் கிளம்பியது. அன்னபூரணியின் அன்பான உபதேசம் அவள் நினைவிற்கு வந்தது. கண்களிலிருந்து தாரை தாரையாய் நீர் பெருகியது. விக்கி விக்கி அழுதாள்.

'இக்கடிதத்தை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வது? இது என் கையில் அகப்பட்டது தெரிந்தால் அவருக்கும் லஜ்ஜையாயிருக்கும் என்று நினைக்கும்போது அவள் மனம் துக்கத்தில் ஆழ்ந்தது. கடிதத்தைத் திரும்பவும் கோட்டு ஜேபியிலேயே வைத்துவிடுவது, வண்ணானுக்குக் கோட்டைப் போடுவதில்லையெனத் தீர்மானித்தாள்.

கடிதத்தை வைக்கப் போகும்போது, "சகோதரி" என்று கூப்பிடும் குரல் கேட்டது. ஆசா கடிதத்தைச் சட்டென மறைத்துக்கொண்டாள். விநோதினி உள்ளே வந்து, "வண்ணானுக்குப் போடுவதற்கு முன் இன்னும் சில துணிகளுக்குக் குறி போட வேண்டும். அதற்காகத்தான் வந்தேன்" என்றாள்.

ஆசாவுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. எங்கே தனது முகக்குறிப்பால் தன் மனோநிலைமை வெளியாகிவிடுமோவென்று விநோதினியைப் பாராது ஜன்னலுக்கு வெளியே பார்ப்பதுபோல் திரும்பிக்கொண்டாள். அவள் அதரம் துடித்தது. அழுகையை வெகு பிரயாசையுடன் அடக்கிக்கொண்டாள்.

'ஓஹோ! நேற்று இரவு நடந்த சமாசாரம் தெரிந்துவிட்டாற் போல் இருக்கிறது. அதுதான் இப்படியிருக்கிறாள். ஆனால் தவறு முழுவதும் என்னுடையதென்று என்மேல் கோபித்து என்ன பயன்?' என்று நினைத்து ஆசாவுடன் பேசக்கூட இயலாமல் குறிப்பிடவேண்டிய துணிகளைக் கையில் எடுத்துக்கொண்டு வெளியே சென்றுவிட்டாள் விநோதினி.

இன்றுவரை அவளன்றோ தன் தோழியாயிருந்தவள்! இதை நினைக்க வெட்கமும் துக்கமும் ஆசாவை ஒருங்கே வதைத்தன.

ஆஹா! அவளைப்பற்றித் தான் கொண்டிருந்த உயர்வான எண்ண மென்ன, இக்கடிதம் அதற்கு நேர்விரோதமாய் நிரூபித்ததென்ன? இதை நினைக்கவே, கடிதத்தை மீண்டும் ஒருமுறை படிக்க ஆசாவுக்கு ஆவல் எழுந்தது.

கடிதத்தைக் கையில் எடுத்ததும் மஹேந்திரன் அவசரமாய் உள்ளே பிரவேசித்தான். அங்கே ஆசாவைக் க்ண்டு சற்றுத் திகைத்து நின்றான். எதையோ அறை முழுவதும் தேடலானான். ஆசாவுக்கு அவன் எதைத் தேடுகிறானென்று நன்றாகத் தெரியும். அவள் மனம் பொறுக்கவில்லை. கடிதத்தையும் கோட்டையும் கட்டிலின்மேல் விட்டெறிந்துவிட்டு முகத்தை மூடிக்கொண்டு மறுபுறம் திரும்பிக்கொண்டாள். ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து மஹேந்திரன் கடிதத்தை எடுத்துக்கொண்டு ஒரு வினடி ஆசா இருந்த பக்கம் திரும்பி நோக்கினன். உடனே அவசர அவசரமாய்க் கீழே இறங்கிப் போய்விட்டான். இதற்குள், "அம்மா, நேரமாகி விட்டது. துணி போடவில்லையா?" என்று வண்ணான் குரல் கேட்டது.

முப்பத்துமூன்றும் அத்தியாயம்

ராஜலக்ஷ்மி காலையிலிருந்து விநோதினியை எதற்கும் கூப்பிடவேயில்லை. வழக்கம்போல் அன்றும் விநோதினி தன் தினசரி வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தாள். தன் முகத்தைக் காணவும் ராஜலக்ஷ்மி விரும்பவில்லை என்பது அவளுக்குத் தெரிந்தது. ஆனாலும் அவள், "அம்மா, உங்கள் தேகசுகம் மிகவும் கெட்டுப் போயிருக்கிறது. காரணமில்லாமலும் இல்லை. உங்கள் பிள்ளை நேற்றிரவு பயித்தியம் போல் புத்தியற்று அப்படி ஓடிவந்தார். எனக்கு அதற்குப் பிறகு நித்திரையே பிடிக்கவில்லை" என்றாள்.

ராஜலக்ஷ்மியோ அவளைப்பார்க்கவுமில்லை, பதில்பேசவுமில்லை. விநோதினி மறுபடியும், "ஒருகால் மனைவியுடன் ஏதாவது சச்சரவாயிருக்கலாம். அதை மத்தியஸ்தம் செய்துவைக்கவோ தீர்க்கவோ என்னைக் கூப்பிட வந்திருக்கலாம். என்ன சண்டை சச்சரவானல்தான் என்ன? பொழுது விடியும் வரை பொறுத்தால் என்ன வந்தது? நீங்கள் என்னவேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைக்கு என்ன குணம் இருக்கிறதோ இல்லையோ, மனேதிடம் மாத்திரம் கிடையவே கிடையாது. எனக்கு அவரைக் கண்டால் பிடிக்கிறதேயில்லை" என்றாள்.

ராஜலக்ஷ்மி கோபத்துடன், "ஏன் பொய்யும் புளுகும் அளக்கிறாய்? உன் பேச்சு ஒன்றும் எனக்கு இன்று பிடிக்கவில்லை, போ!" என்றாள்.

விநோ: எனக்குந்தான் ஒன்றும் பிடிக்கவில்லை. பிள்ளையின்மீது தோஷம் கூறினால் உங்களுக்குக் கோபம் வருமேயென்று பயந்து இதுவரையில் நான் வாயைத் திறக்கவில்லை. இப்பொழுதுதான் எல்லாம் வெட்டவெளிச்சமாகிவிட்டதே" என்றாள்.

கண்களில் கோபப்பொறி பறக்க ராஜலக்ஷ்மி, "என் பிள்ளையின் நல்லகுணம் கெட்டகுணம் யாவும் நான் நன்றாய் அறிவேன். ஆனால் நீ இம்மாதிரி மோசக்காரி யென்று நான் தெரிந்துகொள்ளவில்லை" என்றாள்.

விநோதினி ஏதோ சொல்ல வாயெடுத்தாள். உடனே நாவை அடக்கிப் பேச்சை மாற்றி, "உண்மைதான்! ஒருவரை யொருவர் எப்படி அறியமுடியும்? தம்மையே தாம் அறிந்துகொள்ளச் சக்தியற்றவர்கள் பிறரை அறிவதெப்படி? மருமகளிடம் கோபித்துக்கொண்டு மகனிடம் போய் உறவு கொண்டாடுமாறு நீங்களே என்னை எவ்வளவு முறை தூண்டியிருக்கிறீர்கள்? சற்று யோசித்துப் பாருங்கள்" என்றாள்.

ராஜலக்ஷ்மியால் கோபத்தை அடக்கமுடியவில்லை. "அடி அதிர்ஷ்டம் கெட்டவளே, பிள்ளையைக் கெடுத்ததாகத் தாயின் மீதே பழிசுமத்தத் துணிந்துவிட்டாயா? உன் நாக்கு அறுந்து விழ!" என்று கர்ஜித்தாள்.

விநோதினி அவள் கோபத்திற்குச் சற்றும் அஞ்சாது மேலும், "அம்மா, ஸ்திரீ ஜாதியே மோசக்கார மாயாவினி ஜாதிதான். என்னிடமிருந்த மோசம் எனக்கே தெரியவில்லை; அது உங்களுக்குத் தெரிந்திருக்கிறது. அதேமாதிரி நீங்கள் அறியாத உங்கள் மோசத்தை நானும் அறிந்துகொண்டேன். மோசமின்றி இப்படிப்பட்ட சம்பவம் நேரமுடியாது. தெரிந்தோ தெரியாமலோ நீங்களும் என்னை இவ்வலையில் சிக்க வைத்தீர்கள்; நானும் சிக்கிக் கொண்டேன். நாம் யாவரும் மாயாவினிகளே" என்றாள்.

கோபம் பொங்கியெழுந்தது ராஜலக்ஷ்மிக்கு. வாயைத் திறந்து பேசவும் முடியவில்லை அவளால். அவள் சரேலென்று வெளியே சென்றுவிட்டாள். விநோதினிக்கும் சினத்தால் முகம் சிவந்தது.

ராஜலக்ஷ்மி மஹேந்திரனைக் கூப்பிட்டனுப்பினாள். இரவு நடந்த விஷயத்தைப்பற்றிக் கேட்கத்தான் அவள் கூப்பிடுகிறாள் என்பது மஹேந்திரனுக்கு நன்றாய்த் தெரியும். அச்சமயந்தான்

விநோதினியின் கடிதமும் கிடைத்திருந்தது. அதைப் படித்து அவன் மனம் தத்தளித்தது. எண்ணங்கள் அலைபோன்று எழுந்து ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. அந்த அலைகள் ஒரு க்ஷணம் அவன் உள்ளத்தை விநோதினியின்பால் இழுத்துச் சென்றன; மறுக்ஷணம் பின்னே தள்ளின. மறுபடி பன்மடங்கு வேகத்துடன் அவளிடமே கொண்டுதள்ளின. மனத்தில் கோரயுத்தம் நடந்து கொண்டிருந்தது. அச்சமயம் தாயுடன் விவாதம் நடத்த அவன் தயாராயில்லை. 'நான் விநோதினியைப்பற்றிய பிரஸ்தாபமெடுத்தாலே அவளும் கோபத்தால் ஏதாவது சொல்ல, எல்லாம் வெளியாகி வீடு ஒரே அமர்க்களமாகிவிடும்; சற்று வெளியே போய் வருகிறேன்; மனக்கலவரம் அடங்கியபிறகு பேசிக் கொள்ளலாம்' என்று யோசித்து மஹேந்திரன் வேலையாளிடம், "இன்று காலேஜிற்கு அவசரமாய்ப் போகவேண்டியிருக்கிறது. திரும்பி வந்தபிறகு அம்மாவைப் பார்ப்பதாகச் சொல்லு" என்று சொல்லியனுப்பிவிட்டு அவசர அவசரமாய் உடை அணிந்து வெளியே சென்றுவிட்டான். இந்தக் கலவரத்தில்தான் அவன் விநோதினியின் கடிதத்தைக் கோட்டுஜேபியில் மறந்து வைத்துவிட்டுப் போனான்.

மழை பெய்து ஓய்ந்து விட்டது. ஆனாலும் வானம் மேகம் சூழ்ந்து இருண்டிருந்தது. கோபம், அவமானம் இவற்றால் விநோதினியின் மனம் கொதித்தெழுந்தது. இம்மாதிரியான சமயங்களில் விநோதினி உட்கார்ந்து வீண் யோசனை செய்வதில்லை. அப்பொழுதுதான் பின்னும் சுறுசுறுப்பாய் வேலை செய்வாள். வண்ணானுக்குப் போடவேண்டிய அழுக்குத்துணிகள் யாவற்றிற்கும் குறிபோட்டுக் கொண்டிருந்தாள். துணியெடுக்கப்போன சமயம் ஆசாவின் முகக்குறிப்பையும் பார்த்தபிறகு எரிச்சல் பன்மடங்காயிற்று. 'நான்தான் குற்றம் இழைத்துவிட்டதுபோல யாவரும் சொல்லுகிறார்கள். குற்றத்தினால் ஏற்படும் பழியை ஏற்று அனுபவிக்கும்போது பயனையும் சுகத்தையும்மாத்திரம் கைவிடுவானேன்?' என்று யோசித்தாள்.

அச்சமயம் திடீரென்று மஹேந்திரன் அவள்முன் தோன்றினான். அங்கு நின்றிருந்த வேலைக்காரி அவனைக் கண்டதும் சட்டென்று வெளியே போய்விட்டாள். விநோதினி கண்களில் தீப்பொறி பறக்கக் கையிலிருந்த துணியை விட்டெறிந்துவிட்டு எழுந்து நின்று அவனை நோக்கி, "போ, வெளியே போ! என் எதிரில் வராதே!" என்று கர்ஜித்தாள்.

மஹேந்: ஏன்? நான் என்ன செய்துவிட்டேன்?

விநோதினி கோபத்துடன், "என்ன செய்தாயா? பயங்கொள்ளி! ஆண்மையற்றவன்! நீ செய்வதென்ன இருக்கிறது? கடமையைச் செய்யச் சக்தியற்ற நீ காதலென்பது என்னவென்று கண்டாய்! ஊர்ப்பழிக்கு என்னை ஏன் ஆளாக்குகிறாய்?" என்றாள்.

மஹேந்திரன் தீனக்குரலுடன், "உன்னை நான் காதலிக்கவில்லை யென்றா சொல்லுகிறாய்?" என்றான்.

விநோ: ஆமாம்! அப்படித்தான் சொல்லுகிறேன்! உன் ஒளிவு மறைவான திருட்டு நடவடிக்கையை நான் வெறுக்கிறேன். போ! என்னெதிரில் நில்லாதே!

மஹேந்திரனின் மனம் மோஹத்தால் கட்டுண்டு கிடந்தது. அவன் பரிதபித்து, "விநோதினி, என்னை வெறுக்கிறாயா நீ?" என்றான்.

விநோ: ஆமாம், உன்னைத்தான் வெறுக்கிறேன்!

விநாடியில் மஹேந்திரனின் மனம் மாறியது. அவன், "விநோதினி, பேச்சை வளர்த்துவதில் பயனில்லை. பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டிய சமயம் வந்துவிட்டது. இந்த இரண்டுங் கெட்ட நிலையில் இனி என்னால் இருக்க முடியாது. சகலத்தையும் துறந்து நான் இன்றே இவ்வீட்டை விட்டு வெளியேறினால் நீ என்னுடன் வரத் தயாராயிருக்கிறாயா, சொல்!" என்றான்.

அவன் அவள் கைகளை இறுகப்பிடித்துத் தன் அருகே இழுத்துக்கொள்ள முயன்றான். "ஐயோ! விட்டுவிடு! நீ செய்வது நன்றாயில்லை" என்று விநோதினி கத்தினாள்.

மஹேந்: அதிருக்கட்டும். நீ என்னுடன் வருவாயா மாட்டாயா? அதைச் சொல் முதலில்.

விநோ: நான் மாட்டேன்!

மஹேந்திரன் உணர்ச்சி மேலிட, "ஏன் மாட்டாய்? என்னைப் படுகுழியில் தள்ளிவிட்டு நீ மாத்திரம் தப்பிச்செல்லப் பார்க்கிறாயோ? அது ஒருகாலும் முடியாது! நீ என்னுடன் வரத்தான் வேண்டும்" என்று கூறி அவளைப் பலவந்தமாக இழுத்து அணைத்துக்கொண்டு, "நீ என்னை வெறுத்தாலும் சரி; உன்னையும் கூட அழைத்தே செல்வேன். நீ என்னை விரும்பித்தான் ஆகவேண்டும்" என்றான்.

விநோதினி அவன் பிடியிலிருந்து திமிறித் தன்னை விடுவித்துக் கொண்டாள்.

மஹேந்: எனது உள்ளத்தில் பெருந்தீயை மூட்டிவிட்டாய். உன்னால் இனி அதை அணைக்கவும் முடியாது. நீயும் என்னிடமிருந்து தப்பி ஓடமுடியாது. (ஆவேசத்துடன்) ஏன் இப்படி

ஒரு லீலை புரிந்தாய்? இதை லீலை என்று சொல்வது! நம்மிரு வருடைய வாழ்வும் சாவும் இனி ஒருமித்தே இருக்கும்!

அதேசமயம் ராஜலக்ஷ்மி உள்ளே நுழைந்து, "மஹேன்! இதென்ன?" என்றாள். அவன் உன்மத்தம் பிடித்தவன்போல் தன் தாயையும் விநோதினியையும் மாறிமாறிப் பார்த்தான். கடைசியில் விநோதினியை நோக்கி, "எல்லாவற்றையும் துறந்து விடுகிறேன்; சொல்: என்னுடன் வருவாயா மாட்டாயா?" என்றான்.

விநோதினி கோபத்துடன் ராஜலக்ஷ்மியை ஒருமுறை விழித்துப் பார்த்தாள். உடனே சற்றும் தடுமாற்றமோ சங்கோசமோ இன்றி மஹேந்திரனின் கைகளைப் பிடித்துக்கொண்டு, "வருகிறேன்" என்றாள்.

மஹேந்திரன், "சரி! இன்று மாத்திரம் சற்றுப்பொறு. நாளையிலிருந்து இவ்வுலகில் நீதான் எனக்குச் சகலமும்" என்று கூறி வெளியே சென்றுவிட்டான்.

அச்சமயம் வண்ணான், "அம்மா! எவ்வளவுநேரம் நான் காத்திருப்பது? நான் போய் நாளைக்காவது வரட்டுமா?" என்று கத்தினான்.

குதிரைக்குக் கொள் இல்லையென்று வேலையாள் வந்து கூறி நின்றான்.

வீட்டிலோ வெளியிலோ ஒரு வேலையும் நிற்கக் காணோம். எல்லாம் வழக்கம்போல் நடந்துகொண்டிருந்தன.

முப்பத்துநான்காம் அத்தியாயம்

விஹாரி வைத்தியக் கல்லூரியில் படித்துவந்தான். திடீரென்று பரீக்ஷைக்குச் சில தினங்களுக்கு முன்பாக அவன் படிப்பை நிறுத்தியது யாவருக்கும் ஆச்சரியத்தை அளித்தது. யாரேனும் கேட்டால், "பிறருக்கு வைத்தியம் செய்வதற்கு முன் எனது தேக சௌக்கியத்தைக் கவனித்துக்கொள்ள வேண்டாமா?" என்று சொல்லிவிட்டான்.

அவன் ஒரு நிமிஷங்கூட வீணில் கழிக்கக் கூடியவனல்ல. தன்னலமற்றவன். செல்வம், கீர்த்தி இவற்றை எதிர்பார்த்து ஊழியம் செய்பவனல்ல. பி. ஏ., பட்டம் பெற்றதும் எஞ்ஜினீரிங் கல்லூரியில் படித்துவந்தான். அவன் அதிக உழைப்பாளி. அங்கே படிப்பு முடிந்ததும் உடனே வைத்தியக் கல்லூரியில் வந்து சேர்ந்தான். மஹேந்திரன் அவனுக்கு ஒரு வருஷம் முன்பாகவே சேர்ந்திருந்தான். இவ்விரு நண்பர்களின் நட்பு காலேஜ் முழு

வதும் பிரசித்தம். பையன்கள் இவர்களை ராமலக்ஷ்மணரென்றும், அச்வனி தேவதைகளென்றும் வேடிக்கையாய்க் கூப்பிடுவதுண்டு. திடீரென்று இவர்கள் நட்பு முறிந்தது யாவருக்கும் ஆச்சரியத்தை விளைவித்தது. இருவரும் முன்போல் பேசுவதில்லை; சேருவதில்லை. இதைச் சகபாடிகள் கவனித்து ஜாடையாய்ப் பேசிக்கொள்வர். விஹாரி மிகவும் புத்திசாலி. பரீக்ஷையில் தேறிச் சன்மானமும் பெறுவானென்று ஆசிரியர்கள் யாவரும் எதிர்பார்த்திருந்தனர். யாவரும் ஏமாறும்வண்ணம் அவன் பரீக்ஷையில் உட்காரவே யில்லை. படிப்பையே நிறுத்திவிட்டான்.

அவன் வீட்டிற்கு அருகில் ராஜேந்திர சக்ரவர்த்தி என்ற அச்சுக்கோக்கும் ஏழைப் பிராம்மணர் ஒருவர் வசித்துவந்தார். மாதச்சம்பளம் பன்னிரண்டு. மிகவும் கஷ்டத்துடன் ஜீவனம் நடத்திவந்தார்.

அவரிடம் விஹாரி, "உங்கள் பையனை என்னிடம் விட்டு விடுங்கள்; நானே அவனுக்குக் கல்வி கற்பித்துச் சம்ரக்ஷிக்கிறேன்" என்றான்.

அவ்வேழை அந்தணர் சந்தோஷத்துடன் சம்மதித்து வஸந்தன் என்ற தம் எட்டு வயதுப் பையனை விஹாரியிடம் ஒப்பித்து விட்டார்.

'பையனுக்குப் பத்து வயதாகும் வரை எழுதவே கற்பிப்பதில்லை. முதலில் எல்லாம் வாய்ப்பாடமாகவே நடத்துவது' என விஹாரி நிச்சயித்தான்.

அதுமுதல் அச்சிறுவனோடு விளையாடியவாறே, அவனைக் கோட்டைமைதானம், ம்யூஸியம், ஆலிபுரம் மிருகக் காட்சிச் சாலை, சிவபுரத்துப் பூந்தோட்டம் முதலிய இடங்களுக்கு அழைத்துப் போய்ப் பாடம் கற்பிப்பது, சரித்திரக் கதைகள் சொல்வது இவையே விஹாரியின் முக்கிய அலுவல்களாயிருந்தன.

அன்று ஸாயங்காலம் வெளியே செல்ல முடியவில்லை. மத்தியானம் மழை சற்று நின்று மாலையில் மீண்டும் பெய்ய ஆரம்பித்து விட்டது. விஹாரி தன் வீட்டில் பெரிய அறையில் விளக்கேற்றிக் கொண்டு உட்கார்ந்து வஸந்தனுக்குத் தன் நூதன வழியில் பாடம் கற்பித்துக்கொண்டிருந்தான்.

விஹாரி: வஸந்தா, இவ்வீட்டில் எவ்வளவு வாயிற்படிகள் இருக்கின்றன? சீக்கிரம் சொல்லவேண்டும்; எண்ணக்கூடாது.

வஸந்தன்: இருபது.

விஹாரி: தப்பு; பதினெட்டே!

"அந்த ஜன்னலில் எவ்வளவு கம்பிகள் இருக்கின்றன? சீக்கிரம் சொல்" என்றான் விஹாரி.

வஸந்தன்: ஆறு.

விஹாரி, "நீ ஜயித்தாய்! இந்தப் பெஞ்சு எவ்வளவு அடி நீளம்? அந்தப் புத்தகம் எவ்வளவு கனம்?" என்றெல்லாம் சிறுவனைக் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கும் ஸமயம் வேலைக்காரன் வெளியே யாரோ ஒரு மாது விஹாரியைக் காண வந்திருப்பதாகத் தெரிவித்தான்.



அவன் சொல்லி முடிப்பதற்குள்ளாகவே விநோதினி அறையில் வந்து நின்றாள். விஹாரி ஆச்சரியத்துடன், "என்ன விசேஷம் இன்று?" என்று கேட்டான்.

விநோ: வீட்டில் ஸ்திரீகள் யாரும் இல்லையா?

விஹாரி: வீட்டிலுமில்லை, வெளியிலுமில்லை. அத்தைக் கிழவி ஒருத்தி இருக்கிருள். அவளும் கிராமத்தில் வசிக்கிருள்; இங்கே இல்லை.

விநோ: அப்படியானால் என்னை உங்கள் கிராம வீட்டிற்கு அனுப்பி வையுங்கள்.

விஹாரி: உன்னை யாரென்று சொல்லி அத்தையிடம் அறிமுகப்படுத்துவது?

விநோ: வேலைக்காரி என்று சொல்லுங்கள். நான் அவளுக்கு வேண்டிய ஊழியம் யாவும் புரிகிறேன்.

விஹாரி: தனக்கு வேலைக்கு ஆள்வேண்டுமென்று என் அத்தை என்னைக் கேட்டாலன்றோ நான் அனுப்புவதற்கு? அது கிடக்கட்டும். சமாசாரம் என்ன? வந்த காரணத்தை முதலில் தெரிவி.

பிறகு விஹாரி வஸந்தனைப் பார்த்து, "எழுந்துபோய்ப் படுத்துத் தூங்கு அப்பா" என்று சொன்னான். சிறுவனும் அப்பால் சென்றான்.

விநோ: நீங்கள் கண்டவற்றிலிருந்து உங்களுக்கே யாவும் தெரிந்திருக்கவேண்டும்.

விஹாரி: தெரிந்ததாகவே இருக்கட்டும். அதனாலென்ன இப்பொழுது?

விநோ: நானே வேண்டுமானால் சொல்லுகிறேன்; கேளுங்கள்: மஹேந்திரன் என்னை இச்சிக்கிறான்.

விஹாரி: இது ஒன்றும் புதிதல்ல; எனக்கு இதைக் கேட்கவும் இஷ்டமில்லை.

விநோ: எனக்கும் உங்களிடம் இதை அடிக்கடி தெரிவிக்க இஷ்டமில்லை. அதனால்தான் இன்று உங்களிடம் அடைக்கலம் புக வந்திருக்கிறேன்.

விஹாரி: உனது விருப்பமின்றி இந்த அனர்த்தம் எப்படி விளைந்தது? நல்வழியில் சென்ற அவன் மனத்தைத் திருப்பிக் கெடுத்தது யார்?

விநோ: நான்தான்! ஆமாம், நான் கெட்டவள்தான்! நான் அதை ஒளிக்கவில்லை. என் உள்ளத்தைத் திறந்து பாருங்கள். அங்கே எரியும் தீயினாலேயே நான் மஹேந்திரனின் வீட்டிலும் தீயிட்டேன். அவன்மேல் அன்பு கொண்டதாக நான் எண்ணிய எண்ணம் தவறு என்று பிறகுதான் அறிந்துகொண்டேன்.

விஹாரி: அன்பு இருக்குமானால் இப்படிக் குடியைக் கெடுப்பாயா என்ன?

விநோ: விஹாரி பாபு, சாஸ்திரம் நியதி இவற்றைத் தூர வைத்துவிட்டு அந்தர்யாமியைப் போல் எனது இருதயத்தினுட் புகுந்து பார்க்கும் சக்தி மாத்திரம் உங்களுக்கு இருக்குமானால் எனது உள்ளத்தை விண்டு காட்டவும் நான் சித்தமாயிருக்கிறேன். உங்களிடம் நான் எதையும் மறைக்க விரும்பவில்லை.

விஹாரி: உள்ளத்தின் மர்மத்தை அறியப் பகவானே வல்லவர். மனிதர்களாகிய நாம், சாஸ்திரம் விதி இவற்றிற்குக் கட்டுப்பட்டு நடந்தால்தான் மனத்தை நிலைநிறுத்தி வாழ முடியும்.

விநோ: இருக்கட்டும். நான் சொல்வதைச் சற்றுக் கேளுங்கள்: இக்காரியத்திலிருந்து நீங்கள் என்னை முன்பே தடுத்திருக்கக் கூடும். மஹேந்திரன் என்னை இச்சிக்கிறான். ஆனால் அவன் மூடன், காமாந்தகன். என்னை அவன் அறியவில்லை. நீங்கள் என் உள்ளத்தை உள்ளபடி அறிந்துகொண்டதாக ஒரு சமயம் எனக்குப் புலப்பட்டது. அப்பொழுது நீங்கள் என்னை மதித்துப் போற்றினீர்கள். நிஜத்தைச் சொல்லுங்கள். இது வாஸ்தவமா இல்லையா?

விஹாரி: நிஜந்தான். உண்மையாகவே அன்று உன்னிடத்தில் எனக்குச் சிரத்தை ஏற்பட்டது.

விநோ: அப்பொழுது நீங்கள் என்னைப்பற்றிக் கொண்ட அபிப்பிராயம் ஒன்றும் தவறல்ல. என்னிடம் அன்றுகொண்ட சிரத்தையை ஏன் விட்டுவிட்டீர்கள்? பெண்களுக்குரிய வெட்கம் மானம் யாவற்றையும் துறந்து நான் உங்களிடம் இன்று ஓடிவந்திருக்கிறேன். நீங்கள் ஏன் என்மேல் அன்பு கொள்ளவில்லை? அது எனது துர்ப்பாக்கியந்தான்! உங்கள் அன்பு ஆசாவின் பால் இருந்தது. கோபிக்கவேண்டாம்; பொறுங்கள். உங்கள் மனத்தை நான் அறிவேன். அவளிடம் என்ன அபூர்வகுணம் மோஹிக்கத் தக்கதாயிருக்கிறது? ஒன்றையும் காணேம்! புருஷர்களுக்குப் பிரும்மா புறக்கண்ணை அளித்தாரேதவிர அகக்கண்களை அளிக்கவில்லைபோலும்!

இதற்குள் விஹாரி எழுந்துநின்று, "இதோ நீ எது வேண்டுமானாலும் சொல்; கேட்கத் தயாராயிருக்கிறேன். ஆனால் சம்பந்தமற்ற தகாத சொற்களை மாத்திரம் சொல்லவேண்டாம்" என்றான்.

விநோ: யாரைப்பற்றிப் பேசினால் உங்கள் மனம் புண்படுமென்று எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால், விஹாரிபாபு, இவ்விரவில் வெட்கம், பயம், யாவும் துறந்து உங்களிடம் ஓடிவர என் மனம் எவ்வளவு புண்பட்டிருக்க வேண்டுமென்பதைச் சற்றே நினைத்துப் பாருங்கள்! நீங்கள் ஆசாவிடம் அன்புகொண்டிரா

விடில், நான் இப்பொல்லாத் தீங்கு ஒருநாளும் விளைவித்திருக்க மாட்டேனென்பது நிச்சயம்.

விஹாரியின் முகம் வெளுத்தது. அவன் மனம் பதைக்க, "ஆசாவிற்கு என்ன செய்தாய்? அவள் என்னவானாள்?" என்று கேட்டான்.

விநோ: மஹேந்திரன் வீடு வாசல் மனைவி எல்லாவற்றையும் துறந்து என்னோடு வரத் தயாராயிருக்கிறான்.

"ஒருகாலும் கூடாது! இது நடக்கவே கூடாது!" என்று விஹாரி கர்ஜித்தான்.

விநோ: ஏன் கூடாது? மஹேந்திரனை இனிமேல் தடுக்கக் கூடியவர் யார்?

விஹாரி: உன்னால் தடுக்கமுடியும்.

விநோதினி ரோஷத்துடன், "எதற்காக நான் தடுக்கவேண்டும்? உங்கள் ஆசாவுக்காகவா? என் சுகதுக்கத்தைக் கவனிக்கவேண்டாம் போலும்! மஹேந்திரனின் குடும்பத்தில் சுகமும் சாந்தியும் நிலவியிருக்கவேண்டி நான் என் சுகத்தைப் பலியிட வேண்டும் போலும்! இல்லை, இல்லை! நான் அவ்வளவு தியாகியல்ல. நான் இம்மாதிரியான தர்மசாஸ்திரம் படித்ததில்லை. தியாகத்திற்குப் பிரதிபலன் எனக்கு என்ன கிடைக்கிறது?" என்றாள்.

இதைக் கேட்கவே, விஹாரியின் இருதயம் கல்லாயிற்று. அவள்பால் அவனுக்குச் சற்றும் இரக்கம் ஏற்படவில்லை. அவன், "ஏதேதோ நீயும் இதுவரை சொன்னாய். அதிகப் படிப்பு உன்னைக் கெடுத்துவிட்டது போல் இருக்கிறது! உனது செய்கை, உனது பேச்சு, உனது நடிப்பு யாவும் நாடகமாடுவதற்கும் நாவல் எழுதுவதற்குமே தகுந்தவை" என்றான்.

விநோ: நாடகமா! நாவலா!!

விஹாரி, "ஆமாம்! அதுவும் உத்தம வகுப்பைச் சேர்ந்ததல்ல! ஒன்றும் தெரியாத பேதைப் பெண்ணாயிருந்தாலே நன்றாயிருந்திருக்கும். அப்பொழுது உண்மை அன்பைப் பெற்றிருக்கக் கூடும். ஆனால் நடிகையோ அரங்கத்தில்தான் சோபிப்பாள், வீட்டில் இருக்கத் தகுதியற்றவள்" என்று வெறுப்புடன் கூறினான்.

விநோதினி சர்வநாடியும் ஒடுங்கியவள்போல் சிறிதுநேரம் வரை பேசாது தலைகுனிந்து நின்றாள். பிறகு குனிந்தவாறே, "என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?" என்றாள்.

விஹாரி: அசம்பாவிதமான எண்ணங்களை விட்டு நற்புத்தியுடன் உன் கிராமத்தில் போய் வசி.

விநோ: எப்படிப் போவது?

விஹாரி: நானே உன்னை ரெயிலிலுள்ள பெண்கள் வண்டியில் ஏற்றி உன் கிராமம் வரை கொண்டுவிட்டு வருகிறேன்.

விநோ: அப்படியானால் இரவு நான் இங்கேயே இருக்கிறேன்.

விஹாரி: இங்கே வேண்டாம். என்மீதே எனக்கு நம்பிக்கை இல்லை.

இதைக் கேட்டதும் விநோதினி அவனுடைய இரு பாதங்களையும் பிடித்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு, "விஹாரிபாபு, என்மீது சற்றுவது கருணை இருக்கட்டும்! இருதயத்தைக் கல்லாகச் செய்து கொள்ள வேண்டாம்! பாவியிடம் சிறிது அன்புகொண்டதனால் உங்களுக்கும் துளி பாவம் சம்பவித்தாலும் பாதகமில்லை" என்று கூறி அவன் பாதங்களைப் பன்முறையும் முத்தமிட்டாள்.

விஹாரிக்கு அவளுடைய செய்கையால் ஏற்பட்ட உணர்ச்சி அடங்க ஒரு நிமிஷமாயிற்று. அவன் மனம் இரங்குவதை முகக் குறிப்பால் உணர்ந்த விநோதினி அவனருகில் மண்டியிட்ட வண்ணம், "பிராணேசுவரா! உங்களை நான் என்றும் அடைய முடியாதென்பது எனக்கு நன்றாய்த்தெரியும். ஆனால் இன்று ஒரு நாழிகை என்னைக் காதலியுங்கள். அது போதும். என் உயிருள்ளளவும் அதை நான் மறவேன். பிறகு அப்பாழடைந்த கிராமத்தில்போய் ஆயுள் முழுவதும் வசிக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்று கூறி அவன்பாதத்தைப் பிடித்தபடியே உட்கார்ந்திருந்தாள்.

விஹாரி பெருமூச்சுவிட்டான். அவனுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. அவள் பிடியிலிருந்து கால்களை விடுவித்துக்கொண்டு எழுந்து தழுதழுத்த குரலில், "இரவு ஒருமணிக்குப் பாஸஞ்சர் வண்டி புறப்படுகிறது" என்றான்.

விநோதினியும் தீனக்குரலில், "அதிலேயே நான் புறப்பட்டுச் செல்கிறேன்" என்றாள். அச்சமயம் சிறுவன் வஸந்தன் விழித்தெழுந்து மஹேந்திரன் அருகில் வந்து நின்றுகொண்டு விநோதினியை உற்று உற்று நோக்கினான்.

விஹாரி, "தூங்கப்போகவில்லையாடா?" என்று கேட்டதைக் கூடக் கவனியாது அவளையே பார்த்துக்கொண்டிருந்தான் வஸந்தன்.

சிறுவனின் களங்கமற்ற அழகிய முகம் விநோதினியை வசீகரித்தது. அவனை வாரி அணைத்துக்கொள்ள இருகைகளையும் நீட்டினாள். வஸந்தன் ஒரு நிமிஷம் யோசித்தான். பிறகு அவளருகில் வந்து நின்றான். அவனை வாரியெடுத்து முத்தமிட்டுத்

தன் கண்ணீரால் அவ்வழகிய குழந்தையின் முகத்தை நனைத்தாள் விநோதினி.

முப்பத்தைந்தாம் அத்தியாயம்

எதிர்பாராத சம்பவங்கள் நேருவதும், சகித்தற்கரிய துன்பங்கள் நிகழ்ந்தும் அதைச் சகித்துக்கொள்வதும் வாழ்க்கையியல்பு. அன்றைய இரவு மஹேந்திரன் வீட்டில் எவ்விதமோ கழிந்தது. மறுநாள் விநோதினியை அழைத்துப்போவதாகச் சொல்லி அன்று சாயரட்சை வெளியே சென்ற மஹேந்திரன் இரவு வீட்டிற்கு வரவேயில்லை. ஹாஸ்டலில் தன் நண்பன் ஒருவனுடன் அன்று இரவைக் கழித்தான். மறுநாள் புறப்படத் தயாராயிருக்குமாறு ஒரு கடிதம் விநோதினிக்கு எழுதித் தபாலில் போட்டுவிட்டான்.

மறுதினம் காலைத் தபாலில் மஹேந்திரன் வீட்டிற்கு அக்கடிதம் கிடைத்தது. ஆசா சக்தியிழந்து சோர்வுற்று இன்னமும் படுக்கையைவிட்டு எழுந்திருக்கவில்லை. "அம்மா, கடிதம் வந்திருக்கிறது" என்று வேலைக்காரன் கடிதத்தை ஆசாவின் கையில் கொடுத்தான்.

கடிதம் என்றதும் அவள் மனம் இடிந்தது. கைநடுங்கக் கடிதத்தை வாங்கிப்பார்த்தாள். மஹேந்திரனின் கையெழுத்து! விநோதினியின் விலாசத்திற்கு எழுதப்பட்டிருந்தது. அவள் உணர்விழந்தவள்போல் ஆனாள். கடிதத்தை அப்படியே வேலையாள் கையில் கொடுத்துவிட்டாள்.

அவன் திகைத்து, "இதை யாரிடம் கொடுக்கட்டும்?" என்றான். "எனக்குத் தெரியாது" என்றாள் ஆசா.

இரவு எட்டு மணியிருக்கும். ஆத்திரத்துடன் மஹேந்திரன் வீட்டினுள் பிரவேசித்தான். நேரே விநோதினியின் அறைப்பக்கம் சென்றான். ஒரே இருட்டு. சப்தமே இல்லை. விளக்கை ஏற்றினான். அவ்வறையில் யாருமில்லை. ஒவ்வோர் இடமாய்த்தேடிப்பார்த்தான். எங்கும் அவளைக் காணாது கலவரமடைந்தான். 'என்ன முட்டாள் தனம் செய்தேன்! நான் அவளைக் கூடவே அழைத்துப்போயிருக்க வேண்டும். நான் இல்லாதிருக்கும் சமயம் அம்மா அவளை வைது திட்டியிருப்பாள். அவள் அதைப் பொறுக்காது எங்கோ சென்றுவிட்டாள்' எனத் தன்னையே நொந்துகொண்டான். அவன் கோபம் தாயின்மீது சென்றது. அவளிடம்போய், "விநோதினி எங்கே? அவளை என்ன சொன்னாய்?" என்று கேட்டான்.

ராஜலக்ஷ்மி: எனக்கு என்ன தெரியும்? அவளை நான் ஒன்றும் சொல்லவில்லை.

மஹேந்திரன் இதை நம்பவில்லை. "தெரியாதா! இருக்கட்டும். நான் அவளைக் கண்டு பிடிக்காது விடப்போவதில்லை" என்று கூறிச் சரேலென வெளியே சென்றான். ராஜலக்ஷ்மி என்ன கூப்பிட்டும் அவன் திரும்பிப் பார்க்கவேயில்லை. வேலைக்காரனிடம் போய், "விநோதினியம்மா எங்கே சென்றாள் தெரியுமா?" என்று கேட்டான்.

"எங்களிடம் ஒன்றும் சொல்லவில்லையே அந்த அம்மாள். எனக்குத் தெரியாது ஒன்றும்" என்றான் வேலையாள்.

மஹேந்திரனுக்குக் கோபம் மேலிட்டது. வீட்டில் யாவரும் சேர்ந்து தன்னை ஏமாற்றச் சதி செய்வதாக நினைத்தான். எப்படியாவது விநோதினியைத் தேடிக் கண்டுபிடிக்க நிச்சயித்து வெளியே சென்றான்.

(தொடரும்)



மழை இருட்டு

ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.

ஆடி மாதம். பதினெட்டாம் பெருக்குக்கு முதல்நாள் சாயங் திரம். மேற்கே தேவாசுரயுத்தத்திற்கு அணி வகுத்தது போல், வரிசை வரிசையாய் நிமிர்ந்தெழும் மேகங்கள். ஆகாயத்தில் யுத்த ஸன்னாஹம்; பூமியின் மீது ஒரு கபடமான அமைதி.

தாவி வருகின்ற இருட்டில், மறையூர் வீரட்டானாறு இருகரையும் புரண்டு சீறிப் பயங்கரமாய் ஓடிற்று. நாணல் படர்ந்த கரையிலே மூங்கில் பாலத்தின் அருகே, இரண்டு பேர் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

"தாத்தா, எப்படி இருண்டுகிட்டு வருகுது பாரேன்! போனவருசமாதிரி இந்தவருசமும் யாரையோ பலியில்லே வாங்கக் காத்திருக்கு இந்த ஆறு! என்ன சுழிப்பு, என்ன கொந்தளிப்பு. கிழிச்சுகிட்டில்லே ஓடுது" என்றான் மத்திய வயதுள்ள ஒருவன்.

"கறுப்பா, பலிவாங்காதே என்ன பண்ணும்? அதோ இருக்காரே சாமி வீரன், அவருக்குச் செய்யவேண்டிய திருவிழா, படைப்பு எல்லாம் நின்றுபோயிட்டுது. அவருக்குவிட்ட மானிய நிலங்களிலுள்ள வரு மானத்தையெல்லாம் ஊர்ப் பட்டா மணியக்காரரும் கணக்குப்பிள்ளையும் சேர்ந்து சாப்பிடுகிறாக. நாலு வருசத்திற்கு முந்தி இந்த மாதிரியான சாவு இங்கே உண்டா? எனக்கு எழுபது ஆகப்போவுது; இது வரையில் இது மாதிரி சேதி காதிலே கூட விழுந்ததில்லே. கலி முத்துது. போனவருசம் பட்டா மணியார் அருமந்த மகன் தவறிட்டான் தெரியுமா? பண்ணுகிற அக்கிரமத்திற்குக் கைமேலே பலன் கிடைத்துவிட்டது" என்று தழுதழுத்த குரலில் மறுமொழி கூறினான் மற்றவன்.

"உங்க மகன் போன வருசம் இறந்தானே; நீங்க எதாகிலும் தப்புத் தண்டாவுக்குப் போறீங்களா? இந்தத் தள்ளாத வயசில் எங்களோடே களை பிடுங்கிறீங்க, உழுறீங்க; ஏதோ உழைச்சுச் சாப்பிடுறீங்க. அடுத்த ஊர்ப் பட்டாமணியாரர் பண்ணுகிற அக்கிரமங்கள் கணக்கு வழக்கில்லே; ஆனால், வருசத்திலே ஒரு பிள்ளை உண்டாகுது. நிலத்துக்கு நிலம் சேருது. அதற் கென்ன சொல்றீங்க?" என்று உரைத்தான் கறுப்பன்.

இந்த வார்த்தைகள் கிழவனுடைய ஞாபகங்களைத் தட்டி யெழுப்பின. ஒன்றன் பின் ஒன்றாக அவை அவன் மனத்தில் எழுந்தன. உழுத நிலம் போல் பள்ளங் குழிகள் விழுந்த அவன் முகத்தில் கண்ணீர் அருவி பாய்ந்தது.

"இந்த ஜன்மத்திலே நான் ஒரு பாவத்தையும் அறியேன். முன்னே எதானும் செய்திருப்பேன். அதனுடைய பலன் இது. சும்மா நடக்குமா,

அப்பா? அவன் இருந்தால் எனக்கு எவ்வளவோ உதவியாயிருக்கும். வீட்டிலே சும்மா குந்திக்கிட்டிருப்பேன். என்வினை மண்டையைப் போடுகிற நாள் வரையில் உழைச்சு உழைச்சு சாப்பிடணும். உன்னைப் பார்க்கிறபோதெல்லாம் என்மகன் ஞாபகம் வருது" என்று தொண்டையடைக்க மொழிந்தான் முதியவன்.

"தாத்தா, மன்னிக்கணும். வாய்தவறி இறந்து போன உங்க மகன் பேச்சை எடுத்துவிட்டேன். ஆறிவருகிற புண்ணைக் கீறிவிட்டேனுங்க. வீட்டுக்குப் போவோமா? மழை குமுறிக்கொண்டு வருகுது. நம்ம வீடுகள் ஊத்தற இந்த மழையிலே என்ன ஆகுமோ? பயமாயிருக்குது" என்று இரங்கிப் பேசினன் கறுப்பன்.

"வீரன் காப்பாத்துவான். கவலைப்படாதே, தம்பி. பாலம் ஓரத்தில் முறிஞ்சிருக்குது. வீரப்பனே! நீதான் காப்பாத்தவேணும், இங்கே வருகிற ஏழை ஜனங்களை" என்முன் கிழவன் கோயிலிருந்த திசை நோக்கிக் கைதொழுதபடி.

கறுப்பன் முன் செல்லக் கிழவன் சிந்தையில் ஆழ்ந்தவனய் மெள்ள வீட்டை நோக்கி நடந்தான்.

* * *

அதே சமயத்தில் மறையூர்க் கிராமத்தில் ஒரு வீட்டில் தாயும் பெண்ணும் பேசிக்கொண்டிருந்தார்கள்:

"அம்மா, என்னை நாளைக்கு ஊருக்கு அனுப்பிவிடு. இங்கே வந்து இரண்டு மாசத்திற்கு மேலாச்சு. என் ஆத்துக்காரருக்குச் சரியான உடம்பில்லை. மாமியார் கோபித்துக்கொள்ளுவார். அவருக்கும் உடம்பு தள்ளாத உடம்பு. அவர் உன்னைக்காட்டிலும் என்னிடத்தில் பிரீதியாயிருக்கிருர். இருந்தாலும் பிறந்தகத்தில் ரொம்ப நாள் உட்கார்ந்தால் யாருக்குத்தான் கோபம் வராது?"

"என்ன சுவர்ணம், நீ வருஷத்திற்கு வருஷம் இங்கே வருகிறுயா? ஒவ்வொரு வருஷமும் டில்லியிலிருந்து வரத்தான் முடியுமா? உன்னைப் பார்த்து வருஷம் மூன்றுக்கு மேல் ஆகிவிட்டன. நாளைக்குப் பதினெட்டாம் பெருக்கு; கிட்டு வந்துவிடுவான். நீங்கள் மூன்று பேரும் வேடிக்கையாய்க் காவிரிக்கரையில் உட்கார்ந்து சாப்பிடலாம். அவன்தான் உனக்குத் தெரியுமே; உன் மாமா ஆத்தில் வாசித்துக்கொண்டிருக்கிறுன். நீ பார்ப்பதற்குத்தான் அவனை அழைத்துவரப் பாலுவை அனுப்பினேன். இன்றைக்குத்தான் கடுதாசி வந்திருக்கிறதே. நீ தான் பிரித்துப் பார்த்தாயே."

"ஏனம்மா, பாலுவுக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை? எம். ஏ. பாஸ் பண்ணி இரண்டுவருஷத்திற்கு மேல் இருக்கும் போலிருக்கிறதே. என் ஆத்துக்காரரிடம் சொல்லி அங்கே ஏதேனும் வேலை பண்ணிவைக்கச் சொல்லுகிறேன். தூரத்தைப் பார்த்தால் முடியுமா? இந்தப் பக்கத்தில்தான் கிடைக்கவில்லையே."

"அவனுந்தான், சுவர்ணம், அத்திம்பேரிடம் போகவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறுன். ஏதோ டைப்பாம், அதைக் கற்றுக்கொண்

டிருக்கிறான். ஏதோ குறுக்கெழுத்தாம், அதவுந்தான் கற்றுக்கொள்கிறான். எல்லாவற்றிற்கும் வேளையும் பொழுதும் வரவேண்டாமா? உன் தம்பியையும் உன்னோடு அனுப்பிவிட்டால் தனியாய் நான் என்ன பண்ணுகிறது?''

''வீட்டை யாரையாவது பார்த்துக்கொள்ளச் சொல்லுகிறது. நிலத்தைக் குத்தகைக்கு விடுகிறது; நீயும் அங்கே வந்துவிடுகிறது.''

''சொல்லுகிறதெல்லாம் சரிதான். இன்னும் ஒரு வருஷம் பார்க்கிறேன். அப்படியொன்றும் கிடைக்காது போனால் அங்கேயே வந்துவிட்டால் போச்சு.''

''அம்மா! கிட்டு சமத்தாயிருக்கிறானே? முன்னெல்லாம் ரொம்பக் குறும்பு பண்ணுவானே. மரத்தில் ஏறுகிறது, தூணில் தாவுகிறது, இவையெல்லாம் விட்டு விட்டானோ இல்லையோ?''

''இப்பொழுதுதான் நீ கிட்டுவைப் பார்க்கவேணும். குறும்பெல்லாம் இருந்தவிடம் தெரியவில்லை. கிளாஸிலே முதல் மார்க்கு வாங்குகிறான் என்று உன் மாமா கூட எழுதியிருக்கிறான். பாலுவும் இப்படித்தான் இருந்தான். அவன் பேசுகிற சோடு உனக்கு இப்பொழுது தெரிகிறதா? எல்லாம் வயசானால் சரியாய்ப் போய்விடும்.''

''அம்மா, மழை பெய்யும்போல் இருக்கிறதே. மழையிலே நனையாமல் வரவேணுமே பாலுவும் கிட்டுவும்.''

''அதுகூட எனக்குப் பயமில்லை. மூங்கில் பாலத்திலே வராமல் பெரிய பாலஞ் சுற்றி வந்தால் பாதகமில்லை. அதுதான் பாலு போயிருக்கிறானே, அவனுக்குத் தெரியாதா? இருந்தாலும் சௌக்கியமாக வந்தால் இந்த ஊர் அனுமாருக்கு வடை மாலை சாத்துவதாக வேண்டிக்கொண்டிருக்கிறேன்.''

''இந்த ஊர் அனுமார் ரொம்ப வரப்பிரசாதியாமே? நானும் சந்தனக் காப்புச் சாத்துவதாக வேண்டிக்கொண்டிருக்கிறேன். ஆத்துக்காரருக்குத்தான் ஏதேனும் பீடை பிடித்துக்கொண்டே யிருக்கிறதே.''

''உங்கள் அப்பா, அவர் இருக்கிற வரையில் அந்த அனுமாரைத்தான் நம்பியிருந்தார். அவருள்ள வரையில் ஒரு குறையும் வரவில்லை. நீங்களெல்லாம் சௌக்கியமாயிருக்கிறதை அவர் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை'' என்று சொல்லிக்கொண்டே கண்ணீர் உகுத்தாள் அப்பெண்ணின் தாய்.

வீட்டுக்காரியம் சீக்கிரமாக ஆகிவிட்டதால், படுக்கையில் படுத்துக்கொண்டே அநேக ஆயிரம் விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

மழை வேகமாய்ப் பெய்யத்தொடங்கிற்று. இடியும் மின்னலும் மும்மரமாயிருந்தன. ஏதோ இவர்கள் சம்பாஷித்தார்களே யொழிய இவர்கள் சிந்தையெல்லாம் பாலுவினிடத்திலும் கிட்டுவினிடத்திலுந்தான் இருந்தது.

இரவு சுமார் எட்டுமணியிருக்கும்; மழை சற்று நின்றது. ஆனால் காற்று நின்றபாடில்லை. ஓலமிட்டுக்கொண்டிருந்தது. வீரட்டான் ஆற்றங்கரைக்கு இக்கரையிலுள்ள வாதவனூரில் ஒரு வீட்டுத்திண்ணையில் இருவர் உட்கார்ந்திருந்தார்கள்.

''மழை சற்று நின்றிருக்கிறது. இப்பொழுது கிளம்பலாமா? கிட்டு.''

"ஆமாம், கிளம்புவோமே. பாலத்தைச் சுற்றிக்கொண்டு போக வேண்டாம். மூங்கில்பாலத்தின் வழியாகப் போய்விடுவோமே" என்று மொழிந்தான் கிட்டு.

"மழையுங் காற்றுமாயிருக்கிறது. மூங்கில் பாலம் என்னவாயிருக்குமோ? இராத்திரி வேண்டுமென்றால் இங்கே தங்கிவிட்டால் போச்சு; மாமா கொடுத்த பக்ஷணத்தைச் சாப்பிடுகிறது. இங்கேயே இருந்துவிடுவோம். பல பலவென்று பொழுது விடிகிற சமயம் ஊருக்குக் கிளம்புவோம். போகிற தாயிருந்தால் பெரிய பாலத்தைச் சுற்றிக்கொண்டுதான் போகவேண்டும்" என்றான் பாலன்.

"இந்த வாதவனூரில் இராத்திரியிலே தங்கினால் அம்மா அக்கா கவலைப் படுவார்கள். இப்பொழுதே கிளம்பிவிடுவோம். ஆற்றுக்கு அக்கரைதானே நம் ஊர். மூக்கை இப்படித் தொடுவானேன்?" என்று பதில் கூறினான் கிட்டு.

விதியின் வசமோ, அல்லது புத்தியில்லாத்தனமோ கிட்டுவுக்கு இணங்கிவிட்டான் பாலு.

மின்னல் வெளிச்சத்தில் தடவிக்கொண்டே மூங்கில் பாலத்திற்கு வந்தார்கள். கிட்டு முன்னால் பாலத்தின் மேல் காலை வைத்தான்.

"ஜாக்கிரதையாகப் போ; பதற்றம் வேண்டாம்" என்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே கிட்டு வேகமாய் நடந்தான்.

திடீரெனத் தொப்பென்ற சப்தங் கேட்டது. "ஐயோ! பாலு, அம்மா! போறேனே" என்ற கூச்சல் எழுந்ததோ இல்லையோ, பாலு தண்ணீரில் குதித்தான். தம்பியை வெள்ளம் அடித்துக்கொண்டு போய்க்கொண்டிருந் தது. அவன் முழுகவில்லை; நீந்துகிறான். பாலு அவனைப் பின் தொடர்கிறான். தம்பி தலை தெரிகிறது. தமையனால் காப்பாற்ற முடியவில்லை.

மறையூர்ப் படித்துறை தென்பட்டதும் பாலுவுக்கு மார்பு பக் பக் கென்று அடித்தது. அவ்வூர்த் துறைக்குப் பக்கத்தில் ஒரு மதகு. அதன் அருகில் ஒரு பெருஞ்சுழல் பகாசுரன் மாதிரி ஆவென்று வாயைத் திறந்து கொண்டிருந்தது. அந்தச் சுழலில் கிட்டு அகப்பட்டுவிட்டான். அது அப்படியே அவனை உள்ளே இழுத்துவிட்டது. பாலுவும் அதில் அகப் பட்டான். ஆனால் அவனை அது மேலே கொணர்ந்து தள்ளிவிட்டது. எந்தத் துறையில் கிட்டுவும் அவனும் தண்ணீரில் துளைவார்களோ அந்தத் துறையில் அவனை ஒதுக்கிவிட்டது.

பாலுவுக்குப் புத்தி நிதானப்படவில்லை. மண்டையில் திடீரென்று ஓர் அடி விழுந்தால் ஒன்றுமே தோன்றாததுபோல், அவன் அசைவற்று நின்றான். இதற்குள் நின்ற மழை மும்முரமாய் ஆரம்பித்துவிட்டது. பைத்தியம் பிடித்தவன்போல் அந்தச் சுழலையே பார்த்தவண்ணம் அவன் நின்றான். ஒரு சம்பவமும் நடவாதது போலவே ஆறும் ஓடிக்கொண் டிருந்தது.

பெருங்காற்றிலே மரங்கள் சட சட வென விழுந்தன. வலையில் அகப் பட்ட மிருகம்போல உறுமிற்று புயற்காற்று. எங்கே பார்த்தாலும் பஞ்ச பூதங்களின் பெரும்பூசல்தான்.

இவைகளையெல்லாம் பாலு கவனிக்கவில்லை. தோட்டிகள், தொண்டமான்கள், பண்டிதர்கள், பாமரர்கள், ஞானிகள், மூடர்கள், நல்லவர்கள் கெட்டவர்கள், ஆடவர்கள், விருத்தர்கள், பெண்கள், சிசுக்கள் என்று பாராது எல்லோரையும் ஒருமிக்க வாரியடித்துச் செல்லும் விதியேபோல் விரைந்து செல்லுகின்ற வீரட்டான் ஆற்றோடு, அவன் கண்களும் ஓடிக்கொண்டிருந்தன.

மணி பதினொன்றாயிற்று. சுவர்ணமும் தாயாரும் வாசலில் எத்தனையோ தரம் வந்து எட்டிப்பார்த்தார்கள். எங்கேயாவது தொழுவிலே கட்டியிருக்கிற மாடு கத்துவது கேட்கும்போதெல்லாம் வண்டி வாசலில் நிற்பதாக எண்ணி வெளியே வந்து ஏமாந்து போவார்கள். 'ஒரு வேளை வாதவனூரில் தங்கியிருப்பார்கள்; பொழுதுவிடிய அவர்கள் இங்கே வரலாம்' என்று மனத்தை ஒருவாறு தேற்றிக்கொண்டு தூங்கவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

பாலு தன்னை அறியாமல் வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். ஏதோ மூச்சு ஓடிக்கொண்டிருந்தது. மற்ற உணர்ச்சிகளெல்லாம் இறந்துவிட்டனவென்றே சொல்லிவிடலாம். காற்றின்முன் மிதந்து செல்லும் ஒரு பொருளேபோல் அடிபெயர்த்தான். ஏதோ ஒன்று அவனைத் தள்ளிக்கொண்டு போயிற்று. வீட்டிற்குப் போனதும் கதவைத் தட்டவில்லை. அங்கே கல்லும் கட்டையும் போல் நின்றான். இதற்குள் ஒரு பெரிய காற்றுக் கதவை மோதிற்று; யாரோ தட்டுவது போல் தாய்க்கும் பெண்ணுக்கும் காதில் பட்டது.

தாயாரும் சுவர்ணமும், "கிட்டு! கிட்டு!" என்று சொல்லிக்கொண்டே கதவைத் திறந்தார்கள். பாலுதான் நிற்கிறான். கிட்டுவைக் காணோம்!

"கிட்டு எங்கே பாலு?" அதற்குப் பதில் இல்லை.

"கிட்டு உன்னோடு வரமாட்டேனென்று சொல்லிவிட்டானா?" அதற்கும் பதில் இல்லை.

"குழந்தையை ஆற்றில் பறிகொடுத்துவிட்டாயா?" அதற்கும் பதிலில்லை.

"ஐயோ! ஐயோ! இதற்குத்தானா இரண்டுமாதம் காத்தேன்? ஐயையோ! பதினெட்டாம் பெருக்குக்குச் சேர்ந்து சாப்பிடலாமென்று சொன்னாயே அம்மா! இதுதான் பதினெட்டாம் பெருக்கோ, அம்மா!"

"அம்மா, சுவர்ணம்? நான் என்ன பண்ணுவேன்! இதற்குத்தானா நான் பாலுவை அனுப்பினேன்? எமன் பாலக்கரையிலே உட்கார்ந்திருந்தான். அனுமாரே! இதற்குத்தானா உனக்கு வடைமாலை சாத்துவதாக வேண்டிக்கொண்டேன்." தாயும் பெண்ணும் கட்டிக்கொண்டு புலம்பினார்கள். பாலு பேச்சற்று நின்றான். அவனுக்கு அழுகைகூட வரவில்லை. கண்ணீர் ஊற்றுக்கள் கூடச் சுடுசோகத்தினால் வறண்டுபோய்விட்டன போலும்!

மழை இரக்கமின்றிப் பெய்தது; இடி ஓயாமல் இடித்தது. மின்னல் இடைவிடாமல் மின்னிற்று. ஊர் பெரிய உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. பொழுது விடிந்தால் கூத்தும் கொண்டாட்டமும். ஆனால் ஓர் அகத்தில் விழிப்பும், விம்மலும்! ஏனோ இது! ஏனோ இது!!

கிராமவாசம்

'ஸ்ரீ'

சேந்தனூர் ஓர் அழகிய சிறு கிராமம். அதைச் சுற்றிலும் வயல்களும் தோப்புகளும். அந்த ஊர் வெற்றிலைக்கும் வாழையிலைக்கும் பேர்போனது; கலியாண மாதங்களில், அவைகளை மொத்தமாய் வெளியூரார் வாங்கிவிடுவதால், அவை நல்லதாய் ஊராருக்குக் கிடைப்பதே அருமை. அங்கே கரும்புத் தோட்டங்களும் ஆலைகளும் உண்டு. பூமி செழித்தது; ஆனால் வாய்க்கால் கிடையாது. நீர்ப்பாய்ச்சல் ஆழக்கிணறுகளிலிருந்து ஏற்றமடித்து ஆகவேண்டும். அக்கிரகாரம் இரண்டே வீதிகள்; அப்பால் மற்றக் குடிஜனங்கள் வசிக்கும் தெருக்கள்; பள்ளச்சேரி வயல் நடுவில். ஜனசங்கியைப்படி அந்த ஊரில் சுமார் இரண்டாயிரம் ஜனங்களே உண்டு; ஊரார் சொல்படி, பாழ்மனைகளிலும், வீட்டுக்கொல்லைகளிலும், வயல்வெளியிலுள்ள மரங்களிலும், அநேக பேய் பிசாசுகள் இருந்தன. இவைகளைப்பற்றிய கதைகள் குழந்தைகளுக்குக்கூடத் தெரியும். சகலரும் முழுநம்பிக்கையுடன், ஊரெங்கும் இத்தனை பேய்கள் இருப்பதைச் சகஜமாகப் பாவித்து, சமயத்துக்குத் தக்கபடி அவைகளிடமிருந்து ஒதுங்கித் தப்பிக்கொண்டு, தங்கள் காரியங்களை முடித்துக்கொள்வார்கள். மொத்தத்தில், ஊரார் நல்லவர்; உழைப்பாளிகள். அவ்வூர்ப் பிராமணப் பெண்கள், காய்கறித் தோட்டம் போடுவதிலும் சகுனபலன் சொல்வதிலும் பரம்பரை வழக்கப்படி பண்டிகைகள் கொண்டாடுவதிலும் கைதேர்ந்தவர்கள்.

ஊர்நடுவில் ஓர் அரச மரம் உண்டு. அதற்கெதிரில் ஒரு கிணறு; அதன் நீர் கருப்பஞ்சாறு கலந்தாற் போலத் தித்திக்கும் என்றும், பருப்பைச் சட்டென்று வேகவைக்கும் என்றும் பேர். கொல்லைக் கிணற்றுநீரை மற்ற விஷயங்களுக்கு உபயோகப்படுத்திக்கொண்டு, தாகத்துக்கும் சமையலுக்கும் நாலுகுடமாவது அங்கிருந்துதான் எல்லா ஸ்திரீகளும் மொண்டுபோவார்கள். காலையில், உலை காத்திருக்கும் என்று அவசரமாய்ப் போய்விடுவார்கள்; சாயங்காலம், ஒருவரையொருவர் எதிர்பார்த்து நின்று, சற்று நேரம் கிணற்றண்டை வம்பு பேசிவிட்டுப் போவார்கள்.

இந்த ஊருக்குப் புதிதாய்ப் பவானி என்பவள் வந்தாள். அவள் மாத்வப் பெண்; சுமங்கலி; ஆனால் சிறுவயதிலேயே அவள் கணவன் எங்கேயோ ஓடிப்போய்விட்டதால், வாழாப்பெண்ணாய்ப் பட்டணத்தில் தமையன் வீட்டில் இருந்து வந்தாள். அவன் ஒரு வக்கீல்; அவன் மனைவிக்குத் திடீரென்று இருமல் வியாதி வந்தவுடன், அவன் கோடை லீவில், நல்லகாற்றுள்ள கிராமவாசத்தைத் தேடிச் சேந்தனூருக்கு வந்தான். அங்கே எல்லோரும் சொந்தவீடுகளில் குடியிருந்ததால், அவன் தனிவீடு கிடைக்காமல் சொற்ப வாடகைக்கு ஒட்டுக்குடியிருந்தான். பட்டணத்தாரைப் போல் கிராமவாசிகள், அவன் மனைவியின் நோயைக்கண்டு தொத்து வியாதியென்று பயப்படவில்லை.

சுற்றுமுள்ள டயிர்ப்பச்சையின் செழிப்பும், கிராமவழக்கங்களும், ஊர்ப்பெண்களுடைய சிநேகபாவமும் பவானிக்கு ஆனந்தமாயிருந்தன. இத்தனைநாள் சாரமற்றிருந்த வாழ்க்கையில் அவள் இப்பொழுதுதான் ஒரு புது மலர்ச்சியைக் கண்டாள். வீட்டுக் காரியங்களை அவள் முணுமுணுக்காமல் செய்தாள். மதனியைப் பரிவாய்ப் பேணினாள். பட்டணத்தில், ஒழிந்த நேரத்தில் ஒரு பொழுது போக்குமில்லாமல், வீட்டில் அடைத்துக்கிடந்த நாளில் அவள் சதா கோபமும் குறுகுறுப்புமாய் இருந்ததுண்டு. இப்பொழுதோ, பேசத் தோழிகளும் காலைவீசி நடக்க ஓர் இலக்கும் கிடைத்த பின் அவள் தன் குறைகளைப் பாராட்டவில்லை. துளி தேனை உண்டு களிக்கும் வண்டைப்போல, அவள் மனம் சிந்தனையற்று இருந்தது.

பவானிக்குப் படிக்கத் தெரியாது. அவள் சுயபாஷையான கொங்கணியில் அக்ஷரமே கிடையாது. தமிழும் தெலுங்கும் அவளுக்கு நன்றாய்ப் பேசவரும்; ஆனால் ஒரு பாஷையிலும் எழுதத் தெரியாது. அவளுக்கு எவ்வித அநுபவமும் குறைச்சல்; பேதை மனத்துடன், கேட்டதையெல்லாம் உண்மை என்று நம்பும் சுபாவமுடையவள்.

ஒருநாள் மாலை. அவள் கிணற்றங்கரைக்குப் போனவுடன், மற்றப் பெண்கள் நில்லாமல் நீர் மொண்டுபோவதைக் கண்டாள். கோடிவீட்டுச் செல்லம்மாள் மகன் கோபாலன், இரண்டேநாள் ஜ்வரத்துக்குப்பின் திடீரென்று அபாயநிலையிலிருப்பதாக அவள் கேட்டறிந்தாள். இந்தச் செய்தியைச் சொன்ன அவள் தோழி ஜானகி, கோபாலனுடன் குழந்தைப் பருவமுதல் பழகியவள். துக்கத்தைமீறிய பரபரப்புடன் அவள்; "அவன் இன்னும் மூன்றே

முக்கால் நாழிகைகூடப் பிழைத்திருக்க மாட்டானும். அதற்குள் எல்லா வீடுகளிலும் சாப்பிட்டாகவேண்டும். உனக்குக் கிராமாந்தர வாடிக்கை தெரியாது. ஒரு வீட்டில் சவம் கிடந்தால், தெருவிலேயே ஒருவரும் சாப்பிடமுடியாது" என்றாள்.

'தாய்க்கு ஒரு மகன்-பதினறு வயதுப் பையன்-சாகக் கிடக்கும் போது, மற்றவர்களுக்குச் சாப்பாட்டைப்பற்றி என்ன கவலை' என்று ஒரு நிமிஷம் பவானியின் மனத்தில் இகழ்ச்சி தோன்றிற்று. பட்டணவாசத்தில், அயல்வீட்டுச் சாவுக்காக எவரும் பட்டினி கிடப்பதில்லை என்றும், ஜானகிக்கு இல்லாத வருத்தம் தனக்கு இருக்கக் காரணமில்லை என்றும் நினைத்து, அவள் பேசாமல் வீடு திரும்பினாள். கோபாலன் இன்னான் என்று மட்டும் அவளுக்குத் தெரியும். வீட்டுக்காரியிடம் அவனைப்பற்றி விசாரித்தாள். இந்தச் சந்தர்ப்பத்தில், யார்தான் அவனை நினைத்துப் பரிவாய்ப் பேச மாட்டார்கள்! அவன் விளையாட்டுப்பிள்ளை; குணசாலியும் கூட என்பதைக்கேட்டுப் பவானி அவன் தாயை எண்ணித் துக்கித்தாள். அன்றிரவு அவளுக்குச் சாதம் பிடிக்கவில்லை; தூக்கம் வரவில்லை. பண்டிதன் இட்ட தவணையைமீறிக் கோபாலனுக்கு உயிர் துடித்துக் கொண்டிருப்பதாகவும் பாதிராத்திரிக்குள் பிராணன் போய்விடுமென்றும் வீட்டுக்காரி பத்துமணிக்கு வந்துசொன்னாள். "நீ இந்த மாதிரிக் கதவைத் திறந்து திறந்து வாசலில் போகாதே! நான் கண்டிப்பாய்ச் சொல்கிறேன், கேள்: உனக்குச் சொன்னாலும் தெரியவில்லையே. இதென்ன, பெரிய சாவா? உயிர் போவேனா போவேனா என்று தவிக்கிறது. செத்தபின்னும், அந்த உயிருக்குத் தனியே போக மனம் வராது. பயப்படும். தெரிந்த இடங்களில் வந்து, வீடு வீடாய்க் கதவைத் தட்டும். நீ கதவைத் திறந்தால், உள்ளே புகுந்துவிடும்; உன்னைத் தொட்டுவிடும்" என்றாள்.

இதைக்கேட்டு நடுங்கி, பவானி அறைக்குள் போய்ப் படுத்துக் கொண்டாள். வெகுநேரம் அழுகைக்குரலை எதிர்பார்த்து உற்றுக்கேட்டாள். நாய் குரைத்தது. சில ஜனங்களின் பேச்சுக்குரல் கேட்டது. திரும்பவும் நிச்சப்தம். பிறகு நாய் குரைப்பதும் அழுகைக்குரலும் சேர்ந்துகேட்டன. பவானி அறையைவிட்டு எழுந்து, வாசற்கதவண்டை போனாள். நான்கு வீடுகளுக்கப்பால், கதவு தட்டும் சப்தம் கேட்டது. கதவு திறந்த சப்தம் கேட்கவில்லை. யாரேனும் திறப்பார்களா? தனிமைக்குப் பயந்த அப்பிராணன் மேல், பவானிக்குத் தன்னை மீறிய பரிதாபம் தோன்றிற்று. அவள் கதவைத் திறந்தாள்; வாசலண்டை போய் இருட்டை உற்றுப் பார்த்தாள். குளிர்காற்று அவள்மேல் வீசிற்று; யாரோ அவளைத்

தொடுவதுபோல் இருந்தது. 'பயப்படாதே' என்று காற்றை அணைத்துக்கொண்டு, அவள் கீழே விழுந்து மூர்ச்சித்தாள்.

அவளுக்குச் சுயபுத்திவர மறுநாள்வரை சென்றது. அப்புறந் தான் கோபாலன் பிழைத்துவிட்டான், தான் கேட்டதெல்லாம் ஏதோ இராச்சப்தங்கள் என்று அவள் தெரிந்து கொண்டாள். அவளுடைய தீரமும் தியாகமும் வியர்த்தமாய் விட்டன; அதைப் பற்றிக் கேட்டவர் சிரிப்பாரென்று, அவள் தான் மூர்ச்சித்ததன் காரணத்தைப் பொய் சொல்லி மறைத்துவிட்டாள். அடுத்த மாதம் அவள் மறுபடியும் பட்டணம் போய் விட்டாள்.

"என்ன விநோதம்!"

'மாரார்'

நாரதர் ஒருநாள் வைகுண்டம் வந்தார். திருமாமணி மண்டபத்திற்குள் சென்று அங்கே பகவான் ஏகாந்தமாய் வீற்றிருக்கக் கண்டார். நித்யசூரிகளும் முக்தியடைந்த பக்தகோடிகளும் இல்லாத சமயம் அது. பிராட்டியும் வேறொரு காரியத்தில் கண்ணுடையவளாய்ப் பரமபதநாதன் பக்கத்தை விட்டுப் பிரிந்திருந்தாள். பகவானை நாரதர் கண்குளிரத் தரிசனஞ்செய்து கைகூப்பிச் சொல்லலானார்: "அடியேனைச் சிரஞ்ஜீவியாகச் சிருஷ்டித்த தேவரீர் எனக்கு ஓர் அனுக்கிரகம் செய்ததாக நினைக்கலாம். அந்த வரத்தால் நான் படும் துயரத்திற்கு அளவில்லை. உலகம் எங்கும் ஜனங்கள் பிறந்து சண்டை சச்சரவு செய்து வேறு ஜீவன்களைப் பெற்று மறித்துப்போவதைப் பார்க்கப் பார்க்க அடியேன் மனம் சோர்வடைகிறது. இதே தொழில்-எத்தேசத்திலும் எக்காலத்திலும் நடந்துவருகிற இந்தப் பழங்கதை-சலிப்பையே தருகிறது. எனக்குப் பொழுதுபோவது வெகு கஷ்டமாயிருக்கிறது. நூதனமாக வேறு ஏதேனும் நேராவிடில் எனக்குப் பித்துப் பிடிக்குமென்று தோன்றுகிறது" என்று முறையிட்டார்.

அதற்குப் பகவான் சிரித்துக்கொண்டு, "நாரதரே, உமக்கு முன்னமேயிருந்து ஆதியில்லாதவனாய் வெகுகாலமாக நான் இருந்துவருகிறேனென்பது உமக்குத் தெரியாதா? உம்மைப்போல் எனக்கும் அந்தம் இல்லை. அப்படியிருக்க எனக்குச் சலிப்பு வரவில்லை. திரிகாலத்தையும் தரிசிக்கச் சக்தியுண்டானால் இவ்வுலகம் ஒரு பெரிய நாடகசாலையாகத் தோன்றும். நகைச்சுவை மிகுதியாகத் தரும். மனிதர்களின் எண்ணங்களும் செயல்களும் அவர்களுடைய யுக்திகளும் குயுக்திகளும் பார்க்கப் பார்க்க வேடிக்கையாக இருக்கும். இந்த விசித்திரத்தை ஆராய்வதே என் லீலை. இது இல்லாவிடில் நானும் உம்மைப்போல் மனம் சலித்துப் பொழுதுபோக்குவது கஷ்டமாகி வெகு வருஷங்களுக்கு முன்னமேயே தற்கொலை செய்துகொண்டிருப்பேன். என்னுடன் புறப்பட்டு வாரும். ஒரு மூன்றுநாட் காலம் பூலோகம்போய்ச் சுற்றி வருவோம். உமக்குத் திரிகாலமும் அறியக்கூடிய சக்தி தருகிறேன். அப்பொழுது நீரும் எங்கும் பலவித விநோதங்களைக் காண்பீர்" என்றார்.

* * *

உடனே பகவானும் நாரதரும் ஓர் இளைஞர் போலவும் விருத்தர் போலவும் உருவம் கொண்டு அந்த அந்த நாட்டிலுள்ள நடையுடை பாவனைகளைக் கைக்கொண்டு பூவுலகத்தில் ஸஞ்சாரஞ் செய்துவந்தார்கள். முதல் நாள் ஒரு நகரத்தின் ராஜவீதியில் உயர்ந்த நவீன நாகரிக முறையில் நடத்

தப்படும் சிற்றுண்டி சாலை ஒன்றினுள்ளே போய்ச் சிற்றுண்டிக்காக வந்தவர்களைப்போல் உட்கார்ந்தார்கள். அவர்களைச் சுற்றிப் பலர் பலகாரங்கள் தின்றுகொண்டும் காப்பி, டீ முதலிய பானங்கள் அருந்திக்கொண்டும் இருந்தனர். பகவான் பக்கத்தில் ஒரு மேஜையினருகில், ஜிலேபி, குலாப்ஜான் இன்னும் சில பக்ஷணங்களைச் சாப்பிட்டுவிட்டு இருபது வயதுள்ள ஒரு வாலிபன் காப்பி குடித்துக்கொண்டிருந்தான். பகவான் அவனை உற்றுப் பார்க்கும்படி நாரதருக்குச் சமிக்ஞை செய்தார். அப்பொழுது அவ்விளைஞன், "பேஷ்! தேவேசையர் காப்பிதானையா காப்பி! காப்பி என்றால் என் என்று கேட்கும். மற்றதெல்லாம் காப்பியாகுமா?" என்று சொல்லிப் புகழ்ந்து கைக்குட்டையால் உதட்டைத் துடைத்துக்கொண்டிருந்தான். திரிகால தரிசனம் பெற்ற நாரதர் பகவானை நோக்கி, "ஐயோ! இந்தப் பையன் இந்தக் காப்பிக்குப் புகழ்பாடுகிறானே. அந்தப் பாத்திரத்தில் பித்தவாத ஜுரம் கண்டு பிழைத்த ஒருவன் இவனுக்கு முன் காப்பி குடித்தானே! செவ்வையாய்ச் சுத்தஞ்செய்யாத அந்தப் பாத்திரத்திலிருந்த வியாதிக் கிருமிகளைக் காப்பியுடன் உட்கொண்டுவிட்டான். முப்பதுநாளைக்கெல்லாம் இதன் மூலமாக ஜுரங்கண்டு சாகப்போகிறான். இது விஷமென்று அறியாமல் இந்தக் காப்பிக்குக் கவி கூறுகிறானே!" என்று சொல்லிப் பகவானைப் பார்த்து, "இது தங்களுக்கு விளையாட்டாக இருக்கிறதோ? எனக்கு விசனத்தைத் தருகிறதே!" என்றார். அதற்குப் பகவான், "விநோதமோ விசனமோ அது எப்படியோ இருக்கட்டும். இந்திர ஜாலம்போல் உலக நடவடிக்கை இருக்கிறதல்லவா?" என்றார்.

* * *

பிறகு இருவரும் காப்பி சாப்பிடுவதுபோல் பாவனை செய்து அதன் விலையைக் கொடுத்துவிட்டு அங்கிருந்து வெளியே புறப்பட்டார்கள். சற்றுத் தூரத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஒரு பெரிய தேரை இழுத்துக்கொண்டிருப்பதை அவர்கள் கண்டார்கள். அதன்மேல் ஒரு தேவதையின் விக்கிரகம் ஆடையாபரணம் புஷ்பங்களாகியவற்றால் நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பெற்றிருந்தது. அத்தேரின் முன் ஆண் பெண்கள் அனைவரும் கைகூப்பி நிற்பதையும் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரிப்பதையும், இன்னும் சிலர் வடத்தில் தேங்காய்களை உடைப்பதையும், பின்புறத்தில் தேரோட்டிகள் அதிர்வெடி, உலுக்குமரம், வாத்திய கோஷம் இப்படிப் பலவித ஆரவாரம் செய்வதையும் பகவானும் நாரதரும் கண்டனர். ஆனால், தேர் ஒருமணி நேரமாக நகரவில்லை. சற்றுமுன் அது முட்டுக்கட்டைக்கு அடங்காமல் வேகமாய் ஓடிக் கீழே விழுந்து தொழுது கொண்டிருந்த இருவர்மேல் ஏறி நசுக்கிவிட்டதென்று கூட்டம் கூட்டமாய் நின்று ஜனங்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். பகவானும் நாரதரும் அங்கே சென்று ஜனங்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதைக் கவனித்தார்கள். பக்கத்தில் சிலர், "சுவாமிக்கு ஏதோ அபசாரம் நேர்ந்துவிட்டது. அதனால்தான் இரண்டுபேர் சக்கரத்தில் அறைபட்டார்கள். அந்தக் குறை நீங்க ஏதாவது சாந்தி செய்தாலொழியத் தேர் நகராது; நகர்ந்தாலும் வேறு ஆபத்து ஏதாகிலும் உண்டானாலும் உண்டாகும்" என்று பயத்துடன் பேசிக்கொண்டார்கள். கோவில் தருமகர்த்தா,

தேரோட்டும் தச்சர்கள் முதலிய எல்லோரும் கலந்து யோசித்துக்கொண்டு, நான்கு சேவல்களைத் தருவித்து அவற்றின் தலைகளைத் தேரடியில் சீவி எறிந்துவிட்டு உடல்களைத் தூக்கி மேலே ஸ்வாமிக்குக் காட்டுவித்தார்கள். நாரதர் பகவானைப் பார்த்து, "தேவரீருக்கு இந்தக்கோழிகளைக் காவுகொடுத்திருக்கிறார்கள். இப்போது திருப்தியாயிற்று? இனியாவது தேரைப் பழி வாங்காமல் செல்லும்படி செய்யக்கூடாதா?" என்று சிரித்தமுகமாகச் சொன்னார். பகவான், "நாரதரே, தங்களைப் போலவே தங்கள் தெய்வமும் கோபம், பழிவாங்கும் தன்மை இவற்றுடன் கூடினதென்று பாவித்துத் தங்களாலேயே சிருஷ்டிக்கப்பட்ட ஒரு விக்கிரகத்தினிடம் இப்படித் திகிலடைவதைப் பார்த்தால் உமக்கு ஏன் சிரிப்பு வராது? போகலாம் வாரும்" என்று சொல்லி அவருடன் அவ்விடத்தை விட்டுச் சென்றார்.

* * *

போகும் வழியில் அன்றிரவு அந்த ஊரில் நடக்கும் "சாவித்திரி" என்னும் நாடகத்தைப்பற்றிப் பறையடிக்கும் சப்தம் காதில் விழுந்தது. பகவான் நாரதரை நோக்கி, "நீர் தேவலோகத்தில் அப்ஸரஸ்திரீகள் 'அமிர்தமதனம்' ஆடிப்பார்த்திருக்கிறீரே. பூலோகத்தில் நாடகம் எப்படியிருக்கிறதென்று பார்க்கவேண்டாமா?" என்றார். அன்றிரவு இருவரும் முதல்வரிசை நாற்காலிக்கு வேண்டிய சீட்டு வாங்கிக்கொண்டு நாடகசாலைக்குள் போய் உட்கார்ந்தார்கள். அன்று பூங்கோதை என்னும் ஒரு பெண் சாவித்திரி வேஷம் தரித்து நடித்தாள். அவள் அழகும், பதிவிரதையாகிய சாவித்திரியாக வேஷம் தரித்துத் தன்னை மறந்து தன்மயமாகி அவள் பேசுவதும், தன் மாமன் மாமிக்குப் பிரீதியுடனும் வணக்கத்துடனும் பணிவிடை செய்வதும், சத்தியவானிடம் அவள் நடித்துக்காட்டிய அன்பும் கல்லையும் கரைக்கத்தக்க உருக்கம் மிகுந்து இருந்தன. அந்தக் காட்சியைக் கண்கொட்டாமல் கண்ட எல்லோருக்கும் மயிர்க்கூச்சல் எடுத்தது. "என்ன ஆச்சரியம்! பதிவிரதா தருமத்தின் பெருமையை என்னென்று சொல்வது!" என்று கரகோஷஞ் செய்தார்கள். நாரதரும் மனமகிழ்ந்து பகவானிடம், "இவ்வளவு ஸௌந்தரியமும், சொல் நயமும், நாகரிகமும், வணக்கமும் வாய்ந்து பதிபக்தியின் அருமையை நன்கு உணர்ந்து செவ்வனே வெளிப்படக் காட்டக்கூடிய ஒரு பெண்ணைப் படைத்தது தங்கள் சிருஷ்டிச் செயலின் திறமைக்கு ஓர் அத்தாட்சியல்லவா?" என்று வியந்து சொல்ல, பகவான் "நாரதரே! போதும் உம்முடைய புகழ்வசனம். கொஞ்சம் ஞான திருஷ்டியைச் செலுத்தி இந்தப் பெண் நாடகமேடையை விட்டு இன்றிரவு வீட்டுக்குப் போனதும் என்ன செய்கிறாள் என்று பாரும்" என்றார்.

உடனே நாரதர், "சீ! சீ! இவள் ஏன் இப்படித் துணிபோனதுகூடத் தெரியாமல் குடித்து வெறியடைந்திருக்கிறாள்? அந்தத் தடியன் இவள் ஆசைநாயகன் போல் இருக்கிறது. அவனுடன் என்ன அசங்கியமான பேச்சுப் பேசுகிறாள்! இவளா அங்கே சாவித்திரி வேஷம் போட்டுக்கொண்டவள்? என்ன வேடிக்கை? மகா பதிவிரதைகளான பெண்கள் சாவித்திரியாக நடிக்க முடியாமலிருக்க இந்தக் குடிகாரி கண்டோர் மனம் கவரும்படி தன்மய

மாகி நடித்தாளே! இப்பொழுது இவளுடைய பேச்சையும் நடத்தையையும் பார்த்தால் வலைச்சிபோல் இருக்கிறதே?" என்றார்.

* * *

இப்படிப் பேசிக்கொண்டே அவ்விருவரும் சிறிதுதூரம் சென்றதும் ஒரு குடிசையினுள்ளிருந்து கோபாவேசத்தில் ஒருவன் உரக்கக் கத்துகிற சத்தமும் அடியின் வலி தாங்கமுடியாமல் ஒரு ஸ்திரீ அழுகிற கூக்குரலும் அவர்கள் காதில் விழுந்தன. குடிசைக்குள் நுழைந்து பார்க்க அங்கே குரூபியும் சப்பாணியுமான சுமார் அறுபது வயதுள்ள ஒரு கிழவன் தன் தடியால் ஐம்பது வயதுள்ள ஒரு ஸ்திரீயை அதட்டியடிப்பதைக் கண்டார்கள். அந்த ஸ்திரீ இஷ்டப்பட்டால் தன் ஒரு கையினாலேயே அம்முடவனை அடித்துக் கீழே தள்ளியிருக்கலாம். நாரதர், "எனப்பா அவளை அடிக்கிறாய்?" என்றார். அதற்கு அந்தக் கிழவன், "நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ, சும்மா என் வீட்டுக்குள் உங்களை யார் வரச்சொன்னது?" என்று கர்ஜித்தான். அந்த ஸ்திரீயும் அவர்களைப் பார்த்து, "வேறு வேலை இல்லையோ உங்களுக்கு? ஊரான் வீட்டுக்குள் நுழைகிறீர்களே!" என்று கடிந்து பேசித் துரத்தினாள். பகவானும் நாரதரும் வெளியே வந்தவுடன் அம்முடவன் மறுபடியும் அவளை வசைவார்த்தைகள் கூறித் திட்டி அடிக்க ஆரம்பித்தான். "நாரதரே! இவர்கள் வாழ்க்கையைச் சற்று ஞான திருஷ்டியினால் கவனித்துப் பாரும்" என்றார் பகவான்.

அப்பொழுது நாரதர், "என்ன ஆச்சரியம்? இந்தக் கிழவனுக்குச் சோறு துணி முதலியவை அந்த ஸ்திரீ உழைத்து வாங்கும் கூலியால் கிடைக்கின்றன. அவள் இவனை விட்டு விட்டால் இவன் கதி அதோகதியாகும். இவ்வளவுக்கும் இவ்விருவரும் ஜாதி முறைப்படி கலியாணம் செய்துகொண்டவர்களுமல்ல. ஏதோ இருபது வருஷ காலமாக இவனுடன் மனைவி போல் இவள் இருந்துவருகிறாள். இவனால் இப்பொழுது இவளுக்கு ஆவதொன்றும் இல்லை. ஆயினும் இவன் கொடுமையைச் சகித்துக்கொண்டு தான் கஷ்டப்பட்டுச் சில காசு சம்பாதித்துத் தன் வயிறு நிறையுமுன் இவனுக்குச் சோறு படைக்கிறாள். மனிதரின் மனோபாவத்தை என்னென்று சொல்வது?" என்றார்.

* * *

மறுநாள் நாரதரும் பகவானும் ஸ்நானம் முடித்து மடியுடுத்திக்கொண்டு அந்நகரில் ஓர் அக்கிரகாரத்தின் வழியே நடந்து சென்றார்கள். அங்கே ஒரு வீட்டுத்திண்ணையில் பளபளவென்று பிரகாசிக்கும் திருமேனியுடன் ஒரு பிராமணோத்தமர் ஆசனப் பலகையில் உட்கார்ந்துகொண்டு மற்றொரு பலகையின்மேல் சாய்ந்துகொண்டிருப்பதையும் அவர் எதிரில் பத்துப் பன்னிரண்டு பேர் அங்கவஸ்திரத்தை இடுப்பில் கட்டிப் பயபக்தியுடன் நிற்பதையும் கண்டு தாங்களும் அக்கூட்டத்தின் நடுவில் சென்று நின்றார்கள். அப்பொழுது ஸ்மிருதிகளில் கரைகண்ட அந்தப் பிராமண சிரேஷ்டர், "காலம் கலி. பவிஷ்யத் புராணத்தில் சொல்லியிருக்கிறபடி ஸநாதன தர்மம் எங்கும் நசித்துவிட்டது. பிராமணப் பையன்கள் குடுமியைச் சிறைத்துவிட்டுக்

கிராப் வைத்துக்கொள்கிறார்கள். கேள்விமுறை கிடையாது. இன்னும் கொஞ்சகாலத்தில் தகப்பன் சிராத்தம் செய்வதைக்கூட நிறுத்திவிடுவார்கள். நாம் வைதிகர்கள். அப்படிப்பட்ட பையன்கள் இருக்கும் வீடுகளில் சாப்பிடுவதில்லை, கொள்வினை கொடுப்பனை செய்வதில்லை என்று கட்டுப்பாடு செய்துகொண்டு அவர்களைப் பகிஷ்காரம் செய்தோமானால் இதெல்லாம் நடக்குமா?'' என்று கோபத்துடன் சொல்லிக்கொண்டிருந்தார். நாரதர் மெதுவான குரலில் பகவானிடம், "இந்தக் கலிகாலத்திலும் இத்தகைய ஸநாதன தருமமூர்த்தி ஒருவர் இருப்பது ஆச்சரியம்!'' என்று சொல்ல, பகவான், "கொஞ்சம் பொறுத்துக்கொள்ளும். இவர் தினசரி வாழ்க்கையைக் கொஞ்சம் ஞானதிருஷ்டியால் பாரும்'' என்றார். உடனே நாரதர் "இவரோ தரும ஸம்ரக்ஷகர்? அந்த இளம்பிராயமுள்ள நாட்டுப்பெண்ணை இவரும் இவர் தருமபத்னியும் சேர்ந்து படாதபாடு படுத்தி வைக்கிறார்களே! அந்தப் பெண்ணின் தகப்பனார் ஏழையாய்ப்போய்விட்டதால் சீர் முதலியவை கொண்டுவரவில்லை என்று குற்றமற்ற அந்தப் பெண்ணின் மனத்தில் குத்திக் காட்டுவதுபோல் என்ன என்ன கொடூரமான வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள்! வயிறு நிறைய அந்தப் பெண்ணுக்கு அன்னம் போடாமல், அவள் இலையில் உட்கார்ந்து சாப்பிட்டு எழுந்திருக்கும் வரையில் கண்டபடியெல்லாம் அவள் தாய்தகப்பனை இகழ்ந்து பேசி அவள் மனத்தைப் புண்படுத்துகிறாளே இவர் மனைவி! அது இவருக்குத் தெரிந்தும் தாமும் அவளுடன் சேர்ந்துகொண்டு இடி இடி என்று இடிக்கிறாரே! அஹிம்ஸா பரமோ தர்ம: என்ற வேத வாக்கியத்தை அலக்ஷியஞ் செய்துவிட்டுக் கேவலம் குடுமியைப் பற்றிய ஒரு சமாசாரத்திற்கு இவ்வளவு பலங்கட்டுகிறாரே. ஈவு இரக்கமில்லாமல் ஒரு பெண்ணின் பாவத்தைக் கொள்ளுகிற இவர் தருமம் உபதேசிப்பது குருடன் கண்ணுள்ளவருக்கு வழிகாட்டினாற்போலத்தான்'' என்றார்.

"ஓய்! நாரதரே! அது வேடிக்கையில்லை. அந்தப் பெண்ணை அவள் தமையன் கல்யாணத்திற்குக்கூடப் போகக்கூடாதென்று தடுத்தது முதலாக இவர் செய்த கொடுமைகளையெல்லாம் நன்றாய் அறிந்த இந்தச் சிஷ்யர்கள் இவரைப் பரமகுருவாகப் பாவித்துப் பணிந்து இவர் சொல்வதை வேத வாக்கியமென்று எண்ணுகிறார்களே அதல்லவோ வேடிக்கை!'' என்று நகைத்தார்.

* * *

மறுநாள் பண்டிதர்கள் கூடிய சபை யொன்றில் உலகத்தில் பிரசித்தமான எல்லா மதங்களின் ஸாராம்சங்களை அந்த அந்த மதங்களில் தேர்ந்த ஞானமுடையவர்கள் பலர் பிரசங்கிப்பார்கள் என்று பத்திரிகைகளில் பிரசுரஞ்செய்யப்பட்டிருந்ததைப் பார்த்துவிட்டு நாரதர் பகவானை நோக்கி, "மகாபண்டிதர்கள் சிலர் தேவரீருடைய குணாதிசயங்களை நிர்ணயித்துச் சொல்லப்போகிறார்களாம். தங்களிடம் இத்தனைநாள் நான் பழகியும் தங்கள் லக்ஷணம், ரூபம், குணம் இவை எப்படிப்பட்டவை யென்று சரிவர அறிய முடியவில்லை. நாளை நடக்கும் உபந்நியாஸங்களைக் கேட்டால் வெட்ட வெளிச்சமாகத் தெரியும். அவசியம் போகவேணும்'' என்றார். பகவானும் சிரித்துக்கொண்டு, "அப்படியே ஆகட்டும். அவர்கள் பிரஸங்கத்

தைக் கேட்டால் நான் நான்தானே, வேறு யாரோ, நான் இருக்கிறேனே இல்லையோ, இப்படியெல்லாம் எனக்கே சந்தேகங்கள் நேரிடும்" என்று சொன்னார்.

மறுநாள் இருவரும் நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு சபையில் ஜனக்கூட்டத்தின் மத்தியில் ஒருபுறமாக உட்கார்ந்தார்கள். வித்துவான்கள் நிறைந்த சபை பிரும்மலோகம்போல் பிரகாசித்தது. தர்க்க வேதாந்த சாஸ்திரங்களைப் பல வருஷங்கள் பாடுபட்டுக் கற்ற மகான்கள் அநேகர் அங்கே வீற்றிருந்தார்கள். நடுவில் ஒருவர் எழுந்து தம்முடைய மதத்தின் கொள்கைகளைச் சுருக்கமாகச் சொல்லலானார்: "பகவான் ஸர்வலோகத்தையும் சிருஷ்டித்துக் காத்து ஸம்ஹாரம் செய்பவர். காரியமான வஸ்துக்கெல்லாம் காரணம் ஒன்று இருக்கவேண்டும். இந்த உலகம் ஒரு காரியப் பொருள். அதனால் அதற்கு ஒரு காரணம் இருக்கவேண்டும். அந்தக் காரணந்தான் ஈசுவரன். அவருக்கு ஒரு காரணம் வேண்டுமே என்று கேட்கலாகாது. அவர் காரியப்பொருளல்ல. மற்றும் மேன்மேலும் அதற்குக் காரணமென்ன, காரணத்துக்குக் காரணமென்ன இப்படி ஆராய்ந்தால் அநவஸ்தை தோஷம் வரத்தெரியும். அதாவது முடிவு கிடையாமற் போய்விடும். ஆதலால் ஈசுவரன் உலகத்துக்குக் காரணமென்று விதிக்கிறது. 'தேனவினா த்ருணமபி ந சலதி'—அவனன்றி ஓரணுவும் அசையாது. அப்படியானால் உலகத்தில் மனிதர்களுக்குள் பணக்காரன் ஏழை, பலசாலி வியாதியஸ்தன், புத்திமான் அசடு, குருடு முடம் என்கிற பலவித வித்தியாசங்களும் ஸகிக்கமுடியாத துக்கங்களும் இருப்பது எதனால்? பகவான் இவைகளுக்குக் காரணமென்றால் அவருக்குத் தயை, ஸமபுத்தி இல்லை என்றாகும். அதனால் இந்தத் துக்கங்களுக்கும் வித்தியாசங்களுக்கும் காரணம் அவனவன் முன் ஜன்மங்களில் செய்த வினையென்றே சொல்லவேண்டும். ஆனால் அந்தக் கர்மா அதற்குமுன் செய்த கர்மா இப்படி விசாரித்துக் காரணங் கூறுங்கால் கர்மா ஆதியற்றதென்றே சொல்லவேண்டியிருக்கிறது. அந்த வினையை நீக்கி முக்தியடைய வேண்டுமானால் பக்தி செய்து பகவானுடைய கிருபைக்குப் பாத்திரர்களாக வேண்டும்" என்று முடித்தார்.

உடனே வேறுமதத்தைத் தழுவியவர் ஒருவர் சபைமுன் நின்று பேச ஆரம்பித்தார்: "எங்கள் மதத்தின் ஸாரத்தைச் சொல்லுகிறேன்: உலகத்தில், முன் என் நண்பர் சொன்னபடி துக்கங்களும் கஷ்டங்களும் அளவிட முடியாமற் காணப்படுகின்றன. ஜீவராசிகள் எல்லாம் சுகத்தை விரும்புகின்றன. ஆனால் சுகங்களெல்லாம் துக்கங்களுடன் கலந்தும் அற்பகாலம் இருப்பனவாயும் உள. சாசுவதமாயும் அளவற்றதுமான சுகம் எல்லோரும் வேண்டுவது சகஜமே. அந்தச் சுகத்தையடையும் மார்க்கத்தைச் சாஸ்திரம் விரித்துச்சொல்கிறது. உலகத்தில் நித்தியமாயும் நிச்சயமாயுமுள்ள பொருள் ஒன்றேயுண்டு. அதுதான் பரப்பிரும்மம். நீ, நான், புழு, மரம், சந்திரன், சூரியன் என்று நானாவிதமாய்த் தோன்றுவனவெல்லாம் பொய்ப்பொருள்கள். அவை மாயையினால் தோன்றுபவை. மாயையில் பிரும்மம் கண்ணாடியிலோ நீரிலோ சந்திரபிம்பம் காண்பதுபோல் பிரதிபலிப்பதால் உலகம் பலவிதமாகக் காண்கிறது. நீ, நான் என்கிற வித்தியாச புத்தியினால் காமம், குரோதம்

இவற்றால் உண்டாகும் துக்கங்களுக்கு ஆளாகிறோம். இந்த மாயையை அகற்றவேண்டுமானால் அகம் பிரும்மாஸ்மி - நானே பரப்பிரும்மம் என்னைத் தவிர வேறில்லை என்ற ஞானம் மனத்தில் வேர் ஊன்றி வளர்ந்தால் பிரும்மம் என்ற அனுபவம் தானே வரும். அதுதான் முக்தி. அதுதான் நித்தியானந்தம். ஈசுவரன் என்றும் தயாநிதி என்றும் ஸர்வ கல்யாணகுணன் என்றும் வர்ணிக்கப்பட்ட வஸ்து, மற்ற வஸ்துக்களைப்போலவே பிரும்மம் அவித்யையில் பிரதிபலிப்பதனால் உண்டான போலிப்பொருள். அதுவும் அநித்தியம். நம் மனப் பிராந்தியால் அமைந்தது'' என்று விஸ்தாரமாக எடுத்துக்காட்டும் பொழுது, பகவான் நாரதரைப் பார்த்து மெதுவாக, "நான் நேற்றுச் சொல்லவில்லையா? நான் உம்முடைய பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறேன் என்று நினைக்காதேயும். நான் கண்ணாடியில் தோன்றும் நிழல்போலுள்ளவன். தெரிந்ததா?'' என்றார்.

இதற்குள், தர்க்க சாஸ்திரத்தைத் தலைகீழாய்ப் படித்த மற்றொரு வித்வான், "சற்றுமுன் உபந்நியாசம் செய்தவர்கள் காரணம் என்று ஒரு சொல்லை உபயோகித்தார்கள். அச்சொல்லின் பொருளைச் சற்று ஆராய்வோம். காரணம் என்றால் என்ன? அதன் லக்ஷணம் எப்படி? ஒரு மட்பாண்டத்தை என் கை பலமாய் அடிக்கிறது. அது உடைகிறது. அடி காரணம், உடைவது காரியம் என்கிறார்கள். ஆனால் பார்ப்பது என்ன? முதலில் கைபால் தாக்கியது; பிறகு பாண்டம் உடைந்தது. இதைத்தவிர வேறில்லை. தாக்கினதால்தான் பாண்டம் உடைந்தது என்று எங்ஙனம் சொல்வது? இதுவரையில் நாம் கண்டதில் கையினால் அடித்தபோதெல்லாம் மண்கலம் உடைந்தது. அதனால் இனியும் அதேமாதிரிதான் ஆகும் என்று நிர்ணயிப்பது தவறு. இன்றுவரை சூரியன் கிழக்கே உதித்துவந்ததால் நாளையும் அப்படியே கிழக்கே உதிப்பான் என்று நினைப்பதற்கு நியாயமுண்டோ? அது யுக்திக்குச் சரியாகுமோ? போஜனம் சாப்பிடுகிறது; பசி ஆறுகிறது. ஒன்றுமுன் நடக்கிறது, மற்றது பின் நேருகிறது. அதேயொழியப் பசி ஆறுவதற்குப் போஜனம் காரணம் என்ற நியமம் எப்படி?'' என்று உரத்துச்சொல்லி அந்தப் பிரஸங்கத்தின் ஆவேசத்தால் மெய்ம் மறந்து தம் வலது கையை எதிரிலிருந்த மேஜையின்மேல் பலமாகத் தாக்கினார். கையில் கொஞ்சம் வலியுண்டானதால் பிரசங்கம் சற்றுத் தாமதித்தது. இன்னும் அவர் முடிவுக்கு வருவதாகக் காணவில்லை. மணி இரண்டாயிற்று. சபையோர் பசியினால் வாடுவது தெரிந்தது. காரியத்துக்கும் காரணத்துக்குமுள்ள ஸம்பந்தத்தை இவ்வளவு அழகாக நிரூபித்தவர், "நான் சொல்லவேண்டியது கொஞ்சம் பாக்கி இருக்கிறது. ஆனால் சிற்றுண்டி உண்ணும் சமயம் வந்துவிட்டது. உபந்நியாசத்தை இப்பொழுது நிறுத்தி ஒருமணிக்குப் பிறகு மறுபடியும் தொடங்குகிறேன். மூன்றுமணிக்கு எல்லோரும் எழுந்தருளிச் செவிசாய்க்க வேண்டும்'' என்றார். சபை கலைந்தது. நாரதரும் பகவானும் வெளிக்கிளம்பினார்கள்.

* * *

நாரதர் பகவானை நோக்கி, "தேவரீர் கபடநாடக சூத்திரதாரி. மனிதர்களுக்கு யுக்தி, புத்தி, அனுமானசக்தி கொடுத்ததெல்லாம் அவர்களைக் கற்றறி

மூடர்களாக்கி வேடிக்கை பார்க்கத்தானே? அவர்கள் புத்தி நுட்பத்தையும் ஆக்ஷேப ஸமாதானங்களையும் கேட்டுவிட்டு, சுயபுத்தியைக்கொண்டே அவர்கள் ஏமாந்து அதனால் திருப்தியடைகிறதைப் பார்க்கும்பொழுது ஆச்சரியமாக இருக்கிறது. துக்கம் எப்படிப்போகும் என்று கேட்கிறான் ஒருவன். 'எனக்குத் துக்கம் என்று சொல்லாதே; நான் என்ற வஸ்துவுமில்லை, துக்கம் என்ற நிலைமையுமில்லை' என்கிறான் மற்றவன். தலைவலி எப்படிப் போகுமென்று கேட்பதற்கு வைத்தியன் 'தலையை வெட்டிவிட்டால் போய்விடும்' என்று சொல்வது போலிருக்கிறது இது" என்று நகைத்தார்.

பகவான், "உலகத்தில் விநோதமொன்றும் இல்லை என்றீரே. இப்பொழுது என்ன தோன்றுகிறது?" என்று கேட்க, நாரதர், "தேவரீருடைய திருவிளையாடல் இல்லாத இடமுமில்லை, காலமுமில்லை. ஆனால் அவற்றைக் கண்டுகளிக்கத் திறமை வேண்டுமே. தற்காலம் தாங்கள் எனக்குத் தந்தருளிய திரிகால தரிசன சக்தியை எப்போதும் என்னிடம் இருக்கும்படி அனுக்கிரகம் செய்தால்தான் அது முடியும். எனக்குச் சிரஞ்ஜீவிப்பட்டத்தையளித்த தங்கள் கொடுமையைக் குறைக்க இந்த வரத்தைச் சேர்த்துக் கொடுப்பது தங்களுடைய கடமை" என்றார். பகவான், "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லி மறைந்தார்.

அன்று முதல் நாரதர் திரிகால ஞானம்பெற்று மூவுலகிலும் தம் இஷ்டம்போல் ஸஞ்சாரம் செய்துகொண்டே அங்கங்கே நடைபெறும் விநோதங்களைக் கண்டு நகைத்து வருகிறார்.



க சுஷி

'வனபுஷ்பம்'

பழவூர் என்ற கிராமத்தில் வசித்துவந்த வேங்கடேச தீக்ஷிதர் என்பவர் ஒருநாள் திடீரென்று காணமற் போய்விட்டார். ஊரில் இந்தச் செய்தி மிக்க பரபரப்பை உண்டுபண்ணிவிட்டது. தினசரிப் பத்திரிகைகளில் படம் போட்டு விளம்பரப்படுத்தியோ, 'ஊர்ப்பிரமுகர் திடீரெனக் காணமற்போய்விட்டார்' என்று எழுதியோ, அல்லது கிராமச் சாவடியில் கூட்டம் கூடியோ அவ்வூரார் தங்கள் பரபரப்பை வெளிக்காட்டியிருக்கலாம். ஆனல் அதேதினம் நேர்ந்த மற்றொரு சம்பவத்தினுல் அவர்கள் அவ்விதம் செய்யவில்லை. அது என்னவென்றால், கூடவே அந்த ஊர் வண்ணத்தி பொன்னியும் காணமற் போய்விட்டதே!

மொத்தத்தில் ஊர்ப் பெரியவர்களும் வேங்கடேச தீக்ஷிதரின் பந்துக்களும் இந்தச் செய்தி பரவவொட்டாமல் தங்களால் ஆன முயற்சி செய்து அடக்கிவைக்கப் பார்த்தனர். அவர்களுள் ஆஞ்சனேய சாஸ்திரிகள் என்பவர், "தீக்ஷிதர் ஏதோ வழக்கு விஷயமாகக் கோணங்கிபுரத்திற்குப் போயிருக்கிறார்; இதை என்னிடம் சொல்லிவிட்டுப் போனர்" என்று தமக்கு அறிமுகமானவரிடமெல்லாம் கூறிக்கொண்டிருந்தார். ஆனல் அவர் சொன்னது முழுப்பொய் என்பதை அவர் வாயே தெரிவித்துவிட்டது. அவருடைய அந்தரங்க நண்பரான யக்ஞேச்வர சர்மா விஷயமென்னவென்று விசாரிக்க அவரிடம் வந்தபோது சாஸ்திரிகள், "சேச்சே! வேங்கடேசன் இப்படிக் கெட்டுப்போய்விடுவான் என்று யார் எண்ணினர்கள்? நம் எல்லோருக்கும் தலையிறக்கமாக இருக்கிறதே!" என்றார்.

யக்ஞேச்வர சர்மாவும் முகத்தைக் கோணிக்கொண்டு, "சிச்சீ! மகாமோசம்! ராமராம!" என்றார் வெறுப்புடன். ஆனல் மறுகணமே ஆவலுடன், "ஆமாம். ஆஞ்சனேயா, எந்த வண்ணத்தி?" என்று விசாரித்தார். ஆஞ்சனேய சாஸ்திரிகளுக்கு எல்லாவிஷயமும் தெரியும் என்பது அவர் சொன்ன பதிலிலிருந்து தெளிவாகிவிட்டது! அவர், அந்த வண்ணத்தியின் வீடு, அவள் நிறம், வயது, நடத்தை இவை யாவற்றையும்பற்றி ஒரு குட்டிப்பிரசங்கம் நிகழ்த்திவிட்டுக் கடைசியில், "ஊர் சிரிக்கிறதே! இந்தப் படுபாவிப் பிராம்மணனுக்கு இத்தனை வயசிற்கு மேல் எங்கிருந்து இந்த

மாதிரி புத்தி வந்ததோ தெரியவில்லையே?'' என்று சொல்லித் தலையில் அடித்துக்கொண்டார்.

இதற்குள் மகாதேவையர் என்பவர் மிகவும் சாமர்த்தியமாக ஒரு விஷயத்தை அறிந்துகொண்டு வந்தார்: பொன்னி ஓடிப் போவதற்கு முந்தின நாள் அவள் புருஷன் அவளை நன்ருக உதைத் தானும்! இதை யாரோ சொல்லக் கேட்டுத் தெரிந்துகொண்டு வண்ணாரப் பிச்சனிடம் வந்து, "சமாசாரத்தை வெளியிடாதேடாப்பா, தெரிகிறதா?'' என்ருர்.

வண்ணன் ஒன்றும் புரியாமல் வியப்புடன், "எந்த ஸமாசாரம் சாமீ!'' என்று கேட்டான். மகாதேவையர் சரியான பதில் சொல்ல முடியாமல் தத்துப்பித்தென்று ஏதோ சொல்லிவிட்டு அவ் விடத்திலிருந்து நழுவினர். நேராகத் தம் கோஷ்டியினரிடம் சென்று நடந்ததைத் தெரிவித்தார். அதைக் கேட்டு எல்லோரும் கோபங்கொண்டு, "இப்பொழுது உன்னை யார் ஐயா வண்ணன் வீட்டுக்குப் போகச் சொன்னர்கள்? அதிகப் பிரசங்கி!'' என்று அவரையே திட்ட ஆரம்பித்தனர்.

பிறகு இந்த விஷயத்தை மழுப்புவதற்காக எல்லோரையும் விடப் புத்திசாலியான யக்ஞேச்வர சர்மா தாமாகவே அவ் வண்ணனிடம் சென்று, மகாதேவையர்மீது இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி, "அவன் சொன்னதை மனவில் வைத்துக்கொள்ளாதே, அப்பா. என்னவோ கஞ்ஜா மயக்கத்தில் உளறிவிட்டான்'' என்ருர்.

வண்ணன் அப்போதும் விஷயம் புரியாமல், "என்ன சங்கதி சாமி? எதைப்பற்றிச் சொல்றீங்க!'' என்று கேட்டான். சர்மா பல்லை இளித்து, "அதுதான் அப்பா! . . . . தெரிந்ததா?'' என்று சொல்லிவிட்டுத் தம் தலையைச் சொறிந்து கொண்டே அவ்விடத்தைவிட்டு நேராகத் தம் சகாக்களிடம் வந்து, "மடையன் பாம்புப்புற்றில் கையை விட்டுவிட்டான்! பாம்பு கடிக் காதிருக்குமா?'' என்று மகாதேவையரின் மீது மீண்டும் எரிந்து விழுந்தார்.

அதுமுதல் வண்ணாரப் பிச்சன் வீட்டார் மகாதேவையரைப் பார்க்கும்போதெல்லாம், "ஐயரே! வரவாக் கஞ்ஜா தின்னப் பழகிக்கொண்டு விட்டீங்கபோல் இருக்கிறது?'' என்று ஏளனம் செய்ய ஆரம்பித்துவிட்டனர். மகாதேவையரால் இதைப் பொறுக்க முடியவில்லை.

இதுநிற்க; ஊர் என்று இருந்தால் கக்ஷி என்று ஒன்று இருக்கவேண்டியது அவசியமல்லவா? ஏற்கெனவே வேங்

கடேச தீக்ஷிதர் நல்லமனுஷர், பரோபகாரி, கருமமே கண்ணுயிருப்பவர் என்ற காரணங்களினால் அந்த ஊரில் சில 'பெரிய மனுஷ்யர்கள்' அவரிடம் அழுக்காறு கொண்டிருந்தனர். இப்பொழுது அவர்களுக்குத் தக்க ஸந்தர்ப்பம் வாய்த்தது. அவர்களுள் ராமஸ்வாமி ஐயர் என்பவர் மகாதேவையரை அழைத்து அவரைத் தட்டிக்கொடுத்து, "பார்த்தீரா, உம் சிநேகிதரின் யோக்கியதையை? நல்லவர்மாதிரி வேஷம்போட்டு ஊரை ஏமாற்றினாரே!" என்றார். மகாதேவையர், சர்மாவின் மீதுள்ள கோபத்தினால், "ஆமாம் ஆமாம், அவர்கள் எல்லோரும் திருட்டுப்பயல்களே!" என்றார்.

2

தீக்ஷிதரின் கக்ஷியினர், அவர் கோணங்கிபுரம் சென்றிருப்பதாகவே சாதித்து வந்தனர். ஆனாலும் அவர் இன்னும் ஊருக்குத் திரும்பி வராதிருந்ததனால் அநேகருக்கு அவருடைய கக்ஷியில் நம்பிக்கை குறைந்துவந்தது. மகாதேவையரின் உதவியால் ராமஸ்வாமி ஐயரின் கக்ஷி வலுக்கத் தொடங்கியது. "தீக்ஷிதர் கோணங்கிபுரத்திற்குப் போயிருந்தால் ரெயிலிலல்லவோ போயிருக்கவேண்டும்? ஸ்டேஷன்மாஸ்டர் முதலிய ரெயில்வே சிப்பந்திகளை விசாரித்ததில் அவர்கள் அவரைப் பார்த்ததாகத் தகவல் ஒன்றும் தெரிவிக்கவில்லையே. ஆகையால் அவர் நடந்தே வண்ணாத்தியுடன் வேறு எந்த ஊருக்கோ ஓடிப் போய்விட்டார்" என்று எதிர்வாதம் புரிந்தனர்.

பட்டணத்தில் உத்தியோகம் பார்த்து வந்த வேங்கடேச தீக்ஷிதரின் பிள்ளைகளுக்குத் தகப்பனாரின் செயலைக் கேட்கத் தலையிறக்கமாயிருந்தது. ஆயினும் என் செய்வது?

ஊரில் மாத்ஸர்யம் விருத்தியாயிற்று. மகாதேவையர் சர்மா மீது மானநஷ்ட வழக்குத் தொடுத்தார். மகாதேவையர் பக்கமாக ராமஸ்வாமி ஐயர் முதலியவர்கள் சாக்ஷியம் சொன்னார்கள். சர்மாவின் கையில் பணமில்லாததால் அவரால் சாக்ஷிகளைத் தயாரிக்க முடியவில்லை. கடைசியில் அவர் மகாதேவையருக்கு ஆயிரம் ரூபாய் தரவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. சர்மாவின் நிலம் நீர் எல்லாம் ஏலம் போடப்பட்டன.

ஆஞ்சனேய சாஸ்திரிகள் நாட்டுவைத்தியம் பார்ப்பவர். அவர், "ராமஸ்வாமி ஐயரின் கக்ஷியினருக்கு இனி வைத்தியம் செய்வதில்லை" என்று தீர்மானித்துவிட்டார். இதனால் ராமஸ்வாமி ஐயர் தாமே, 'சுலப ஆயுர்வேத சிக்ஷை' என்ற புத்தகத்தைப் பட்டணத்திலிருந்து வாங்கிவந்து வைத்தியம் கற்றார்.

ஆனால் ஊர்ப் பெண்டுகள் மட்டும் ஒற்றுமையாகவே இருந்தனர். அவர்களுள் முக்கியமான ஆஞ்சனேய சாஸ்திரிகளின் மனைவி சுப்பம்மாள் வேங்கடேச தீக்ஷிதரின் துன்பமுற்ற மனைவிக்கு ஆறுதல் கூறிவந்தாள். "அம்மா, இந்தப் புருஷர்கள் நம் கண்களில் எந்த விதமாவது பொடி தூவிவிட்டு நாம் நினைக்காத காரியங்களை யெல்லாம் நடத்திவிடுவார்கள். இனிமேல் அவரை (தன் கணவனை)ச் சமைக்கிற உள்ளில் சாப்பிட்டுவிட்டு அங்கேயே கப்சிப் என்று கிடக்கும்படி செய்யப் போகிறேன். புருஷர்களை எப்பொழுதும் நம் கண் பார்வையிலேயே வைத்திருக்க வேண்டுமடியம்மா" என்று உபதேசித்தாள்.

3

இப்படியிருக்கையில் குறிப்பிடத்தக்க இரண்டு சம்பவங்கள் நிகழ்ந்தன.

திடீரென்று ஒருநாள் சாயங்காலம் வண்ணாத்தி பொன்னியுடன் கழுதையின்மேல் மூட்டைகளைப் போட்டுக்கொண்டு வண்ணாரப் பிச்சன் திரும்பிவந்தான். இருவரும் ஒன்றும் நேராததுபோல் சகஜமாக வருவதைப் பார்த்து ஊரார் முதலில் ஸ்தம்பித்துவிட்டனர். விசாரித்ததில் "அவள் மாமன் வீட்டிற்குப் போயிருந்தாள்" என்று அவன் தெரிவித்தான். உடனே ராமஸ்வாமி ஐயரின் கக்ஷியினர் ஒருவிதமாகத் தலையை ஆட்டி ஏளனத்துடன், "மாமன் வீட்டுக்குப் போனளா? தீக்ஷிதரின் பிள்ளைகள் வண்ணான் வாய்க்கு இரைபோட்டுவிட்டார்கள்போலும்!" என்று சொல்லிக்கொண்டனர்.

ஆனால் தீக்ஷிதர் என்னவோ போனவர் போனவர்தான்! அவர் திரும்பிவரவேயில்லை. எப்படி வரமுடியும்? அவர்தான் பாழும் கிணற்றில் விழுந்துவிட்டாரே!— பாழும் கிணறு என்றால் மோஹம் என்ற நரகக் கிணறு அல்ல; வாஸ்தவமான கிணறே! ஒருநாள் நல்ல மழைபெய்தது. அதற்கு மறுநாள் ஊருக்கு வெளியிலுள்ள, யாரும் உபயோகப்படுத்தாத கிணற்றிலிருந்து அவர் சவம் அழுகிப்போய் வெளிவந்தது. அதை முதலில் பார்த்து ஊருக்கு அறிவித்தவர் மகாதேவையரே.

கட்சி உண்டாவதற்கு மூலகாரணமான வேங்கடேச தீக்ஷிதர் இறந்துபோய் எதிர்க்கக்ஷி வலுத்ததற்கு உதவியாகவிருந்த மகாதேவையருக்கு அதுமுதல் சித்தப்பிரமை ஏற்பட்டபோதிலும் இன்னும் ஊரில் இரண்டு கக்ஷிகள் இருந்தே வருகின்றன!

(வங்காளிக் கதையைத் தழுவி எழுதியது.)

என் குழந்தை

கே. ஸி. வீரராகவையர், எம். ஏ., எல். டி.

என் குழந்தைதான் குழந்தை. காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சல்லவா? குழந்தை சமத்துக்குடம். மூன்று வயதாகிறது; மூலை முடுக்குகளிலுள்ள வார்த்தைகளைப் படார் படார் என்று தன் உதடுகளினின்றும் வெடிப்பதைப் பார்த்தால், ஒவ்வொரு நிமிஷமும் நரக சதுர்த்தசியோ என்று நினைக்கத் தோன்றும். வேற்றுமுகங் கிடையாது; ஆதலின் எல்லோரும் எடுத்து உச்சி மோரப் பிரியப்படுவார்கள்; தெருக் கூடைக்காரிகள் கூட அவனைப் பார்த்தால், "என் ராசா, என் தங்கம்" என்று கூவி அருகே வைத்து அணைத்துக்கொள்வார்கள்.

சுப்பினி எல்லோருடைய செய்கையையும் பார்த்துத் தானும் அந்தமாதிரிச் செய்யப் பிரியப்படுவான். கூடைக்காரிபோல் காய்கறி விற்பான்; வண்டிக்காரன்போல் சதா சர்வகாலமும் 'தூண்' மாட்டை வாழைநாரினால் விளாசிக் கொண்டிருப்பான்; அண்ணு வாசிப்பதுபோல் வாசிப்பான்; அம்மா சமைப்பதுபோல் பொம்மைச் சமையல் செய்வான்; தாத்தா பூஜை செய்வதுபோல் மண் பிள்ளையாரை விடாது புழுதி அர்ச்சனை செய்வான்; அப்பா ஆபீசுக்குப் போவதுபோல் செருப்பை மாட்டிக்கொண்டு கழியைச் சுழற்றிக்கொண்டு செல்வான்; அவன் ஆர்ப்பாட்டம் குறைவதேயில்லை.

குழந்தைகளைப்போல் ஏதேச்சாதிகாரம் பெற்றவர்கள் உலகில் ஒருவரும் இல்லை. ஹிட்லரும் முஸலோனியும் அவர்களிடம் பிச்சை வாங்கவேண்டியதுதான். அவர்கள் நினைத்த காரியத்தைச் சாதிக்கும் வன்மையைக் கண்டு எந்தப் பெரியவர்கள்தாம் திகைக்கவில்லை? அழுகை அம்பைப் பிரயோகிக்கத் தொடங்கினால் யார்தான் எதிர்க்க முடியும்? அந்த அம்பின் வெற்றியைக்கண்டு எந்தப் பெற்றோர் மகிழாது நின்றனர்? அவர்கள் நயமாய்க் கெஞ்சுவதும் பயமாய் அதட்டுவதும் தயவாய்க் கேட்பதும் லயமாய் அழுவதும் எவருடைய மனத்தையும் கரைத்து மகிழச்செய்யும் பாணங்களன்றோ! மற்றக் குழந்தைகளைப் போலவே சுப்பினியும் இந்த அஸ்திரங்களைச் சிலசமயங்களில் சரமாரியாகப் பொழிந்திடுவான்.

ஒருநாள் சுப்பினியைத் தெருவழியாக நடத்திக் கூட்டிக் கொண்டு போனேன். அப்பொழுது சில 'கோச்' வண்டிகள் சென்றன. (மோட்டார்கார் அப்பொழுது பழக்கத்துக்கு வர வில்லை.) சுப்பினி கேட்கிறான்: "ஏனப்பா! அவர்கள் குதிரைவண்டி களில் போகிறார்கள்; நம்மைப்போல நடக்கலை?"

"அவர்கள் பணக்காரர்கள்; வண்டிகளில் போகிறார்கள்" என்றேன்.

"பணக்காரர்கள் என்றால் வண்டியில் போகணுமோ? இல்லா விட்டா அவா பணமெல்லாம் கீழே விழுந்திடுமோ? அதனாலே தான் அப்படிப் போறாளோ?" என்று மறுபடியும் கேட்டான்.

"ஆமாம்" என்றுசொல்வதைவிட நாம் வேறு என்ன சொல்ல முடியும்?

ஒருசமயம் தன் வீட்டு முற்றத்தில் சுப்பினியின் தாய் கருவடாம் உலர்த்தியிருந்தாள். சுப்பினியைக் கூப்பிட்டு ஒரு கழியை அவனிடம்கொடுத்து, "அணில் வராது பார்த்துக்கொள்; வந்தால் கழியால் அதட்டி அடித்து விரட்டு" என்று சொல்லி வீட்டுக்குள்ளே போனாள். போனதுதான் தாமதம்; உடனே சுப்பினி ஆரம்பித்துவிட்டான்: "அணிலே, அணிலே, ஓடியா ஓடியா? எங்கம்மா உள்ளே போயிருக்கா. கருவடாம் திங்கலாம், திங்கலாம், ஓடியா! ஓடியா; தின்னுட்டு ஓடு; இல்லாமப்போனா அம்மா வந்திடுவா" என்று காவல்வேலையைக் கவனித்தான். குழந்தையின் கபடமற்ற காருண்யத்தை என்னவென்று சொல் வது?

மற்று ஒரு சமயம் எங்கள் ஊர்த் தலைமலையன் கோவிலுக்குச் சுப்பினியைக் கூட்டிக்கொண்டு போயிருந்தேன். அப்பொழுது மேற்றிசையில் வானவில் பல வர்ணங்களுடன் ஒளி வீசியது. "அப்பப்பா, அது என்னது?" என்றான் சுப்பினி. "அது ராமர் வில்" என்றேன். "எந்த ராமர் வில்?" என்றான் அவன். "அது தானடா, அந்தக்கதை சொல்லலை, ராவணனைக் கொன்றார் ராமர் என்று? அந்த ராவணனைக் கொல்வதற்கு அவர் உபயோகித்த வில் இது!" என்றேன். "அப்படியானால் ராவணன் உடம்பிலிருந்து வரும் ரத்தம் ஒன்றையும் காணலையே?" என்று கேட்டான் குழந்தை. "அதோ சிவப்பாய் இருக்கே, அதுதான் ராவணன் ரத்தம்" என்று சொல்லி விஷயத்தை மாற்றிவிட்டேன். இந்தக் குழந்தைகள் கேட்கும் கேள்விகளுக்கு யாரால் பதில் சொல்ல முடியும்? உடனே சுப்பினி ஆரம்பித்துவிட்டான் ராமசரித்திரத்தை; சொல்லிக் கொடுத்தவற்றில் ஒன்றுகூடத் தவறாமல், மூச்சுவிடாமல் பக்கத்

தில் ஓடும் ஓடை நீருடன் போட்டிபோட ஓடுவது போலச் சொல்லிக்கொண்டே மறைந்து விட்டான்.

ஒருநாள் சுப்பினிக்கு அரிவரி பழகிக்கொடுக்க ஆரம்பித்தேன். பழைய வழக்கப்படி ஆற்றுமணல் கொண்டுவந்து பரப்பி அதில் எழுத்துக்களை மாதிரியாக எழுதிக் காட்டினேன். முதலாவது 'அ' போட்டேன்: ஒவ்வொரு தடவையும் தவறாமல் அதை '✓' என்று தலைகீழாகவே எழுதிவந்தான். அன்று உதவாது என்று வேறு ஒருநாள் ஆரம்பித்தேன். அன்றும் பழைய கதைதான். தகப்பனார் சொல்லிக்கொடுத்தால் இப்படித்தான் இருக்குமோ என்று அவனைப் 'பாலரோப்பு' வாத்தியாரிடம் ஒப்பித்து விட்டேன்.

சுப்பினியின் அத்தை ஒருநாள் வாய்தவறி, "ரேழியைத் தூக்கிப் பலகையில் போடு" என்று சொல்லிவிட்டாள். அதை மனப்பாடம் பண்ணிக்கொண்டு வந்தவர்களிடமெல்லாம் அதை ஒப்பித்துச் சிரி சிரி என்று சிரித்தான். பிறகு நான் அவனைக் கூப்பிட்டு, "சுப்பினி, ரேழியைத் தூக்கிப் பலகையில் போட்டு உட்கார்ந்துகொண்டு சம்பாத்தயிரும் எருமைப் பழையதும் மூக்குப்பிடிக்கச் சாப்பிடு. உனக்கு எல்லாப்பாடமும் தலைகீழே வரும்" என்று சொன்னேன். இதை அனுஷ்டிக்க வேணுமென்று முயன்றான். பலன் என்ன ஆயிற்றோ? அதை இப்பொழுது மறந்து விட்டானும்!

சிறுவர் பகுதி

கரடியும் குயிலும்

ஏ. டி. கே.

வெயிற்காலத்தில் ஒருநாள் நரி ஒன்றும் கரடி ஒன்றும் ஒரு காட்டில் அடர்ந்த சோலை ஒன்றின் வழியாய்ப் போய்க்கொண்டிருந்தன. அப்பொழுது ஒரு சிறு பறவை காதுக்கு இனிமையாகப் பாடுவது கேட்டது. உடனே கரடி நரியைப் பார்த்து, “அண்ணா, இவ்வளவு அழகாய்ப் பாடுகிறதே; இது என்ன பறவையோ?” என்று கேட்டது. அதற்கு நரி, “அவரா! பறவைகளின் மன்னராயிற்றே; நாம் அவரிடம் மரியாதையுடனும் பயபக்தியுடனும் நடந்துகொள்ள வேண்டும்”என்றது.

இந்தப் பறவை யாரென்று நான் உங்களுக்குச் சொல்லாமல் இருக்கலாமா? அது குயிலைத் தவிர வேறொன்றும் அன்று.

“அப்படியானால் நான் ராஜ மாளிகையைப் பார்க்க வேண்டும்; ஆகையால் தயைசெய்து வேகமாய் நடந்து வந்து எனக்கு அரண்மனையைக் காட்டும்” என்றது கரடி.

நரியோ, “தம்பி, நிதானி. இதற்குள் நாம் அங்கே போக முடியாது. ராணியார் வீட்டுக்கு வரும் வரையில் நாம் பொறுத்திருக்கவேண்டும்” என்றது.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ‘ராணி’ தன் மூக்கில் சிறிது உணவு கொண்டு வந்தது. ராணியும் ராஜாவுமாக அதைக் குஞ்சுகளுக்கு ஊட்டத் தொடங்கின.

“போகலாம்!” என்று சொல்லிக் கரடி அவற்றின் பின் சென்று என்ன தெரிகிறது என்று பார்க்கப் போயிற்று. நரியோ அதைத் தடுத்து, “சற்று நிதானி, தம்பி. நாம் ராஜ தம்பதிகள் போய்விடும் வரையில்

பொறுத்திருக்க வேண்டும்'' என்றது. ஆகவே அவை கூட்டைப் பார்த்து இடத்தை அடையாளம் வைத்துக் கொண்டு போய்விட்டன. கரடிமாத்திரம் ராஜமாளிகையைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் மிகுதியால் சடுதியில் திரும்பி வந்து கூட்டுக்குள் எட்டிப் பார்த்தது. அதனடியில் ஐந்தாறு குஞ்சுகள் படுத்திருந்தன. அப்பொழுது நரியும் வந்து மரத்தடியில் நின்றது. ஐம்பு, "என்ன அசட்டுத்தனம்! இது ராஜமாளிகையும் அல்ல; நீங்கள் ராஜகுமாரர்களும் அல்ல. இதைப்போல இடமும் உங்களைப் போல நீசர்களும் வேறு எங்கும் இல்லை!'' என்று சொல்லிற்று. இதைக் கேட்டதும் அந்தக் குஞ்சுகளுக்கு அடங்காக் கோபம் வந்தது. அழுகையும் வந்துவிட்டது.

"நாங்கள் நீசர்களல்லடா, ஐம்பு மூடா? எங்கள் அம்மாவும் அப்பாவும் பெரிய மனிதர்கள். உன் கர்வத்துக்குத் தக்க கதி உனக்கு நேரிடுகிறது பார்!'' என்று கறுவின. இதைக் கேட்டு நரிக்கும் கரடிக்கும் திகில் ஏற்பட்டது. அவை ஓடிப்போய்த் தத்தம் குகைகளில் பதுங்கிக் கொண்டன. குயில்குஞ்சுகளோ அழுகையையும் தேம்பலையும் நிறுத்தவில்லை. ஆத்தாளும் அப்பனும் வந்தவுடனே அவைகளுக்கு உணவு ஊட்ட ஆரம்பித்தன. குஞ்சுகளெல்லாம், "நாங்கள் ஒருபருக்கைகூடத் தொடமாட்டோம். பசியினால் பிராணன் போனாலும் சரிதான். வாயில் தண்ணீர் ஊற்றுகிறதில்லை. எங்களை அந்தத் துரோகி ஐம்பு, நீசர்கள் என்று ஏசினான். அதற்கு அவனுக்குத் தகுந்த சிக்ஷை செய்து வைக்கும் வரையில் நாங்கள் சோறு தண்ணீர் தொடமாட்டோம்'' என்று ஒரே பிடிவாதம் பண்ணின.

ஆண்குயில் குஞ்சுகளைப் பார்த்து, "என் கண்மணிகளே, உங்கள் இஷ்டப்படியே அவனுக்குத் தகுந்த

தண்டனை விதிக்கப்படும். கவலைப்படாதீர்கள்; சாப்பிடுங்கள்'' என்று சமாதானப்படுத்தியது.

அது உடனே புறப்பட்டுக் கரடியின் குகை யண்டை வந்து வாயிற்படியில் நின்று உரக்க, "கரடி ஜம்பூ! நீ நம் செல்வக் குழந்தைகளை அவமானகரமாய் ஏசினையாம். ஆகையால் நீயும் உன் இனமும் இதற்குத் தகுந்த சிக்ஷை முழுவதும் பெறும்வரையில் உன்மீது அகோர யுத்தம் தொடங்கி யிருக்கிறோம்'' என்றது. இதைக் கேட்டதும் கரடி, எருதையும் கழுதையையும் மானையும் இன்னும் பூமியிலுள்ள மிருகங்கள் எல்லாவற்றையும் கூப்பிட்டனுப்பி யுத்தத்திற்கு என்ன செய்வதென்று ஆலோசனை செய்யத் தொடங்கியது.

அவ்விதமே குயிலும் தன் படையில் சின்னதும் பெரியதுமான எல்லாப் பறவைகளையும் வண்டுகளையும் ஈக்களையும் தும்பிகளையும் மற்றப் பூச்சிகளையும் சேர்த்துக் கொண்டது. யுத்த தினம் நெருங்கவே, குயில் ஒற்றர்களை அனுப்பி எதிரியின் சேனைத்தலைவர் யாரென்று பார்த்து வரச் சொல்லியது. அச்சாரணர்களில் மிகச் சாமர்த்திய முள்ளதான வண்டு, காட்டில் எதிரி சேனை உள்ளவிடத்தில் முன்னும் பின்னும் இங்கும் அங்கும் பறந்து போயிற்று. அணிவகுப்பு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்த இடத்துக்கு அருகில், ஒரு மரத்துக்கிளையில் ஓர் இலையின் கீழ் ஒளிந்துகொண்டது. கரடி மரத்தின்மீது சாய்ந்துகொண்டு மற்றவர்களைப் பார்த்துப் பேசிக்கொண்டிருக்கவே வண்டு ஒவ்வொரு சொல்லையும் விடாமல் கேட்டுக்கொண்டது.

கரடி எருதைக் கூப்பிட்டு, "நந்தி! மிருகங்களுக்குள்ளே நீதான் மிகவும் கெட்டிக்காரன். ஆகையால் நீதான் எங்களுக்குச் சேனைத்தலைவனாக இருந்து எங்களை நடத்தவேண்டும். ஆனால் முதல் முதலில் பிறப்பிக்கும் கட்டளைகளை நாம் அறிந்துகொண்டு அதன்படி நடப்பதற்கு என்ன விதமாய் ஜாடை காட்டுவதென்று நமக்குள் முடிவுசெய்து கொள்ளவேண்டும்'' என்றது.

எருது, "இதோ பாருங்கள்: என் வால் மிகவும் அழகாயும் நீளமாயும் அடர்ந்த குச்சுள்ளதாயும் இருக்கிறது. அந்தக் குச்சு சாமரம் போல இருப்பதால் அதை உயர்த்

தினால் யுத்தக் கொடிபோல் இருக்கும். ஆகையால் இதைக் கவனித்துக்கொள்ளுங்கள்: நான் என் வாலை உயர்த்தினால் அதைப் பார்த்ததும் நாம் ஜயித்துவிட்டோம் என்று நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள்! நீங்கள் அதன்பின் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. ஒரே மூச்சாய் எதிரியின் மீது பாய்ந்து துரத்த வேண்டியதுதான். அப்படியில்லாமல் நான் என் வாலைக் குழைத்துக் கொண்டால், தோல்விக்கு அறிகுறி. அதைக் கண்டதும் நீங்கள் ஒரேஓட்டமாய் ஓடிவிடவேண்டும்'' என்றது. இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த வண்டு குயிலினிடம் ஓடிப் போய் நடந்ததையெல்லாம் தெரிவித்தது.

கடைசியில் யுத்த தினம் வந்தது. பொழுது விடிந்ததோ இல்லையோ பாருங்கள்: மிருகசேனை பூமி அதிரும்படி கர்ஜித்துகொண்டு முன்னே பாய்ந்தது. குயில் அரசனும் கேட்போர் திகில்படும்படி தன் சேனையைக் கூட்டிக் கொண்டு இரக்கைகளை அடித்தவண்ணம் வட்டமிட்டுக்கொண்டு வானில் பறந்து வந்தது. இரண்டு சேனைகளும் அணிவகுத்து யுத்தத்துக்கு எத்தனமாய் யுத்தரங்கத்தில் நின்றன. உடனே குயிலானது ஒரு வண்டுக் கூட்டத்தை அழைத்து, "நீங்கள் அனைவரும் ஒரே மூச்சில் நந்திதேவர் மீதுபாய்ந்து, அவர் வாலில் உட்கார்ந்து முழுப்பலத்தையும் கொண்டு பல் அசையும் வரையில் மூச்சைப் பிடித்துக்கொண்டு கடிக்க வேண்டும்'' என்று கட்டளையிட்டது. வண்டுகள் கட்டளைப் படியே செய்தன. உடம்பில் முதல்கடி உறைத்தவுடனே நந்தி ஒரு பக்கமாய் அசைந்து ஒரு காலை உதறிற்று. ஆனால் தூக்கினவாலைத் தொங்கவிடாமல் வெகு தைரியமாய் இருந்தது. மறுபடியும் வண்டுகள் கொட்டவே அது

வாலை ஒருக்ஷணம் தொங்கப்போட நேர்ந்தது; மூன்றும் வண்டு கடித்ததோ இல்லையோ, எருதுக்குப் பொறுக்கவே முடியவில்லை. வாலைச்சுருட்டிப் பின்னங்கால் இரண்டுக்கும் நடுவில் குழைத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தது. இதைக் கண்டதும் மற்ற மிருகங்கள் தோல்வியடைந்ததாகத் தீர்மானித்துத் திகில் அடைந்து மூலைக்கொன்றாய் ஓட்டம் பிடித்தன. பறவைகள் எதிரியில்லாமல் வெற்றியுடன் நின்றன.

பிறகு குயில் ராஜனும் ராஜாத்தியும் வெற்றியோடு திரும்பி மக்களிடம் வந்து, "செல்வங்களே! நாம் ஜயித்துவிட்டோம்! சாப்பிடுங்கள்; சந்தோஷமாயிருப்போம் வாருங்கள்!" என்றன. குஞ்சுகளோ, "முடியாது, அந்த ஜம்பு எங்களை நீசர்களென்று வைதானே; அதற்கு அவன் எங்களை மன்னிப்புக் கேட்டாலொழிய நாங்கள் உண்ணமாட்டோம்" என்று சொல்லிவிட்டன.

குயில்ராஜன் கரடியின் குகைக்குப் பறந்துபோய் உரத்த குரலில், "துஷ்டக் கரடியே! நீ இந்தக்ஷணமே நம் இருப்பிடத்துக்கு வந்து, நம் செல்வக் குழந்தைகளை நீ அவமதித்ததற்காக அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் உன் எலும்பை நொறுக்கி விடுவேன்" என்றது.

ஆகவே கரடி மிகவும் அரை மனஸோடு குகையிலிருந்து மெதுவாய்ப் புறப்பட்டுப்போய்க் குயில் அரசனின் கட்டளைப்படி செய்யவேண்டியதாயிற்று. பிறகு குஞ்சுகள் எல்லாம் ஒன்றாய் உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டு மிகவும் ஸந்தோஷமாய்ப் பொழுது போக்கிக்கொண்டிருந்தன.

(ஆங்கிலக் கதையொன்றைத் தழுவி எழுதியது.)

வான விளக்கு

பி. ஆர். சிதம்பரையர், பி.ஏ., எப். ஆர். ஏ. எஸ்.,
ஏ. இராமகிருஷ்ண பிள்ளை, பி. ஏ.

5

தூமகேதுக்கள்

நம்முடைய பாட்டன்மார் இருபது வருஷங்களுக்கு முன்னுல் ஆகாசத்தில் ஒரு வால் நக்ஷத்திரம் தோன்றியது என்றும், அதனுல் உலகத்தில் பல கெடுதிகள் நிகழ்ந்தனவென்றும் சொல்ல நீங்கள் கேட்டிருக்கலாம். எட்வர்டு அரசர் 1910-ஆம் வருஷத்தில் இறந்ததையும் இந்த வால் நக்ஷத்திரம் முன்னமே குறிப்பிட்டதென்று சிலர் சொல்வதுண்டு. இங்கே வால்நக்ஷத்திரங்களைப் பற்றி அறிந்துகொள்வோம்.

படத்தைக் கவனியுங்கள். இதற்கு ஏன் 'வால் நக்ஷத்திரம்' என்ற பெயர் வந்தது என்பது தானே விளங்கும். இது வால் முளைத்த ஒரு நக்ஷத்திரம் போல் தோன்றுகின்றதல்லவா? இதைத் தூமகேது என்றும் சொல்லுவார்கள். தூமகேது என்ருல் புகைக் கொடி என்று பொருள். கிரேக்கர்களும்

இதைக் 'காமெட்' (*Comet*=கூந்தலை உடையது) என்று கூறிவந்தார்கள்.

இந்தத் தூமகேதுக்களும் கிரஹங்களைப் போல் சூரியனது ஆகர்ஷண சக்திக்கு உட்பட்டுச் சூரியனைச் சுற்றி வருகின்றன வென்று முன்னமே படித்திருக்கிறீர்கள். ஆனால் சூரியனைச் சுற்றிவரும் இதன் பாதை நீண்ட வட்டமாகவாவது (அனுவிருத்தம்-*Ellipse*), பரவலயமாயாவது (*Parabole*), அல்லது ஐபரவலயமாயாவது (*Hyperbole*) இருக்கும். கிரஹங்களின் பாதைகளோ அனுவிருத்தங்களே.

கிரஹங்கள் ஒன்பதே என்று முன்னமே சொன்னோம். ஆனால் வால் நக்ஷத்திரங்களோ, இன்று வரை வெறுங்கண்ணாலேயும் தூரதரிசனி மூலமாயும் கண்டு பிடிக்கப்பட்டவை ஓராயிரம் இருக்கும். இவற்றில் சில தற்செயலாய்க் கண்டுபிடிக்கப்பட்டன. பல, தூமகேதுக்களைக் கண்டுபிடிப்பதற்கென்றே அமைக்கப்பட்ட தூரதரிசனி (*Comet-seeker*) யினால் கண்டுபிடிக்கப்பட்டன. பெரிய வால் நக்ஷத்திரங்கள் பார்ப்பதற்கு மிக்க அற்புதமாயிருக்கும். இவை பகலிலேயும் இரவிலேயும் ஆகாசத்தில் பிரதானமாய்க் கண்ணுக்குத் தெரிவன. ஆனால் இவ்வளவு பெரிய தூமகேதுக்கள் மிகச் சிலவே. இவற்றுள் ஹாலியின் தூமகேது (*Halley's Comet*) என்பது ஒன்று. இது 77 வருஷங்களுக்கு ஒரு முறைதான் பூமியில் வசிப்பவர்களுக்குத் தென்படும். சில வால்நக்ஷத்திரங்கள் இதைப் போல் அவ்வளவு பெரியனவல்லவானாலும் பகலிலேயும் இரவிலேயும் கண்ணுக்குத் தென்படக் கூடியனவாய் இருக்கின்றன. ஆனால் பல, தூரதரிசனியில்தான் தோன்றுபவை. சூரியகுடும்பத்தில் மொத்தத்தில் லக்ஷக்கணக்கான தூமகேதுக்கள் இருப்பதாக அறிஞர்கள் நம்புகிறார்கள்.

தூமகேது தன் மார்க்கத்தில் எந்த இடத்தில் இருந்தபோதிலும் தன் 'வாலை'ச் சூரிய

னுக்கு எதிர்ப்புறத்திலேயே நீட்டிக்கொண்டிருக்கும். இராஜசபையில் அரசனை அணுகிப் பேசவிரும்புவோர் அரசனை நெருங்கும்போதும் அரசனை நீங்கிச் செல்லும்போதும் தம் பின்புறத்தை அரசனுக்கு எதிர்ப்புறமாகவே காட்டிச் செல்லவேண்டும் என்பது நம்மவர் கொள்கை. அவ்வாறே இத் தூமகேதுவும் சூரியனை நெருங்கும்போது தன் வாலைத் தனக்குப் பின்னும், சூரியனை வலம் வந்து நீங்கிச் செல்லும் காலத்தில் தன் வாலைத் தனக்கு முன்னும் நீட்டிச் செல்கிறது. தூமகேதுக்கள் பொதுவாகப் பரிமாணத்தில் பெரியவை. அவற்றின் உருண்டை வடிவமான தலையின் விட்டம் சராசரி 80,000 மைல்கள். 10,000 மைல்களுக்குக் குறைந்த விட்டமுள்ள 'தலை'யைக் கொண்ட தூமகேதுக்கள் இருப்பது அருமை. பரிமாணத்தில் சூரியனைக் காட்டிலும் பெரிய தலைகளையுடைய தூமகேதுக்களும் உள. ஆனால் அவை இவ்வளவு பெரியனவாய் இருப்பினும் கனத்தில் மிகக் குறைந்தவையே. தூமகேதுக்களிலேயே மிகப் பெரியதாய்க் காணப்படும் தூமகேது கனத்தில் மிகச் சிறிய கிரஹத்திலும் குறைந்ததே. தலையின் கனமே இவ்வளவு லேசாயிருக்கிறதென்றால் வால் மிகவும் லேசானது என்பது சொல்லாமலே விளங்கும்.

எரிகற்கள் (*Meteors*): நீங்கள் எப்போதாவது இராக்காலங்களில் ஆகாசத்தில் நக்ஷத்திரங்கள் எரிந்து விழுவதைப் பார்த்ததுண்டா? அவைகளைத்தான் எரிகற்கள் என்று இங்கே குறிப்பிடுகிறோம். அவை அம்பு பாய்வதைப் போல் ஆகாசத்தில் நேர் மார்க்கமாய்ப் பாய்ந்து கணத்தில் மறைந்து விடுகின்றன. அவை நக்ஷத்திரங்களேயல்ல; ஆகாசத்திலிருந்து பூமியை நோக்கிச் செல்லும் கற்களே. அவை பூமியின் ஆகர்ஷண சக்தியினால் இழுக்கப்பட்டு, பூமியை நோக்கி மிகவும் வேகத்துடன் பாய்ந்து வந்து வாயுமண்டலத்திற்குள் புகுந்தவுடன் எரிய

ஆரம்பிக்கின்றன. சில அவ்வாறு எரிந்து தூளாய் ஆகாயத்துடன் கலந்து விடுகின்றன. வேறு சில பெரியவையாய் இருப்பன, பூமியில் வந்து விழுகின்றன. அவ்வாறு பூமியில் விழுந்த எரிகற்களைச் சென்னைக் காட்சிச் சாலையில் காணலாம்.

சில சமயங்களில் இந்த எரிகற்கள் கூட்டம் கூட்டமாய் வானத்தில் பாய்ந்து செல்வதும் உண்டு. இவ்வெரி கல் மாரிகள் சில தூமகேதுக்களினின்றும் பிரிந்து பூமியை நோக்கிச் செல்லுபவை என்று விஞ்ஞான சாஸ்திரிகள் கருதுகிறார்கள்.

பாரதி லீலை: 'சக்திதாஸன்' சுப்பிரமணியன் எழுதியது. [விலை அணா 5. கிடைக்குமிடம்: நவசக்தி ஆபீஸ், ராயப்பேட்டை, சென்னை.] பாரதியாரின் வாழ்க்கையைப் பற்றிய சில குறிப்புக்களும் அவருடைய சில குணங்களும் இப்புத்தகத்திலிருந்து நமக்குத் தெரிய வருகின்றன. இப்புத்தகத்தின் ஆசிரியர், இதில் அடங்கியுள்ள விஷயங்கள் தாம் பாரதி அன்பர்களிடமிருந்து கேட்டவை என்று முகவுரையில் எழுதியிருக்கிறார். பாரதியாரைப்பற்றிய சில புதிய செய்திகள் இப்புத்தகத்தில் காணப்படுகின்றன. ஸ்ரீமான் சுப்பிரமணியன் மணிச்சுருக்கமாகவும் அழகாகவும் ஒவ்வொரு விஷயத்தையும் எழுதியிருக்கிறார். புத்தகத்தின் பெயர்மட்டும் அவ்வளவு பொருத்தமாக நமக்குப் படவில்லை. 'பாரதியாரின் வாழ்க்கை—சில குறிப்புக்கள்' என்று இருந்திருக்கலாம். தமிழின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டிய புத்தகம் இது.

ஸ்ரீ ராமதுண ரத்னாகரம்: ஸ்ரீமான் எம். ஆர். ராஜகோபால ஐயங்கார் பதிப்பித்தது. [கிடைக்குமிடம்: ஸ்ரீ ராமகுண ரத்னாகரம் காரியாலயம், ஸ்ரீரங்கம். விலை அணா 4.] பகவத் பக்தியில் ஈடுபட்டிருக்கும் ஆஸ்திகர் அனைவருக்கும் அமிர்தபானம் போன்றது இப்புத்தகம். இதில், திருச்சி ஸெண்ட் ஜோஸப் கல்லூரி ஸம்ஸ்கிருத வித்வான் ஸ்ரீ உ. வே. வி. கோபால ஐயங்கார் எழுதிய 'பாதுகா ப்ரபாவம்', திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கக் காரியதரிசி ஸ்ரீ வெ. திருமலை ஐயங்கார் எழுதிய 'அழகன்', 'கற்பினுக்கணி', திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் எழுதிய 'குஹஸக்யம்' முதலிய கட்டுரைகள் அடங்கியுள்ளன.

அருளிச்செயல் பாகவதமும் நூற்றெட்டுத் திருப்பதிக் கோவையும்: முன்னது ஸ்ரீ சேட்லூர் ரங்கஸ்வாமி ஐயங்கார் அமைத்தது. பின்னது வங்கிபுரத்தாய்ச்சி தொகுத்தது. [வேண்டுவோர் ஸ்ரீ எம். வி. ஸ்ரீநிவாஸன், எம். ஏ., பி. எல்., 8/71, டி. பி. கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை என்ற விலாசத்திற்கு எழுதவும். விலை அணா 1.] ஆழ்வார்கள் அருளிச் செயல் தொடைகளை அழகாகவும் ஒழுங்குபடவும் அமைத்து ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் திவ்ய சரித்திரத்திற்கு அருளிச் செயல் பாகவதம் என்ற பெயர் கொடுத்திருக்கிறார் ஸ்ரீமான் ஐயங்கார். நூற்றெட்டுத் திருப்பதிக் கோவை என்பது சோழநாடு, பாண்டியநாடு, மலைநாடு, நடுநாடு, தொண்டை நாடு, வடநாடு, திருநாடு முதலிய நாடுகளிலுள்ள நூற்றெட்டு விஷ்ணு

ஸ்தலங்களைப்பற்றிய புகழ்மாலை. இது பகவத்ப்ரேமையில் ஈடுபட்ட அனைவரும் விரும்பக்கூடிய புத்தகம்.

ஜலாசய நிர்மாண லக்ஷண சாஸ்திரம்: புலிவலம் ஆர். கோபால ஐயர் இயற்றியது. [கிடைக்குமிடம்: ஆசிரியர், ஸ்ரீ திருநாகவல்லி அம்பாள் சோதிடாலயம், புலிவலம், விஜயபுரம் போஸ்டு, தஞ்சை ஜில்லா. விலை அணா 8.] ஸகல ஜீவராசிகளும் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாதது நீர். தாகசாந்திக்காக வேறு எதுதான் சாப்பிட்டபோதிலும் சுத்தமான ஜலத்தைப்போல் அது நமக்குத் திருப்தியைத் தராது. சுகாதாரத்திற்கு முக்கியமானது ஜலவசதியே. இப் புத்தகத்தில் குளம், கிணறு, வீடு முதலியவற்றை எங்கே ஸ்தாபிப்பது, சுத்தமான தண்ணீர் பூமிக்குள் எவ்வளவு ஆழத்தில் கிடைக்கும் முதலிய விஷயங்கள், சுகாதாரத்தில் அக்கறை கொண்டவர்கள் மட்டுமேன்றி, கிராமவாஸிகள், பட்டணவாஸிகள், ஆகிய சகலரும் தெளிவாகத் தெரிந்துகொள்ளும்படி எழுதப்பட்டிருக்கின்றன.

புத்தக வரவு

'குர்ஆன்' தமிழ் மொழிபெயர்ப்பு (முதல் மூன்று அத்தியாயங்கள்): அல்ஹாஜ் பா. தாவூத்ஷா ஸாஹிப், பி. ஏ., அவர்களால் வெளியிடப்பட்டது.

திருக்குறட் தருமரேச வெண்பா—12-ம் தொகுதி: கவிராஜபண்டித ஸ்ரீ ஜெகவீரபாண்டியன் அவர்கள் இயற்றியது.

புறத்திரட்டு: ராவ்ஸாஹேப் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் பதிப்பித்தது.

மாம்பழக் கவிச்சிங்க நாவலர் சரிதம்: ஸ்ரீமான் சி. கோ. நாராயணசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

முக்கிய அரசியல்-திட்டங்கள்: ஆசிரியர்: ந. ரா. சுப்பையர், எம்.ஏ., எல்.டி.

முள்ளங்கி

முள்ளங்கியில் சிவப்பு முள்ளங்கி, மஞ்சள் முள்ளங்கி, வெள்ளை முள்ளங்கி என மூன்று வகைகளுண்டு. நூல்கோல் (*Knol Khol*), பீட்ரூட் (*Beetroot*), டர்னிப்ஸ் (*Turnips*) முதலானவைகளும் முள்ளங்கி இனத்தைச்சேர்ந்தவைகளே. முள்ளங்கிக்கு மூலி இந்தி என்று தெலுங்கில் பெயர். இங்கிலீஷில் (*Radish*) என்று பெயர். ஹிந்தியில் முல்லி என்று பெயர். முள்ளங்கியில் சாதாரண வெள்ளை முள்ளங்கியே மிகவும் சிறந்தது. முள்ளங்கி, கிழங்கு வகைகளில் ஒன்று. கிழங்கென்றால் உலர்த்திப் பதப்படுத்தும் வள்ளிக்கிழங்கு, உருளைக்கிழங்கு போன்ற வாயுவைத் தரும் கிழங்கன்று. இது சாமானிய ஜனங்கள் உண்ணும் மலிவான கிழங்கேயாயினும் இதை நம் நாட்டு வைத்தியர்கள், மிகவும் ஆரோக்கியத்தைத் தந்து வயிற்றிலுள்ள கோளாறுகளை நீக்கும் பரிகாரி என்று சிறப்பித்திருக்கின்றனர். முள்ளங்கியில் நமது தேகத்தைப் போஷிக்கக்கூடிய அருமையான சில சத்துப் பொருள்கள் பொதிந்து கிடப்பதாகச் சில ஆயுர்வேத மேதாவிகள் கூறுகின்றனர்.

ஆயினும் நம் நாட்டு வியவசாயிகள், தம் தொழிலில் வரும்படி குன்றியுள்ள இக்காலத்தில், பயிரிடும் சிரமம் சிறிதும் பலன் பெரிதும் தரக்கூடிய முள்ளங்கியைப் பயிரிடுவார்களானால் நஷ்டமடைய மாட்டார்கள். இதற்கு முதலும் அதிகம் வேண்டியதில்லை. சில வருஷங்களுக்கு முன் திருப்பாச்சூர் கிராமத்திலும், காஞ்சிபுரத்திலும், பூவிருந்தமல்லியிலும் இதைப் பயிரிட்டு வந்தனர். இப்பொழுதோ சென்னையை அடுத்த பிரதேசங்களிலுள்ள கிராமங்களிலும், தேனாம்பேட்டை, ஆழ்வார்பேட்டை, கோடம்பாக்கம், திருவொற்றியூர் முதலான இடங்களிலும் விசேஷமாகப் பயிரிட்டு வருகின்றனர்.

இதனைக் கோடைக்காலத்தில் நன்செய் புன்செய் நிலங்களிலும் பயிரிடுகின்றனர். கார்த்திகை மார்கழி மாதங்களிலும் இப்பயிருக்குப் புழுதிக் காலில் புழுதி உழவு உழுவார்கள். அப்புழுதி உழவிலுள்ள கட்டிகளை உடைத்துப் புல்பூண்டுகளைக் களைந்து விட்டுச் சாம்பல் எருவைக்கொட்டித் திரும்பவும் புழுதி எழத் தளர உழுவார்கள். பிறகு போதை என்னும் எழுசால் ஓட்டுவார்கள். அப்புறம் காலடித்துப் பெருங்கால்களாகவும் சிறுகால்களாகவும் மண் வெட்டிக்கொண்டு இழுத்து அணைப்பார்கள். அதன் பின்பு எழிவாங்கி, கிணற்று ஜலத்தை இறைத்துத் தண்ணீர் பாய்ச்சுவார்கள். ஒவ்வொரு ஜாண் விட்டு ஒவ்வொரு விதையாக நடுவார்கள். எக்கர் ஒன்றுக்கு நான்கு ஆழாக்கு விதை பிடிக்கும். விதை சிவந்த நிறமுடைய

தாகவும் கடுகினும் கொஞ்சம் பெரிதாகவும் இருக்கும். இவ்வாறு நட்டபின்பு நான்கு தினங்களுக்கு ஒரு முறை கிணற்று நீரை இறைத்துக்கொண்டு வருவார்கள். பதினைந்து தினங்கள் ஆன பின் புல் பூண்டுகளைக் களைந்துவிட்டு மண்ணைப்புரட்டி ஆட்டெரு, குப்பையெரு, முதலான சத்துள்ள எருக்களைப் போட்டுக் கலப்பார்கள். மறுபடியும் நான்கு நாட்களுக்கு ஒருதரம் தண்ணீர் இறைப்பார்கள். ஒரு மாதமான பின் முள்ளங்கிச் செடிகளின் கீழ்க் கிழங்குகள் வளர்ந்து பிடுங்கப் பக்குவமாகும். ஒரு மாதமுதல் ஐம்பது நாட்களுக்குள் எல்லாக் கிழங்குகளையும் தோட்டப்பயிராகவே பயிரிடுகின்றனர்.

முள்ளங்கியின் தழைகளைக் கால்நடைகளுக்குத் தீனியாகப் போடுகின்றனர். நம் நாட்டு மக்கள் தக்க பதார்த்தமாக அதை உபயோகிக்கின்றனர். நகர சம்பந்தமாயுள்ள கிராமங்களிலும் தோட்டங்களிலும் பயிரிட்டால் சந்தைகளில் விற்பனை செய்து நல்ல ஊதியம் பெறலாம். நம் நாட்டு வியவசாயிகள் எந்தப் பயிரையும் ஊக்கத்துடன் உழைத்துச் சாகுபடி செய்யும் திறனைப் பெற்றால் நம் தேசம் மேனாட்டைவிட மேன்மை அடையும். காலமழை குன்றியுள்ள சமயங்களில் கால அளவு சிறிதேயானாலும், கஷ்டம் கொஞ்சமும் பலன் அதிகமும் தரக்கூடிய பயிர்களைப் பயிரிட்டுக்கொண்டு வரவேண்டும். தேசமுன்னேற்றத்திற்கு இதுவும் ஒரு வழியாகும்.

நமது இந்தியப் பெண்மணிகள் முள்ளங்கியை மாங்காய்த்திருகலில் திருகி, காரம், காயம், உப்பு, மஞ்சள், வெங்காயம், கடுகு, நல்லெண்ணெய் முதலியன இட்டுத் தாளிதஞ் செய்து, பிட்டு (துவட்டல்) செய்வார்கள். பொரியலும் செய்வார்கள். பருப்புடன் சேர்த்துச் சாம்பார் வைப்பார்கள்; முள்ளங்கி குடல்வாயு என்னும் நோயைப் போக்கவல்லது. முள்ளங்கி குளிர்ச்சி செய்வதால் அது குளிர்ச்சியைத்தரும் பண்டம் என நினைப்பது தவறு. முள்ளங்கியின் சாற்றையேனும் முள்ளங்கியையேனும் உபயோகப்படுத்தி வந்தால் இரத்த விருத்தியும் தண்மையும் ஏற்படும். நீர்ப்பையிலுள்ள நீரைப்பிரிக்கும்.

முள்ளங்கி ஸ்பிரிட்ஸ் ஈதர், நைட்ரஸ் என்னும் ஆங்கில மருந்துக்குச் சமமாக வேலைசெய்யக்கூடியது. மதுமேக நோயுள்ளவர்களுக்கு மிகவும் உபயோகமானது. முள்ளங்கியைத் திருகி நிழலில் உலர்த்தி நெய், கற்கண்டு, தேன் இவை சேர்த்து லேகியம் செய்து மதுமேகத்திற்குக் கொடுப்பதுண்டு. மேலும் முள்ளங்கி, வாதம், கரப்பான், வயிற்றில் எரிச்சல், இருமல், கபம், தலைவலி, நீரேற்றம், பல்நோய், குன்மம், சுவாசம், மூலக்கடுப்பு இவைகளைப் போக்கும்.

மஞ்சள் முள்ளங்கியை (*Carrot*) உபயோகப்படுத்தினால் இரத்த விருத்தியை அதிகப்படுத்தும். மகம்மதியர் இதனுடன் வாதுமையைச் சேர்த்து நன்றாக அரைத்து ஹல்வா செய்து உண்பார்கள். இது தேகத்திற்கு வலிவைத் தர வல்லது.

முள்ளங்கியின் வேர் இருதயத்திற்குச் சுறுசுறுப்பை உண்டு பண்ணும். உஷ்ணத்தைத் தணிக்கும்; பசியை மிகைப்படுத்தும். நீர்ப்பையில் வேலை

செய்து நீரை இறங்கச்செய்யும். இதன் விதையைக் கியாழமிட்டுச் சாப்பிட்டு வந்தால் குடல்வாதம் நீங்கும். அதித விதை சேருமாகில் வாந்தியாகும். விதையைத் தூள் செய்து காலை மாலை ஒரு சிட்டிக்கை சாப்பிட்டுவந்தால் தாது விருத்தியாகும். யுனானி வைத்தியர்கள் இதன் விதையையும் கிழங்கையும் அதிகமாக உபயோகப் படுத்துகின்றனர்.

வாதங்காப்பான் வயிற்றெரிவு சூலை குடல்
வாதங் காசம் ஐயம் வன்றலை நோய்—மோதுநீர்க்
கோவை பன்னோய் சிலந்தி குன்மம் இரைப்புக் கடுப்பங்
காவுமுள்ளங்கிக் கந்தத்தால்.

ஸி. எஸ். ஜகதீசசுந்தரம் பிள்ளை.

கீதா பாஷியங்கள்

இயற்கையை வேண்டியவாறெல்லாம் வர்ணிக்கலாம். அவரவர் இயல்புக்கு ஏற்றவாறு வர்ணனைகளும் மாறுபடும். பௌதிக சாஸ்திரி, கவி, சிற்பி, தத்துவஞானி, ஆத்மஞானி முதலாயினோர் தத்தம் பான்மைக்கு ஏற்ப அதை விளக்குவர். ஒவ்வொருவருடைய விளக்கமும் ஒவ்வொரு விதமாயிருப்பினும் அவர்கள் எல்லோரும் உண்மையை ஓதுபவரே ஆகின்றனர். அவ்வாறே மெய்ப்பொருளும் தாம் தாம் கண்ட காட்சிக்கு ஏற்ப எண்ணிறந்தவாறு அறிஞரால் இயம்பப்படுகிறது. மெய்ப்பொருளை விளக்கும் நூல் ஒன்றுக்கு நானாவித விரிவுரைகள் உண்டாவதற்குக் காரணம் அதுவே. இப்போது உலகில் நாம் காணும் சாஸ்திரங்களில் அதிகப்படி விரிவுரைகளை உடைத்தாயிருப்பது பகவத்கீதை. பூர்வகாலந்தொட்டு இந்நாள் பரியந்தம் தோன்றியுள்ள ஆசாரியர்கள் அனைவரும் அவரவர் சம்பிரதாயத்துக்கு ஏற்ப இதற்குப் பாஷியங்கள் எழுதியிருக்கின்றனர். தாம் விரிவுரை எழுத ஆரம்பித்தபோது பகவத்கீதைக்குச் சுமார் நூற்றைம்பது வியாக்கியானங்கள் இருந்ததாகச் சங்கரர் சொல்கின்றார். அவருக்குப் பின் தோன்றிய பாஷியங்களும் பல உள. பழைய பாஷியங்களுள் இந்நாள் பரியந்தம் பிரசித்தி பெற்றிருப்பவை மிகச் சில. அவைகளுள் சங்கரர், ராமானுஜர், மத்வர், ஸ்ரீதரர், மதுசூதன சரஸ்வதி ஆகிய ஐவர்களின் பாஷியங்கள் மிக முக்கியமானவை. இக்காலத்து விரிவுரையாளர்களில் திலகர், விவேகானந்த சுவாமிகள், அரவிந்த கோஷ் ஆகிய மூவரை முக்கியமாகக் குறிப்பிடலாம். 'கீதாரகசியம்' என்பது திலகர் பெருமானால் எழுதப்பட்டது. விவேகானந்த சுவாமிகள் கீதாபாஷியம் என்கிற முறையில் எதையும் எழுதவில்லையெனினும் தமது உபன்யாசங்களெல்லாம் கீதைக்கு வியாக்கியானங்கள் என்று பகர்ந்தார். கர்மயோகம், ராஜயோகம், பக்தியோகம், அவர் இயற்றிய ஞானயோகம் ஆகியவைகளைக் கீதையோடு இணைத்துப் படிப்பார்களானால் விவேகானந்தர் அதற்கு எவ்வாறு வியாக்கியானம் செய்கிறார் என்பது விளங்கும். அரவிந்த கோஷ் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியிருக்கும் கீதா வியாக்கியானமும் ஓர் ஒப்பற்ற நூலாகும்.

பகவத்கீதைக்கு ஏற்பட்டுள்ள இத்தனை பாஷியங்களுள் எதைப் படிப்பது எதை விலக்குவது என்கிற ஒரு பெரிய ஐயம் ஏற்படக்கூடும். ஆனால் யாராலும் புறக்கணிக்க முடியாத பெரிய பாஷியம் ஒன்று உண்டு. அதுவே ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய வாழ்க்கை. தாம் அனுஷ்டித்துக் காட்டாத எதையும் அவர் கீதையில் சொல்லவில்லை. அவதார புருஷர்களுக்கு ஏற்பட்ட ஒரு தனிமகிமை அது. அவர்களுடைய சொற்களைவிடச் செய்கைகளே ஓயாத போதனைகளாகின்றன. ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய வாழ்க்கையை அறிய வல்லவரே பகவத் கீதையையும் அதன்மூலம் வேதாந்த சாரத்தையும் அறிய முடியும். பிள்ளைப் பருவத்தில் பிருந்தாவன லீலையில் அவர் காட்டிய பக்தி பரவச நிலையும், முதுமையில் அவர் ஓயாதுபுரிந்த சமுதாயசேவையும், அவர்மாட்டு யாண்டும் மிளிர்ந்த யோகவன்மையும் ஞானநெறியும் ஒன்று சேர்ந்து கீதா தத்துவமே வடிவெடுத்து வந்தாலென்ன விளங்குகின்றன. கண்ணபிரானது வாழ்க்கையும் போதனையும் ஒன்றையொன்று விளக்குவது மன்றி மயக்கத்தில் மூழ்கிக் கிடக்கும் மாந்தர்க்குப் போராற்றலையும் பேரன்பையும் பேரறிவையும் ஊட்ட வல்லவைகளாகின்றன.

—ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்.

தமிழில் கீதைகள்

தமிழில் பகவத்கீதையை முன்பு இருவர் செய்யுள் நடையில் மொழி பெயர்த்திருக்கின்றனர். ஒன்று விருத்தங்களாகவும் ஒன்று வெண்பாக்களாகவும் அமைந்தன. கீதாஸாரத் தாலாட்டு என்ற சிறு நூலொன்று தமிழ் நாட்டில் வழங்கிவருகிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளராக விளங்கிவரும் மகாவித்வான் பாஷாகவிசேகரர் ஸ்ரீமான் ரா. ராகவையங்காரவர்கள் தாழிசைகளாகக் கீதையை மொழிபெயர்த்திருக்கின்றார்.

ஹென்ரி காவென்டிஷ்

காவென்டிஷின் வாழ்க்கையிலே விஞ்ஞானம் சர்வாதிகாரம் பெற்றிருந்தது. அவர் ஒரு விஞ்ஞானப் பித்தர். அவரைப் பற்றிச் சொல்லுகிற விஷயங்களில் சில நம்பமுடியாதபடி அவ்வளவு விசித்திரமாயிருக்கின்றன. வில்ஸன் என்பவர் அவருடைய ஜீவசரித்திரம் ஒன்று எழுதியிருக்கிறார். அதிலே காவன்டிஷின் சகபாடிகள் முதலாயினோர் சொல்லும் செய்திகளைக் குறித்திருக்கிறார். விஞ்ஞானத்தைத் தவிர வேறொரு விஷயத்தையும் பற்றிக் காவென்டிஷ் பேசுவதே இல்லையாம். அவருடைய முன்னோர்களில் பலர் அரசியல் விஷயங்களிலும் பொது விஷயங்களிலும் ஈடுபட்டவர்கள். பொது ஜன ஊழியமும் அரசியல் தொழிலும் அவர்களுடைய பரம்பரைப் பிரவிருத்தி. அதையும் அவர் வைத்துக்கொள்ளவில்லை. பொது விஷயங்கள் ஒன்றிலும் அவருக்குச் சிறிதேனும் அக்கரை இல்லை. அவர் நல்ல பணக்காரராயிருந்தார். ஆனபோதிலும், பணவிஷயத்திலும் அவருக்குத் துளி கூடச் சிரத்தையில்லை. ஒரு சமயம் அவருடைய பாங்கில் எண்பதினாயிரம் பவுன் வட்டியில்லாமல் கட்டிக் கிடந்தது. அவருடைய பாங்கு

முதலாளிக்கு அது தாங்கவில்லை. ஆதலால், அதில் ஒரு பாகத்தையாவது எடுத்து, லாபம் வரக்கூடிய பங்குகளாக மாற்றிக் கொடுக்கவேண்டு மென்று தீர்மானித்துக் காவென்டிஷினிடம் பேசப்போனர். பாங்கு முதலாளியைக் கண்டதும் காவென்டிஷுக்குக் கோபம் வந்துவிட்டது. "இங்கே ஏன் வந்தீர்?" என்றார். முதலாளி தாம் வந்த விஷயத்தைச் சொன்னர். "உம்முடைய பாங்கில் பணம் கிடப்பது உமக்குத் தொந்தரவா யிருந்தால், அதை வேறொரு பாங்குக்கு மாற்றிவிடத் தயார். என்னைப்போட்டு என் பிராணனை வாங்குகிறீர்?—நான் இப்பொழுது என்ன செய்யவேண்டும் என்கிறீர்?" என்றார் காவென்டிஷ். முதலாளி விழித்தார். "நாற்பதி னயிரம் பவுனை எதிலாவது போட்டுத் தொலைக்க வேண்டுமோ? அவ்வளவு தானே. உம்முடைய இஷ்டம் போல் எங்கே வேண்டுமானாலும் போட்டுத் தொலையும். என்னிடம் வந்து உயிரை வாங்காதேயும். இனிமேல் வந்தீரானல் உம்முடைய பாங்கைவிட்டுப் பணத்தை மாற்றிவிடுவேன்" என்று பயமுறுத்தினர் காவென்டிஷ்!

அன்றன்றைக்கு என்ன செய்யவேண்டும் என்ற யோசனையே அவருக்கு அவசியமில்லை. முன்னல் என்ன செய்தாரோ, அதேதான் பின்னலும்; ஒரு நாளைப்போலே தான் மறுநாளும். ஒவ்வொரு நாளும் ஒரே வேளையில் உலவக் கிளம்புவார். நடுரோட்டில்தான் நடப்பார்—ரோட்டு ஓரமாகப் போட்டிருக்கும் நடைபாதையில் நடந்தால், யாராவது தெரிந்தவர் கள் வந்துவிடின் அவர்களோடு பேசவேண்டியிருக்குமே என்று பயந்து. வருஷத்துக்கு ஒரு நாள் அவருடைய தையற்காரன் சட்டை தைத்துக் கொண்டுவந்து கொடுப்பான். முந்தின வருஷத்துச் சட்டையைப் பார்த்தால் அதைப் பார்க்க வேண்டியதில்லை. அதே அச்சாயிருக்கும். வேறுமாதிரி அவன் தைக்கக்கூடாது. அவர் ஓர் ஏகாந்தவாஸி. ஸ்திரீத் துவேஷியும் கூட. அவர் வீட்டு வேலைக்காரிகள் ஒருவரும் அவர் கண்ணில் படக் கூடாது. பட்டால் வேலை போய்விடும். அவருடைய வீட்டுக்காரியங்களை நடத்திவந்தவளோடு கூட வாய்ப்பேச்சு ஒன்றும் கிடையாது. எல்லாம் எழுத்து மூலமாகத்தான்!

பே. நா. அ.

பாரதியார் தினம்

செப்டம்பர் ௴ 11-ஆம் தேதி தமிழ்நாடெங்கும், காலஞ்சென்ற தேசியகவி ஸி. சுப்பிரமணிய பாரதியாரின் திருநாள் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. வாழ்க பாரதி நாமம், வாழ்க வாழ்கவே!

இனிய வசன நூல்கள்

ஸ்ரீ மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் எழுதிவரும் வசனத் தொகுதிகளை நீங்கள் படித்ததுண்டா? கீழே உள்ள மூன்று புஸ்தகங்கள் நூதனமாக வெளிவந்திருக்கின்றன.

நல்லுரைக் கோவை—முதற்பாகம்

1. தருமம் தலைகாக்கும், 2. வன்றெண்டர், 3. அரியிலூர், 4. பூண்டி அரங்கநாத முதலியார், 5. பண்டைக்காலத்துப் பள்ளிக்கூடங்கள், 6. ஆடல் பாடல், 7. 'அப்படிச் சொல்லலாமா?' 8. பொன்காத்த கிழவி என்னும் அரிய விஷயங்கள் அடங்கியது.

நல்லுரைக் கோவை—இரண்டாம் பாகம்

1. எனது நோக்கம், 2. உடையார்பாளையம், 3. தமிழ்நாட்டுவணிகர், 4. தமிழ்வளர்ச்சி, 5. பெரிய வைத்தியநாதையர், 6. கலைகள், 7. நிலவில் மலர்ந்த முல்லை, 8. இராவுத்தர், 9. ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதர், 10. குமர குருபரர், 11. முத்துசாமி ஐயர் பழமைபாராட்டியது, 12. தொண்டைமான் சத்திரம், 13. தமிழ்நாட்டுப் பெண்பாலார், 14. ராஜவைத்தியம் என்பவை அடங்கியது.

நல்லுரைக்கோவை—மூன்றும் பாகம், 15 விஷயங்கள் அடங்கியது

ஒவ்வோரு பாகத்தின் விலை அணு **12.**

தியாகராஜ விலாசம்—திருவல்லிக்கேணி

உங்கள் ஊர் தியேட்டரில் விரைவில்
வெளிவரப் போகிறது

மதுரை வீரன்

(தமிழ்ப் படம்)

டைரக்டர்:
பி. வி. ராவ்

ஸ்டுடியோ:
பம்பாய்
வாடியா
மூவிடோன்



For Booking & Territorial Rights:

The Raju Films Ltd.,

81, Poonamallee High Road,

Kilpauk, Madras.

Telephone: 2781.

Telegrams: 'FILMSRAJU'

கிருஷ்ணன் தூது

ஓர் மஹத்தான
புராணப்
படமிது

போன்: 86006.

திருக்கோகர்ணம்
டி. என். மாணிக்கம்
அற்புதமான கச்சேரி செய்கிறார்

தயாராகின்றன!

•

இலங்கை அழகி
மிஸ் பேரைராவின்
அற்புத நடனம் காணச் சிறந்தது

தென்னாட்டில் புகழ்பெற்ற
நடிகமணிகள் பலரை இப்
படங்களில் சந்திக்கலாம்

***

டைரக்ஷன்:
ஆர். பிரகாசம்

•

ஸ்டூடியோ:
எம். பி. பி. ஸி.

விவரங்களுக்கு:
ராஜகோபால் டாக்கீஸ்
64, லாயிட்ஸ் ரோடு
சென்னை

நவீன தெனாலிராமன்

ஓர் சிறந்த
ஹாஸ்யப்
படமிது

தந்தி: THOOTHU

வெளிவந்துவிட்டது ! வெளிவந்துவிட்டது !!

துர்க்கேச நந்தினி

பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாயர்

முதல் முதலாக வங்காளியில் எழுதிய நவீனம்

ஸ்ரீமான் கு. ப. ராஜகோபாலன், பி. ஏ.,

அழகாகத் தமிழில் மொழிபெயர்த்தது.

விலை ரூ. 1 4 0

கிடைக்குமிடம்:

அல்லயன்ஸ் கம்பெனி - மயிலாப்பூர், சென்னை

சந்தா நேயர்களுக்கு

ஸ்ரீமான் என். ஆர். வெங்கட ராவ், பி.ஏ., எல்.டி.
(142-A, R. S. Puram, Coimbatore)

இவரை ஜூலை மாதமுதல் 'கலைமகள்' கோயம்புத்தூர்ப் பிரதிநிதியாக நியமித்திருக்கிறோம். கலைமகள் சந்தா பாக்கியை வசூல் செய்யவும் புதிய சந்தாதார்களைச் சேர்க்கவும் அவர்களுக்கு ரசீ கொடுக்கவும் இவருக்கு உரிமை அளித்திருக்கிறோம்.

மானேஜர், கலைமகள், மயிலாப்பூர், சென்னை.

தயைசெய்து உங்கள்

சந்தாப் பணத்தை

உடனே அனுப்பிவிடுங்கள்

மானேஜர், கலைமகள்—மயிலாப்பூர்

பண்டைத் தமிழ் எழுத்துக்கள்

தி. நா. சுப்பிரமணியன் எழுதியது

சென்னைச் சர்வகலாசாலைச் சரித்திரப் பேராசிரியர் ஸ்ரீமான் க. அ. நீலகண்ட சாஸ்திரி அவர்களின் முன்னுரையுடன் கூடியது.

மிக அரிய ஆராய்ச்சி நூல்

தமிழில் இதுவரையில் இத்தகைய புத்தகம் வெளிவந்ததேயில்லை

விலை ரூ. 1 8 0

தபாற்கூலி வேறு

கலைமகள் சித்திரப் படங்கள்

ஆரம்பப் பாடசாலைகளுக்கு இன்றியமையாதவை

பத்துப் படங்கள் தயாராக இருக்கின்றன

படம் ஒன்றின் விலை 0-0-9 பை. ஒரு செட் (10-படங்கள்) அணா 6. தபால் செலவு 0-2-9. (வேண்டுவோர் 0-8-9க்குத் தபால் தலைகள் அனுப்புக)

:: மானேஜர், கலைமகள்—மயிலாப்பூர், சென்னை ::

முருகன் ஓர் உழவன்

ஸ்ரீமான் கே. எஸ். வேங்கடரமணி எழுதியது

ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி

தமிழில் மொழிபெயர்த்தது

கிராமமுன்னேற்றத்தையும் சமூகச் சீர்திருத்தத்தையும் அழகாகத் தெளிவுபடுத்தும் இனிய நாவல்

விலை ரூ. 1—8—0

கலைமகள் சந்தாதார்க்கு மாத்திரம் ரூ. 1—2—0

சியாமளா தண்டகம்

தமிழ் மொழிபெயர்ப்புடன்—அருமையான பாராயண நூல்

விலை அணா ஒன்றே

கலைமகள் சந்தாதார்க்குப் பன்னிரண்டு பிரதி எட்டே அணா

ஹேமலதா

இரு சகோதரிகள் இயற்றிய நாவல்

விலை ரூ. 1—4—0

கலைமகள் சந்தாதார்க்கு மாத்திரம் ரூ. 1—0—0

:: மானேஜர், கலைமகள், மயிலாப்பூர், சென்னை :

குறைந்த விலை! குறைந்த விலை!

சில பிரதிகளே உள்ளன

கலைமகள்

முதல் எட்டுத் தொகுதிகளையும்
குறைந்த விலைக்குக் கொடுப்பதாக
நிச்சயித்திருக்கிறோம்

விலை ரூ. 2 6 0
குறைந்த விலை ரூ. 2 0 0

எட்டுத் தொகுதிகளும் ஒருங்கே வாங்கு
பவர்களுக்கு ரூ. 15க்குக் கொடுக்கப்படும்

முன்பணம் அனுப்புக

'கலைமகள்' 14-ம் தொகுதி
ஆரம்பம், ஆடி ௴ (July, 1938)

கலைமகள், வருட சந்தா (தபால் செலவுடன்)
இந்தியா, ஸிலோன் ரு. 4-0-0
பர்மா ரு. 4-8-0
பினங், சிங்கப்பூர், நேடால் ரு. 6-0-0
தனி சஞ்சிகை அணு 6 அல்லது 36 சதம்

:: மானேஜர், கலைமகள், மயிலாப்பூர், சென்னை ::

ஸ்ரீராமஜயம்

இராமாயண சூடாமணியென்னும் சிறந்ததோர் அரிய செந்தமிழ்க்காவியம்

இது இராமாயணத்தைச் சுருக்கமாகக் காவியமூலமாகவே கற்றவர்களேயன்றி மற்றவர்களும் தாமே எளிதில் உணர்ந்து கொள்வதன் பொருட்டும், இலக்கியப் பயிற்சி செய்யத்தொடங்குவோர் விரைவில் தேர்ச்சியடைவதற்கு இதுவொரு சிறந்த கருவியாயிருக்கும் பொருட்டும், பிரசங்கிகள் ஆரம்பித்துச் சுமார் மூன்று மாதத்திற்குள் பட்டாபிஷேகஞ் செய்து முடிக்கும் பொருட்டும், இசைக்கருவிகளோடும் கதா காலக்ஷேபஞ் செய்பவர்கள் இதன் ஒவ்வொருகாண்டத்திலுமுள்ள பல படலங்களில் ஒவ்வொரு படலத்தையும் அதனதன் அளவுக்குத் தக்கபடி குறைந்தது ஒரு மணி நேரமுதல் 4 மணி நேரத்திற்குள் முடிக்கும் பொருட்டும், சென்னைபுரி வித்வான் விஷ்ணுபாத சேகரர் அவர்களால், சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் என்னும் அழகுகளோடும், சொற்சுவை, பொருட்சுவை முதலிய பல சுவைகளோடும், ஆங்காங்கு வியக்கத்தக்க கற்பனாலங்காரங்களோடும், தெள்ளிய இனிய செந்தமிழ் நடையிலமைந்த விருத்தப்பாக்களால் இதுவரையி[ல்] சுந்தரகாண்டம் வரையும் ஐந்து காண்டங்கள் முடிக்கப்பெற்றிருக்கின்ற[ன.] ஆறாவதாகிய யுத்த காண்டமும் இயற்ற ஆரம்பித்து நடைபெற்று வருகின்றது. இவற்றில் ஆன்றோர் அனுஷ்டானத்தின்படி மங்களகரத்தின் பொருட்டு முதலில் இயற்றப்பெற்ற சுந்தர காண்டமாத்திரம் ஒரு சிறந்த தமிழாசிரியர் அவர்களால் இயற்றப்பெற்ற விசேடக் குறிப்புரையுடனும் முகவுரையுடனும் தற்காலம் அச்சிட்டு அழகிய அட்டை பயிண்டுசெய்து வெளியிடப்பட்டிருப்பதோடு சிறந்த தென்மொழி வடமொழிப்புலவர்கள் முதலிய சுமார் ஆயிரம் பேர்கள் கூடிய பெருஞ்சபையில் அரங்கேற்றஞ் செய்யப்பெற்றும் 'சுதேசமித்திரன்' முதலிய பத்திரிகைகளின் ஆசிரியர்களால் சிறந்த மதிப்புரைகள் எழுதப்பெற்றுமிருக்கின்றது. அன்றியும் இந்த இராமாயண சூடாமணியின் சுந்தர காண்டப் புத்தகமானது துயரமுள்ளவர்கள் அத்துயரினின்றும் நீங்கிச் சுகப்படுவதன் பொருட்டும் துயரமில்லாதவர்கள் விசேட நன்மையை யடையும் பொருட்டும் தினந்தோறும் சுருக்கமாகப் பாராயணம் பண்ணுவதற்கும் ஏற்றதாயிருப்பதால், இது ஆஸ்திகராயுள்ள ஒவ்வொருவரிடத்திலும் அவசியம் இருக்கக்கூடியதாகும்.

இதற்குத் தற்காலம் பலர் வேண்டுகோளின்படி 12 அணா விலையே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் முகவுரை, குறிப்புரை முதலியவைகளோடு சுமார் 200 பக்கங்களை யுடையது. இது வேண்டுவோர், சென்னை பார்க்டவுன் போஸ்டு, தேவராஜ முதலி வீதியில் ஜவுளி வியாபாரஞ் செய்யும் ஜா. பசுபதி நாயகர் அண்டு சன்ஸ் அவர்களிடம் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம். வெளியூர்களிலுள்ளவர்கள் அடியிற் கண்ட ரிஜிஸ்டர் போஸ்ட் பார்சல் சார்ஜோடு புத்தகக் கிரயத்தையுஞ் சேர்த்து மணியார்டர் செய்தால் உடனே அவர்களுக்கு ஷை புத்தகம் அனுப்பப்படும். மேற்படி பார்சல் சார்ஜ்:—ஒரு புத்தகத்திற்கு 0—7—0; இரண்டுக்கு 0—11—0; ரெயில்வேஸ்டேஷனுள்ள ஊராருக்கு 3-புத்தக முதல் 6-புத்தகம் வரையில் அனுப்புவதற்கு 10 அணா செலவாகும்.

இங்ஙனம்:

ஆ. வீ. கன்னைய நாயுடு,

தலைமைத் தமிழாசிரியர், உயர்தரக் கல்விச்சாலை,

பச்சையப்பன் காலேஜ், சென்னை.

29-3-95

ஸ்ரீ ரவீந்த்ரநாத் டாகுர் வங்காளியில் எழுதிய

குமுதினி

ஆசிரியர் அனுமதியுடன்

ஸ்ரீமதி ரங்கநாயகி

மொழிபெயர்த்தது

ரூ. 1—8—0

இந்நூலைப் பற்றிய முக்கிய அபிப்பிராயங்கள்

தினகரன்.— * மானிட வாழ்க்கையில் ஏற்படும் பல துன்பங்களை உணர்ச்சி ததும்பும் முறையில் நாவலாசிரியர் சித்திரித்துக் காட்டியிருப்பது போற்றத்தக்கது.

* * *

தனவணிகன்.— * எளிய தமிழில், இனிய நடையில், டாகுர் அவர்களின் கதையை விளங்கவைத்த பெருமை அம்மையாரைச் சார்ந்தது.

* * *

செட்டிநாடு.— * தத்துவங்களைக்கொண்ட இக்கதையை அம்மையார் மொழிபெயர்க்கத் துணிந்தது அவர்களது மனோதைரியத்தைக் காட்டுகிறது.

* * *

தாருல் இஸ்லாம்.— * முதற் பக்கம் முதல், கடைசிப்பக்கம் வரையில் "அடுத்தது என்ன" என்று வாசகர்கள் கேட்கக் கூடிய உணர்ச்சியையும் உற்சாகத்தையும் பெருக்கிக்கொண்டே போகும் முறையிலே, இக்கதையின் போக்கு அமைக்கப்பட்டிருக்கிறது.

சுமார் 400 பக்கங்கள் — நல்ல கிளேஸ் காகிதம்

கலைமகள் சந்தாதார்க்கு மாத்திரம், ரு 1—2—0

(தபால், வி. பி. செலவு தனி)

மானேஜர், மதிராஸ் லா ஜர்னல் ஆபீஸ், மயிலாப்பூர், சென்னை.

...லாப்பூர், மெட்ராஸ் லா ஜர்னல் அச்சுக்கூடத்தில் அ... ...பட்டு, கா. நாராயணசாமி ...யர், பி.எ., பி.எல்., அவர்களால் பதிப்பிக்...

SCANNED